JL
031 m211, N0558
M96. 70.11-12
218705

செந்தமிழ்ச்
செல்வி
சிலம்பு 70 பரல்-11
சூலை 1996
வள்ளுவர் ஆண்டு 2027
ஆனி

"செந்தமிழ்ச் செல்வி"
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை
இதழாசிரியர் குழு
முனைவர் பொன் கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன் சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்
ஆசிரியர் : **இரா. முத்துக்குமாரசுவாமி**, எம்.ஏ., பி. லிப்.,

உள்ளுறை

	பக்கம்
இ. மு. சுப்பிரமணிய பிள்ளை நூற்றாண்டு விழா	401
விடுதலை இயக்கத்தில் சுப்பிரமணிய பாரதியும் சுப்புரத்தினப் பாவலரும்	405
கண்ணகியின் நிழல்	414
தமிழ் வரவு	418
தமிழ் நாகர் - ஓர் ஆய்வு	419
தமிழ்த்தூண் தாமோதரனார்	421
கலித்தொகை நாடகத்திறன்	429
மாணிக்கவாசகர் காலத்தில் ஆசீவகர்	436
நூல் மதிப்புரை	439

மானிட உடலியக்கவியல்
டாக்டர் அ. கதிரேசன், எம். டி.,
இந்நூல் தமிழில் மருத்துவ அறிவியல் செய்திகளை புரிந்துகொள்ள பெரிதும் உதவுகிறது. தசைமண்டலம், எலும்புமண்டலம் மூச்சு மண்டலம் எனப் பல மண்டலங்களைப்பற்றி அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. நமது உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நமக்கு எளிமையான முறையில் அனைவருக்கும் புரியும்படியாகக் கூறுகிறார்.
விலை ரூ. 35/-

செந்தமிழ்ச் செல்வி
தி. வ. ஆண்டு 2027 - ஆனி
சூலை - 1996
சிலம்பு - 70 பரல் - 11

218705

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை நூற்றாண்டு விழா

திக்கெலாம் புகழும் திருநெல்வேலிச் சீமையில் பிறந்து தீந்தமிழ் வளர்த்த பெரியார்களுள் ஒருவராய்த் திகழ்ந்தவர் கணியர், டாக்டர். இ.மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள். நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரே தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று நாளும் பாடுபட்டவர் இவர். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் என்ற அமைப்பினைத் தோற்றுவித்துத் தமிழ் மொழி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர்.

முறையாகத் தமிழ் பயின்று பள்ளித் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்த இ.மு.சு. அவர்கள் சீர்திருத்தப் போக்கில் ஈடுபட்டுத் தமிழ் இனத்தந்தை பெரியார் ஈ.வே. ராமசாமி நாயக்கர் அவர்களின் இயக்கத்தில் சேர்ந்தார். தந்தை பெரியார் அவர்கட்குத் தென் தமிழகத்தில் பெருந்துணையாக இருந்தவர்கள் நாஞ்சில் நாட்டுத் திருநெல்வேலிச் சைவ வேளாளர்கள் ஆவர். மேலைநாட்டு உடைகளைத் தூக்கியெறிந்துவிட்டு இடுப்பில் நான்கு முழவேட்டியும் மேலே ஒரு துண்டும் உடுத்தே எப்போதும் இ.மு.சு. காட்சியளிப்பார். பின்னால் பல்வேறு அரசுக் குழுக்களில் உறுப்பினராகிப் புகைவண்டியில் முதல் வகுப்பில் பயணம் செய்ய நேரிட்ட போதெல்லாம்கூட தம் உடையில் இவர் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. பழந்தமிழர் பாணியில் தலையில் கொண்டை போட்டுக் கொண்டாரே தவிர நாகரிகம் என்று கருதி முடியை வெட்டிக் கொள்ளவில்லை.

பள்ளி ஆசிரியப்பணியில் ஈடுபட்டிருந்த போதே தந்தை பெரியாருக்காக வான்மீகி இராமாயணத்தில் காணப்பட்ட குறைகளையெல்லாம் எடுத்துக் 'குடியரசு' இதழில் தொடர்ந்து கட்டுரைகளாக எழுதினார். பின்னர் அவை நூலாக்கம் பெற்று பல பதிப்புகள் வெளிவந்தன. தமிழ் வளர்க்கும் ஆர்வம் மேலிட, தந்தை பெரியாரிடமிருந்து மெல்ல விலகிக் கொண்டார்.

JL
D3tym 211, N05C N96.70.11-6

தமிழ் வளர்க்கும் நோக்கத்துடன் திருநெல்வேலியில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தார். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தினார். அறிவியல் துறைகளில் தமிழில் வேண்டிய பாடநூல்கள் இல்லாத குறையைப் போக்க அத்தகைய பாடநூல்களை உருவாக்க உதவும் கலைச்சொற்களைத் தமிழில் ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாகத் தொகுத்து நூலாக வெளியிட்டார். இக்கலைச்சொற்களே பின்னர் உருவான கலைச் சொல்லாக்கங்கள் அனைத்துக்கும் முன்னோடியாக இருந்ததுடன் அடிப்படையாகவும் அமைந்தன.

தமிழ் ஆட்சி மொழியாக ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் வர வேண்டுமென்பதற்காக ஆட்சி மொழிச் சொற்களை உருவாக்கினார். அப்போது அரசு இன்று போல் அன்றும் ஆங்கில வழியாகவே ஆட்சியை நடத்திக் கொண்டிருந்தது. இதற்காக ஆட்சிமொழி மாநாடுகளை மாவட்டம் தோறும் இ.மு.சு. நடத்தினார். இவருக்கு உறுதுணையாக மேலவை உறுப்பினராக இருந்த சுசபதி நாயக்கரும் கழக மேனாள் ஆட்சியாளரான தாமரைத்திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களும் இருந்தனர்.

இளமையில் நாட்டுக்காகச் சிறைசென்று துன்பப்பட்ட வ.உ. சிதம்பரனாருடன் இ.மு.சு. நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார். அவரைப் போலவே இலக்கிய நூல்கள் உருவாக்க வேண்டுமென்ற எண்ணமும் இவருக்கு ஏற்பட்டது. பள்ளி மாணவர்கட்காகச் சிறுசிறு நூல்களை எழுதினார்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கை, வரலாற்றை எழுத முற்பட்ட இ.மு.சு. அவர்கள் 'திருவள்ளுவர் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்' என்ற தலைப்பில் பத்துக்கு மேற்பட்ட அரிய நூல்களை எழுதினார். மனோன்மணியம் சுந்தரனார். வெ.ப.சுப்பிரமணிய முதலியார் போன்ற தமிழ்ப் பேரறிஞர்களின் வரலாற்றையும் அவர்கள் படைத்த நூல்களைப் பற்றிய திறனாய்வையும் நூலில் சேர்த்தார். இந்தப் பணி இ.மு.சு. வின் தமிழ்ப் பணியில் தலையாயதாகும்.

தமிழக அரசு அறநிலையத் துறையினருக்காகத் தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில்கள் அனைத்துக்கும் நேரில் சென்று அவற்றைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைச் சேர்த்து நூலாக

வெளியிடும் பணியில் ஈடுபட்டு 'நெல்லை மாவட்டக் கோயில்கள்', சென்னை மாவட்டக் கோயில்கள்' என்ற இரண்டு நூல்களையும் வெளியிட்டார்.

தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தடை ஏற்பட்ட போதெல்லாம் கிளர்ந்தெழுந்தார். இந்தி மொழி தமிழ் நாட்டில் கட்டாயப் பாடமாகத் திணிக்கப்பட்டபோது இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டார். நெல்லையில் வாழ்ந்தாலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் எப்போதும் சுற்றுப்பயணம் செய்து கொண்டேயிருப்பார்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் வழி அரிய நூல்களை அரசுப் பொருளுதவியுடன் வெளியிடும் திட்டத்தில் ஈடுபட்டு மணிவாசகப் பெருமானின் திருவாசகத்திற்குப் புத்துரை வெளியிட்டார். அது இரு தொகுதிகளாக வெளிவந்து தமிழன்பர்களை மகிழ்வித்தது.

இளமையிலேயே கணிதத்திலும் சோதிடத்திலும் இ.மு.சு. வல்லுநராக இருந்தார். பொதுவாக அனைவரும் சோதிடம் கூறுவதில் நாட்டம் செலுத்துவர். இவரோ பஞ்சாங்கம் கணிப்பதில் வல்லுநராக இருந்தார். திருநெல்வேலி சைவ வாக்கியப் பஞ்சாங்கத்தை இவர் 1920 முதல் கணிக்கத் தொடங்கினார். அது முதல் இவர் மறையும் வரை ஆண்டுதோறும் பஞ்சாங்கத்தைக் கணித்துத் தர சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1920 முதல் தொடர்ந்து வெளியிட்டு வந்தது. இவர் மறைவுக்குப் பின் இவரே முதுமைக்காலத்தில் பார்த்து ஒப்புதல் அளித்த ஆற்காடு வே. கணநாதநாயகர் கணித்துத் தர, கழகம் இன்றும் இ.மு.சு. அவர்கள் தொடங்கி வைத்த 'பஞ்சாங்கம்' வெளியிடும் பணியைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

பல்துறை வித்தகராகத் திகழ்ந்த இ.மு.சு. அவர்கள் பழகுதற்கு மிக இனியவர். பழந்தமிழ் இலக்கிய இலக்கணத்தில் ஊறியவர். தோற்றத்தில் மிக எளியவர். உண்ணும் உணவிலும் எளிமையைக் கடைப்பிடித்தவர். எப்போதும் உணர்ச்சி வசப்பட்டு ஆவேசமாகப் பேசமாட்டார். எவ்வளவு பெரிய விவாதமாக இருப்பினும் தம் கருத்தை எளிய இனிய நடையில் ஆணித்தரமாக எடுத்துக் கூறுவதில் வல்லவராகத் திகழ்ந்தவர். தமிழ் வளர்ச்சி ஒன்றையே தம் வாழ்நாள் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர்.

தாம் தோற்றுவித்த சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டிடம் வேண்டுமென்பதற்காகத் திருநெல்வேலி நகரில் ஒரு கட்டிடம் வாங்கினார். அக்கட்டிடம் அமைந்த தெருவுக்குத் 'தமிழ்ச் சங்கத் தெரு' என்ற பெயர் அமையக் காரணமாயிருந்தார். அது இன்று இடம் மாறி பாளையங்கோட்டையில் புதிய கட்டிடத்தில் பொலிவுடன் திகழ்கின்றது.

இவர்தம் மகளாரான திருமதி. சிவகாமி வேலாயுதம் சென்னைக்குக் குடியேறி சிறந்த சிவத்தொண்டையும் இனத் தொண்டையும் ஆற்றி வந்தார். சில ஆண்டுகட்கு முன் இறையடியுற்றார்.

இவர்தம் மகனாரான திருவாளர். முனைவர். இ.சு. முத்துசாமி அவர்கள் தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டமும் முனைவர் பட்டமும் பெற்று அரசுப் பணியில் சேர்ந்து பல்வேறு அரசுக் கலைக் கல்லூரிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவர் நல்ல கவிஞர். இவர்தம் கவிதைகளும் கட்டுரைகளும் நூல் வடிவில் வெளிவந்துள்ளன. ஆங்கிலத்தில் திறம்பட எழுத வல்லவர். திருவள்ளுவரின் பெருமையை எடுத்துக் கூறும் அரிய ஆங்கில நூலைப் படைத்தவர்.

இன்று இ.மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழா சென்னையிலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகிறது. வாழ்க இவர்தம் புகழ்.

போற்றுக தாய்மொழியை

- நேரிசை வெண்பா -

போற்றுக தாயன்பைப் போற்றுக தாய்மொழியைப்
போற்றுக தாய்நாட்டைப் போற்றியே - மாற்றுக
போரிடும் இவ்வுலகைப் பூசலின் புன்னுலகை
யாரொடும் சண்டை ஒழித்து.

- குடந்தை பாலு

விடுதலை இயக்கத்தில சுப்பிரமணிய பாரதியும் சுப்புரத்தினப் பாவலரும்

புதுவை. சிவ. இளங்கோ. எம்.ஏ., எம். ஃபில்.

(சிலம்பு – 70, பரல் – 10, பக். 397 தொடர்ச்சி)

5.4.1 இந்தத் தீவிரவாதச் செயல்கள் பாரதியார் குழாமில் நேரடியாகவும், மறைமுகமாகவும் நடத்தப்பட்டு வந்தன. பாரதியைப் பிடிக்க வந்த ஒரு பிரிட்டிஷ் சி.ஐடியிடம், பாரதியைப் பற்றித் தான் துப்பு சொல்வதாகக் கூறி அவரைத் தீர்த்துக் கட்டிவிடும் நோக்கத்துடன் பாரதிதாசன் அழைத்துச் சென்றது;

5.4.2 துப்பாக்கிகளை உள்வைத்துச் செய்யப்பட்ட பாரத மாதா உருவிலான மண்பொம்மைகளைப் பாரதியார் கேட்டுக் கொண்டதன்பேரில் சென்னையில் உள்ள விடுதலை மறவர்களிடம் அளிக்க, பாரதிதாசன் எடுத்துச் சென்று சென்னை அண்ணாபிள்ளைத்தெரு முனையில் இருந்த புதுச்சேரியைச் சேர்ந்த பங்களூர் க.ப. நாராயணன் செட்டியார் கடையில் சேர்ப்பித்தபோது அடையாளந் தெரியாத நபர்களுடன் பாரதிதாசன் நேரடியாகக் கை கலந்தது;[22]

(இந்நிகழ்ச்சி பற்றிப் பாரதிதாசன்,
"பாப்புனைவார் ஓர்நாளில் பாவைபல தந்துசென்னை
போயப்புலவர்க் கீயெனைப் போக்கினார் - மாப்பாவை
இட்டபெட்டியைச் சென்னைச் செட்டிக்கடை ஒன்றில் நான்
இட்டங்குக் குந்தி இருக்கையிலே "விட்டேனா
பாரடா" என்றொருவன் செட்டிமேல் பாய்கையிலே
"ஆரடா நீ" யென்று அதட்டிநான் - நீரோடைக்கு
உள்ளே விழவுதைத்தேன்", என்று குடும்பவிளக்கில் குறிப்பிடுகிறார்.)

5.4.3 பொன்னு முருகேசம் பிள்ளை வீட்டில் பாரதி, பாரதிதாசன், அரவிந்தர் ஆகியோர் பேசிக்கொண்டிருந்த பொழுது, பலகணி வழியாக ஒற்றறிந்த ஒரு பிரிட்டிஷ் காவலரைப் பாரதிதாசன் பிடித்து, வாழைத்தார் ஒன்றை வெட்டி வந்து அவர் கையில் சேர்த்து, திருட்டுக்குற்றம் சுமத்தி வழக்குப்போட்ட நிகழ்ச்சி;[23]

5.4.4 கைத்துப்பாக்கியுடன் பாரதிதாசனும் மாடசாமியும் பாரதி வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கையில், துப்பறிவோரும் அவர்களுக்குத் தகவல் தரும் மயூரேசன் என்பவரும் துரத்துவது தெரிந்து, தப்பியோடி காமாட்சியம்மன் கோவிலில் புகுந்து அதற்கு அருகிலிருந்த ஒரு வீட்டில் மாடசாமியை ஒளித்துவிட்டு, மீண்டும் கோவிலுள் நுழைய, கோவிலுக்குள்ளும் ஒற்றர்கள் துரத்த, கோவில் சுற்று மதிற்சுவரில் ஏறி தெருப்பக்கம் குதித்துப் பாரதி வீட்டிற்குச் சென்று பதுங்கிய நிகழ்ச்சி; (மறுநாள் அக்கோயில் வழியே வரும்போது பாரதிதாசனிடம் பாரதியார், "மீண்டும் இந்த உயரத்திலிருந்து உன்னால் குதிக்க முடியுமா? உனக்குள் கனன்று கொண்டிருந்த புரட்சி எண்ணம் உன் காலுக்கு வலிமையூட்டியது" என்று கூறினாராம்,[24]

நாடு தொழும் ஊழியரை
நான்காக்க ஓர்வீட்டு
மாடியினின்றே குதித்து
மான்போலும் ஓடினேன்

என்று குடும்ப விளக்கில் குறிப்பிடுகிறார் பாவேந்தர்)

5.4.5 1970 இல் நடைபெற்ற திருநெல்வேலிக் கலவரங்களால் குற்றவாளியாக்கப்பட்டு 'மாடசாமியைப் பற்றித் தகவல் தந்தால் ஆயிரம் ரூபாய் தரப்படும்' எனக் காவல்துறை அறிவித்த கவர்ச்சியான விளம்பரத்தோடு, புதுச்சேரியில் புகலிடம் புகுந்த 'மாசிலாமனத்து மாடசாமி'யையும் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்று பின்பொரு நாள் அவரைச் சைகோனுக்குத் தப்புவிக்கும் பொருட்டு மாடசாமியும் பாரதிதாசனும் முசுலீம் வேடம் புனைந்து, அப்படியும் கண்டு கொண்ட ஒற்றர்களின் பார்வையில் இருந்து மறைய, கட்டுமரத்தில் கடலுக்குள் சென்று, பின்னர் வேறு கப்பலில் அவரைத் தப்புவிக்கச் செய்த நிகழ்ச்சி;[25]

(இந்நிகழ்ச்சி பற்றி பாரதிதாசன்,

"ஆரும் அறியாமல் அன்பான நண்பரை நான்
சாரும் கடல்தாண்டிச் சைகோனில் - சேரும்வணம்
செய்யஒரு கட்டுமரம் சென்றேறினேன். கப்பல்
கையெட்டும் எல்லையை நான் காணுகையில் - எய்தும்
உளவறிந்து தீயர் சிலர் நீராவி ஓடம்
மளமளென ஓட்டிவருதல் தெளிவுபடக்
காணாத் தொலைவினிலே கட்டுமரத்தை விடென்றேன்

ஊணோ உறக்கமோ ஒன்றுமின்றிக் - கோணாமல்
நட்ட நடுக்கடலில் ஒன்றரைநாள் நான் கழித்தே
எட்டுமணி இரவில் என் வீட்டைக் - கிட்டினேன்"

என்று குறிப்பிடுகிறார் குடும்பவிளக்கில்).

5.4.6 ஆகிய இந்நிகழ்ச்சிகள் விடுதலை இயக்கத்தின் தீவிரவாதத் திசைகளிலும் பாரதியும், பாரதிதாசனும் வந்திருப்பதை ஆணித்தரமாக விளக்குகின்றன.

5.5 இந்திய விடுதலை இயக்கத்திற்குப் பாரதியாரும், பாரதிதாசனும், புதுச்சேரியும் அளித்த தீவிரவாதப் பங்களிப்பு இத்துடன் நின்றுவிடவில்லை. திருநெல்வேலி சப் கலெக்டர் ஆஷைச் சுடுவதற்கு வாஞ்சிநாதன் பயிற்சி பெற்றது புதுவையில்தான். பயிற்சி பெற்ற இடம் முத்தியால்பேட்டை கருவடிக்குப்பம் போகும் வழியில் உள்ள வெள்ளவாரி. பயிற்சி அளித்தவர்கள் வ.வே.சு. ஐயரும், என். நாகசாமி அவர்களும், பிரான்சிலிருந்து காமா அம்மையார் அனுப்பிய துப்பாக்கியை வ.வே.சு., வாஞ்சிக்கு அளிக்க அதைக் கொண்டே இந்தப் புரட்சிச்செயல் நடந்து முடிந்தது. இதேபோல இன்னும் பலரும் பயிற்சியும் ஆயுதமும் பெற்றுச் சென்றதற்குப் பல குறிப்புகள் கிடைத்துள்ளன. ஒரு நிகழ்ச்சியைப் பாரதிதாசன் குறிப்பிடும்போது "அந்தச் சமயத்தில் ஒரு வங்காள இளைஞனும் எங்களுடன் இருந்தான். அவன் அரவிந்தரின் தீவிரச் செயல்களால் ஈர்க்கப்பட்டுப் புதுச்சேரி வந்து தங்கியவன். அப்போது வங்காள ஆளுநராக இருந்த ஒரு வெள்ளையரைச் சுட்டுக் கொல்வதற்காக ஒரு துப்பாக்கியை அந்த இளைஞனுக்குக் கொடுத்துதவினேன்"[26] என்று கூறுகிறார்.

5.6 மேற்கூறிய நிகழ்ச்சிகள் மட்டுமன்றி, பிரிட்டிஷ் காவலர்கள் பாரதியைக் கைது செய்யக் காரில் வந்து புதுவை எல்லையான கோட்டக்குப்பம் அருகே நிற்க, அவரைக் கைது செய்யும் முயற்சிக்குத் தடையாக பிரெஞ்சிந்திய அரசே கலவை செட்டியார் இல்லத்தில் பாரதியை வைத்துக் காவலுக்கு நிற்க, அதையும் நம்பாமல் பாரதியையும் மற்றவர்களையும் படகில் ஏற்றிக் கடலிலேயே ஒன்றரை நாட்கள் வைத்திருந்துப் பின் கரையேற வைத்தார் பாரதிதாசன் என்று குறிப்பிடும் நிகழ்ச்சிகள் எல்லாம் பாரதியும், பாரதிதாசனும் விடுதலை இயக்க வெற்றிக்காக எதற்கும் துணிந்து நின்றவர்கள் என்பதைத்தான் காட்டுகின்றன.

தேசியகவி பாரதிதாசன்

6.1 விடுதலை இயக்கப் போராட்டங்களில் பாரதியார், பாரதிதாசன் ஆகிய இருவரின் நேரடிப்பங்கு இவ்வளவிருக்க, பாரதியாரை தேசியகவி என்றும், பாரதிதாசனைச் சீர்திருத்தக்கவி என்றும் சொல்வதோடு நின்றுவிட்டால் அவர்களைப் பற்றிய எந்த ஆய்வும் முழுமையடையாது. உண்மையில் இப்போது கிடைத்திருக்கும் பல புதிய செய்திகளை வைத்துப் பார்த்தோமானால் உணர்ச்சி பொங்கும் விடுதலைப் பாடல்கள் தந்ததிலும், அதை அதிக அளவில் தந்ததிலும் பாரதிதாசனும் தேசியகவி என்ற உண்மையே வெளிப்படும். விடுதலை உணர்வுப் பாடல்களிலும் பல இடங்களில் குருவை மிஞ்சிய சீடர் அவர். பாரதி என்னும் பேரொளியை நெஞ்சில் நிறைத்திருந்ததனால் பாரதிதாசனின் பாடல்களில் பாரதியின் தாக்கங்களும், பல பாடல்கள் பாரதி பாடிய பாடல்களைப் போன்றுமிருப்பதைக் காண முடிகிறது.

6.2 பாரதியின் பாடல்கள் 'ஸ்வதேச கீதங்கள்' என்ற தலைப்பில் சென்னையில் இரு வெளியீடுகளும் புதுவையில் ஒன்றுமாக வெளியானதை முன்பே அறிவோம். 'இந்தியா', 'விஜயா' போன்ற இதழ்களும், சக்ரவர்த்தினி, சூரியோதயம் ஆகிய இதழ்களும் விடுதலை இயக்கச் செய்திகளையும், வீறுகொள்ள வைக்கும் பாடல்களையும் தாங்கி வெளிவந்தன. இதன் பின்னர் பாரதி எழுதிய வேறு தலைப்புகளாலான பல பாடல்களிலும்கூட விடுதலை வேகம் மிகுந்திருப்பதைக் காணலாம். அவருடைய பாஞ்சாலி சபதம் பாரதப்போரின் பாங்கான பாடலல்ல. இந்தியத் தாயின் கூக்குரலே அது. பாரதி பாடல்களில் உள்ள வீராவேசக் கருத்துக்களையும் உணர்வு பொங்கும் வரிகளையும் எடுத்துரைப்பின் அது மிகவும் விரியும். அன்றியும் அது அனைவரும் அறிந்த செய்தியென்பதால் அதை விடுத்துப் புதிய செய்திக்குள் நுழைவோம்.

6.3 காந்தியடிகள் காங்கிரசுக்குள் பங்கேற்று இயக்க வேகத்தைத் தீவிரப் படுத்திக் கொண்டிருந்த வேளையில் பாரதியார் காலமானார். இதுபற்றி ஒரு கருத்து. "காந்தியடிகள் இயக்கம் தீவிரம் அடைந்து செயல்புரியத் தொடங்கியபோது, சமயத்துக்கேற்ற புதுப்புதுப் பாடல்களை இயற்றித்தர பாரதியார் நம்மிடையே இல்லாது போனார்" என்று நாமக்கல் கவிஞர் குறிப்பிட்டு, அந்த இடைவெளியைத் தமது பாடல்கள் தீர்த்து வைத்தன என்று 'விடுதலை இயக்கமும் பாட்டும்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்[27]. ஆனால் உண்மை என்னவெனில் விடுதலை இயக்கப் பாவலராக விளங்கிய பாரதிக்குப் பின் அவ்விடத்தை நிரப்பியவர் பாரதிதாசன்தான். அவர் எழுதிக் குவித்த விடுதலை இயக்கப் பாடல்களின் எண்ணிக்கையைப் பார்த்தோமானாலும் வேறு, எந்த இந்தியக் கவிஞரை விடவும் பாரதிதாசனே அதிக அளவில் விடுதலை இயக்கத்திற்குப் பாடியிருக்கிறார் என்ற உண்மை தெரியவரும். ஆனால் இப்போது தெரிய வரும் இந்த உண்மைகள் அப்போது தெரியாததற்குக் காரணம் பாரதிதாசன் எழுதிய பல பாடல்கள் கொண்ட வெளியீடுகள் கிடைக்காமற் போனதுதான்.

6.4 அப்படிப் பல நூல்கள் எழுதப்பட்டதாகவும், அதில் சில நூல்கள் மட்டுமே வெளியானதாகவும் பாரதிதாசனின் முற்காலப் படைப்புகள் பலவற்றைப் பதிப்பித்த காசி லட்சுமணப்பிரசாத் 1930 இல் வெளியான 'கதர் இராட்டினப் பாட்டு' வெளியீட்டின் முன்னுரையில் தெரிவித்துள்ளார். மேலும் அவர் பாரதிதாசன் இயற்றிய தேச விடுதலைப் பாடல்களுள் அச்சானவை மூன்று நூல்களே என்றும், அவை சிறுவர் சிறுமியர் தேசிய கீதம், தொண்டர் படைப்பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு ஆகியவையே என்றும் தெரிவிக்கிறார். இந்த நூல்களில் கதர் இராட்டினப் பாட்டு மட்டுமே இதுவரை கிடைத்து வந்தது. ஏனைய இரு நூல்களும் இது நாள்வரை கிடைக்கப்பெறாமல் இருந்து இப்போது அதில் ஒன்று மட்டும் கிடைத்திருக்கிறது. சிறுவர் சிறுமியர் தேசிய கீதம் என்னும் அந்நூல் விடுதலை இயக்கத்தில் பாரதிதாசனின் பங்களிப்பை மேலும் விரிவாக்குகின்றது. இந்நூலில் இடம்பெற்ற சில பாடல்கள் *1922 ம்* ஆண்டு தேச சேவகன் இதழிலும் வெளிவந்துள்ளன. அந்தப் பாடல்களுடன் மேலும் பல பாடல்களைச் சேர்த்து சிறுவர் சிறுமியர் தேசிய கீதம் நூலாக வெளியிடப்பட்டிருக்கிறது. இந்நூல் விளம்பரப் படுத்தப்பட்டதே தவிர நூலாக வெளியாகவில்லை என்று இன்று பலரும் தங்களது ஆய்வுரையில் குறிப்பிட்டுள்ளனர். இப்படிப்பட்ட யூகங்களுக்கெல்லாம் முடிவு கட்டும் முகமாக இன்று இந்நூல் கிடைத்துவிட்டது. பாரதிதாசனின் தோழரான கவிஞர் ச. சிவப்பிரகாசம் அவர்களின் சேமிப்புக் களஞ்சியத்திலிருந்து கிடைத்த அந்நூல் பாரதிதாசனின் பல புதிய பாடல்களை நமக்கு அளிப்பதுடன் இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன் பங்கை மேலும் விரிவாக்கி

இருக்கின்றது. எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் காண்போம். சிறுவர் சிறுமியர் தேசிய கீதம் மூலமாக இப்போது கிடைத்துள்ள பாடல் இது. எந்த அளவிற்கு விடுதலை வேட்கை நெஞ்சில் நிறைந்திருந்தால் இப்படிப்பட்ட ஒரு பாடல் பிறக்கும் என்று ஆச்சரியப் படவைக்கும் பாடல் அது.

கப்பலேறுவாயோ - அடிமை
கடலைத் தாண்டுவாயோ?
குப்பைவிரும்பும் நாய்க்கே - அடிமை
கொற்றத் தவிசுமுண்டோ?

என்று உணர்த்தவரும் பொருளை எதிர்மறையாக விடுதலைப் பாட லில் பாரதியார் அமைத்திருப்பது போலவே இந்தப் பாடலையும் அமைத்திருக்கிறார் பாவேந்தர். பாரததேவி விடுதலை வேண்டுகிறாள். ஆனால் அதற்காகப் போராட வேண்டிய அவளது மைந்தர்களோ அதில் நாட்டம் கொள்ளாது ஆங்கிலேயப் பழக்கங்களிலே விருப்பம் கொண்டு அவர்களுக்கே அடிமையாகிக் கிடக்கிறார்கள். அந்நிலைகண்டு வருந்தும் பாரதத் தாயிடம் 'கலி' மேலும் கிண்டல் செய்கிறான். இதுவரை வெளியாகாத பாவேந்தரின் பாடல் இது.

பாரததேவி உன் மைந்தரைக் கெடுத்தேன்

மேற்குத் திசையின் சாராயம் - உன்
வீரமைந்தர்க்கு அதில் நேயம் - உனைச்
சோற்றுக் கழவைக்கும் உபாயம் - நீ
சுதந்திரம் கேட்பதென்ன ஞாயம்? அடி

வெறித்துக் குடிக்கிறான் கள்ளை - ஆடி
விழுந்து முறிக்கிறான் முள்ளை - வழி
அறிந்து நடக்கக் கண் நொள்ளை - உனக்
கரசு தருமோ இப்பிள்ளை - அடி

ஆடை அழுக்குடைய கந்தை - இந்த
அழகில் அனைவரையும் நிந்தை - சொல்லிப்
பாடை தனிலுங்கள் மொந்தை - எண்ணிப்
பறந்தனன் மற்றொரு குழந்தை! அடி

ஆசாரம் கெடுமென அஞ்சா - மைந்தர்க்
கமுதமும் சாதமும் நஞ்சா? உயிர்
நாசம் புரிந்ததே கஞ்சா - கொடி
நாட்ட உனக்கிரும்பு நெஞ்சா? அடி

வீட்டுக் காசிலே திருட்டு - நல்ல
வீதி எங்கும் புகையிருட்டு - மிக
நீட்டிப் பிடித்தனர் சுருட்டு - நாட்டில்
நீசத்தனம் வளர்க்கும் பொருட்டு - அடி

நாவற் பழ உதடுகூடி - எங்கும்
நாற இரு கன்னமும் வாடி - பின்பு
சாவுக்கே பிடிப்பர் பீடி - இந்தத்
தருதலை பாரத னோடி? அடி

மூளை வறண்டுபோம் படியே - முகம்
முழுதும் சளியொழுகும் நெடியே - தந்
தாளை ஒழிக்குமிந்தப் பொடியே - உனை
அழித்திடுமே அரை நொடியே - அடி

தேயிலை காப்பியைப் பிடித்தார் - அவை
தித்திக்குதென்று தினம் குடித்தார் - பின்பு
கோயிலில் வைத்துத் துதி படித்தார் - தேசக்
கொள்கையை வேரோடு மடித்தார் - அடி

சுதந்திரத் துவக்கமே சுதர்மம் - அந்தச்
சுதர்மத்தை வீழ்த்துதல் அதர்மம் - உன்
சுதன் அறியானிந்த் மர்மம் உனைத்
தொல்லை செய்தல் கலி வர்மம் - (அம்)[28]

ஒரு பொருளை எடுத்துக்கொண்டு பாடும்போது அதனோடு எந்த அளவு ஒன்றி விடுகிறார் பாருங்கள். அப்படி ஒன்றுமளவுக்கு அந்தப் பொருள் அவ்வளவு கருத்துமுள்ளதாக அவருடைய நெஞ்சில் விதைக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நாம் இங்கு முக்கியமாகக் கொள்ள வேண்டும். பழுதில்லாத விதை பாங்காக வளர்கிறது.

6.5 தேசிய விடுகவிகள், சிட்டுக்குருவிப்பாட்டு, நிலாப்பாட்டு போன்ற முன்பே தேச சேவகன் இதழில் வெளியான பாடல்கள் மட்டுமன்றி தேசிய விளையாட்டு என்ற தலைப்பில் பல பாடல்களும், கலியின் கொடுமை, தேசிய நலங்கு, தேசிய மங்களம் போன்ற தலைப்புக்களில் பல பாடல்களும் நமக்கு இந்நூல் மூலம் கிடைத்திருக்கின்றன. இந்த வரிசையில் முன்பே வெளியாகி இன்றுவரை நமக்குக் கிடைக்காத இன்னொரு நூல் தொண்டர் படைப்பாட்டு.

6.6 அச்சான இவைத்தவிர அச்சில் வராத விடுதலைப் பாடல்கள் அடங்கிய மற்ற 17 சிறுசிறு நூல்களும் இனிக்கிடைக்க வழியே இல்லை. இவை கிடைக்காமற்போன காரணம் என்னவென்றால் சுவையான காரணம்தான். ஆனால் சுகமளிக்காத காரணமும்கூட. இதுபற்றித் திரு. நாகசாமி அவர்களின் குறிப்பு :

> "தேசபக்தர்கள் தனியே அல்லது சேர்ந்து வெளியே சென்றால் சி.ஐ.டி. சிறிது தூரத்தில் பின்தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் எங்கெல்லாம் போனார்கள், யார் யாரைக் கண்டு அவர்கள் பேசினார்கள் என்று சி.ஐ.டி. கவனித்து வந்தார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் புகாரின்மேல் பிரெஞ்சு சர்க்கார் தேசபக்தர்கள் வீடுகளைப் பலதடவைகள் சோதனை செய்தார்கள்."[29]

6.7 இந்தச் சோதனைகள் தொடர்ந்த காரணத்தினால்தான் அப்போது வெளியான இதழ்கள் கூட இன்று நமக்கு அரிதாகக் கிடைக்கின்றன. அதற்கு நூறாண்டுகளுக்கு முன்னர் வெளியான நூல்கள்கூட பல இடங்களில் கிடைக்கும்போது விடுதலை இயக்கம் வீறுகொண்ட காலத்தில் வெளியீடுகள் கிடைக்காமற் போனதன் காரணம் இந்தச் சோதனைகளே. இந்தச் சோதனைகளாலேயே பாரதிதாசனின் பல படைப்புகளைப் பதிப்பித்த காசி லட்சுமணப் பிரசாத்தால் பாரதிதாசனின் 17 சிறு நூல்களை வெளியிட முடியாமற் போனது. அப்படியும் வெளியிட்ட வெளியீடுகளும் சோதனைகளில் சிக்கி இன்று கிடைக்காமற்போயின. இந்தச் சோதனைகளிலும் காவலரின் கண்களுக்குத் தெரியாமல் கவிஞர் சிவப்பிரகாசம் மறைத்து வைத்த ஒரு நூலே இன்று நமக்கு ஒரு காலக்கொடையாகக் கிடைத்து பாவேந்தரின் பணிகளைப் பறைசாற்ற வைக்கின்றது.

முடிவுரை

7.1 விடுதலை இயக்கத்திற்குப் பாரதியின் பங்களிப்பு வெறும் பாடல்களே எனும் நிலையை மாற்றி நேரடிப் பங்களிப்பிலும் நேரடி, மறைமுகத் தீவிரவாதத்திலும் அவருடைய பங்கு அதிகம் எனவும் கண்டோம். விடுதலை இயக்க நேரடித் தீவிரவாதத்தில்

பாரதி, அரவிந்தர், மாடசாமிக்கு நிகராக பாரதிதாசனின் பங்கு, பணிகள் இருந்து வந்ததும், உணர்ச்சிமிகும், விடுதலை இயக்கப் பாடல்களை எண்ணற்று எழுதிக் குவித்தவர் அவர் என்ற உண்மையும் இன்று விடுதலை இயக்கத்திற்குப் பாரதிதாசனின் பங்களிப்பு எதுவுமே இல்லை என்ற நிலையை மாற்றி, தேசியகவி பாரதியார் என்பதைப் போல தேசிய கவி பாரதிதாசன் என்று சொல்ல வைக்கின்ற அளவிற்கு விளங்குகின்றன.

7.2 உண்மையான சீர்திருத்தக் கவிஞனாக விளங்கிய பாரதியைத் தேசியகவி என்ற போர்வையை மட்டும் போர்த்திவிட்டும், விடுதலை இயக்கத்திற்கும் பெரும் பங்காற்றிய பாரதிதாசனைச் சீர்திருத்தக் கவி என்ற போர்வையை மட்டும் போர்த்தியும் பார்த்தால் முழுமையான கவியுள்ளம் நமது கண்களை மறைத்துவிடும். எல்லா நிலைகளிலும், எல்லாப் பொருள்களையும் பாடிய இவ்விரு மகாகவிகளும் மனித நேயத்தை மனங்கொண்டு பாடிய மறுமலர்ச்சிப் பாவலர்கள் என்பதே வருங்காலத்துக்கு இவர்களை அறிமுகப்படுத்தும் செய்தியாக அமைய வேண்டும்.

அடிக்குறிப்புகள் :

22. கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், பக் 98

23. இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன், பக்.52

24. மன்னர்மன்னன், அச்சம் அவர் அறியாதது (கட்டுரை), அரும்புகள் மொட்டுகள் மலர்கள்

25. இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன், பக். 46

26. மேற்படி, பக்.42

27. மேற்படி, பக்.1

28. பாரதிதாசன் - கனக சுப்புரத்தினம், பக்.136

29. இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன், பக்.44

(முனைவர் மலையமான்)

இங்கிலாந்து நாட்டை ஆண்ட அரசர்களில் சிலருடைய பெயர்கள் ஒரே மாதிரியாக இருக்கும்போது, முதலாம், இரண்டாம் என்ற அடையைத் தந்து, அப்பெயர்கள் வரலாற்றில் இடம் பெற்றன. சான்றாக முதலாம் ஹென்றி, இரண்டாம் ஹென்றி என்று அவர்கள் குறிக்கப்பட்டனர். தமிழகத்தில் இப்படிக் குறிப்பிடும் நிலை அருகியே உள்ளது. இப்படி அடைகொடுத்துக் கூறும் நிலமை இல்லாத காரணத்தால் சில சமயம் குழப்பமும் ஏற்பட்டிருக்கிறது.

அதியமான் தந்த நெல்லிக்கனியைப் பாடிய ஔவையாரும் ஆத்திசூடி பாடிய ஔவையாரும் வெவ்வேறானவர்கள். பாரியின் மலையைப் பாடிய கபிலரும் கபிலரகவல் பாடிய கபிலரும் வேறு வேறு காலத்திற்கு உரியவர்கள். திருக்குறள் பாடிய திருவள்ளுவரும் ஞானவெட்டியான் பாடிய திருவள்ளுவரும் தனித்தனி காலக்கட்டத்தில் வாழ்ந்தவர்கள். நன்னன் என்ற பெயரிலும் இரண்டு குறுநில மன்னர்கள் தமிழகத்தில் இருந்தார்கள். ஆனால் இவர்களைப் பற்றித் தெளிவற்ற நிலை இருந்து வந்தது. செங்கண்மாத்து நன்னன் சேய் நன்னன் மேல் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனாரால், பத்துப்பாட்டிலுள்ள மலைபடுகடாம் பாடப்பட்டது. இவனுடைய வாழிடம் குன்று சூழ் இருக்கை (மலை.583) எனப்பட்டது. இதன் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் “பல் குன்றக் கோட்டத்து” என்றுரைக்கின்றார். இப்பகுதி பல்குன்றக் கோட்டம் என்று கூறப்பட்டது என்று வரலாறு தெரிவிக்கின்றது. மலைபடுகடாம் பாடலுள் ‘செங்கண்’ என்ற தொடர் மூவிடங்களில் வந்துள்ளது.

“சிலைஒலி வெரீஇய செங்கண்
மரைவிடை” (மலை. 405)

“பிடிக்கை அன்ன செங்கண் வரா அல்” (மலை 457)

“செங்கண் எருமை” (மலை 472)

இத்தொடர்கள் மூலம், மரை (மான்வகை) வரால்மீன், எருமை ஆகிய மூன்றும் செங்கண் (சிவந்த கண்) பெற்றிருந்தன என்று பாவலர் கூறுகிறார். எனவே செங்கண்மா என்ற ஊர்ப் பெயருக்கும், இவற்றிற்கும் தொடர்பு இருக்கலாமோ

எனத்தோன்றுகிறது. செங்கண்மா என்ற தொடரின் ஈற்றெழுத்து காலப்போக்கில் மறைந்து செங்கண் என்றாகி செங்கம் என்று இன்று சொல்லப்பட்டு வருகிறது.

நன்னனுடைய நாட்டில் சேயாறு பாய்ந்து சென்றதை மலைபடுகாடம் கூறுகிறது.

“காணுநர் வயாஅங் கட்கின் சேயாற்றின்” (மலை. 476)

“கடுவரற் கலுழிக் கட்கின் சேயாற்று” (மலை. 555).

எனும் தொடர்கள் சேயாற்றின் சிறப்பை அறிவிக்கின்றன. சேயாறு இன்று செய்யாறு என்று திரிந்து வழங்குகின்றது. இந்த ஆறு, இன்றும் செங்கத்தின் அருகில் ஓடுகிறது.

நன்னனுக்கு நவிர மலை உரியது என்று மலைபடுகடாம் தெரிவிக்கின்றது.

பேரிசை நவிர மே (மலை 82)

என்பது பாடல் தொடராகும். கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செங்கம் சிவன் கோயில் கல்வெட்டில், ‘நவிர மலை’ என்ற சொற்றொடர் உள்ளது. இது வடமொழி ஆக்கம் பெற்று, பர்வதமலை என்று இன்று அழைக்கப்படுகிறது. இம்மலையும் செங்கத்திற்கு அருகில் உள்ளது. எனவே மலைபடுகடாம் பாடலில் குறிக்கப்பெற்ற ஊர், ஆறு, மலை ஆகிய இம்மூன்றும் இன்றும் உள்ளன. இந்த, ஊரின் பழம் பெருமையை அறிவிக்கும் முறையில் சில சிற்றூர்கள், இதனைச் சுற்றியுள்ளன. வண்ணக்கன்பாடி (நாணய சோதனையாளர்கள் வாழ்ந்த இடம் - இது இன்று வணக்கம் பாடி என்று திரிந்துள்ளது) சாத்தன் ஊர் (‘நில வாணிகத் தலைவனுடைய ஊர்) கரியர் மங்கலம் (யானையைக் கவனிப்பவர் வாழ்ந்த இடம் - இது இன்று கரியமங்கலம் எனப்படுகிறது. இராமந்தைப்பாடி (இரவு நேரத்தில் பசுக்கூட்டம் தங்கியுள்ள இடம் - இது இன்று இராவந்த வாடி என்று சொல்லப் படுகிறது) முதலிய ஊர்கள் சான்றாக அமையும். செங்கம் வட்டாரத்தில் நடுகற்களும் மிகுதியாக உள்ளன. இவற்றை ஆய்ந்து தொகுத்து “செங்கம் நடுகற்கள்” என்ற நூலைத் தமிழக அரசின் அகழ்வாய்வுத்துறை வெளியிட்டுள்ளது. செங்கத்தில் கிழக்குப் பகுதியில் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், கோட்டைப்பகுதி இருந்தது. அது இன்று சுவடு தெரியாமல் அழிந்து விட்டது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, செங்கம் மேனிலைப் பள்ளி விளையாட்டுத்திடலில், மழை பெய்து முடிந்த பின்பு மிகப் பழங்காலத்துப் பானை ஓடுகள் கிடைத்தன.

(அவற்றின் அருமையும் பெருமையும் புரியாத காரணத்தால் அவை எடுத்தெறியப்பட்டன) ஆகவே, இன்னபிற காரணங்களினால், இன்றுள்ள செங்கம் பகுதியைச் சங்க காலத்து நன்னன் சேய் நன்னன் ஆண்டான் என்பது தெளிவாகத் தெரிகிறது.

நன்னன் பெண் கொலை புரிந்தவன் என்ற செய்தி, குறுந்தொகை 292 ஆம் பாடல் மூலம் தெரிகிறது. அப்பாடலைப் பாடியவர், வரலாற்றறிவு சான்ற புலவர் பரணர் என்பவர். ஆற்றில் மிதந்து வந்த மாம்பழத்தை ஒரு கன்னி எடுத்தாள். அதன் சிறப்பை அறியாத அவள் அதை உண்டாள். அது நன்னன் என்ற அரசனுடைய காவல் மரத்திலிருந்து விழுந்த பழம். அவள் அதை உண்டதை அறிந்த அரசன், அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். மகள் அறியாமல் செய்த தவறுக்கு ஈடாக, அவளுடைய எடை அளவு கொண்ட பொன்னும் 81 யானைகளும் தருவதாகத் தந்தை கூறினார். மகளைக் கொல்லவேண்டாம் என்று கெஞ்சினார். ஆனால் நன்னன் அந்தப் பெண்ணைக் கொன்றான். அறியாமல் செய்த செயல் என்று எண்ணாமல் பெண் என்றும் பாராமல் தந்தையின் வேண்டுகோளையும் ஏற்காமல், பெண் என்றால் பேயும் இரங்கும் என்ற நிலையையும் கடந்து, பெண் கொலை புரிந்த நன்னனைப் புலவர் இனம் மிகவும் வெறுத்தது. அவனை மட்டுமன்றி, அவன் வழி வந்த அரசப் பரம்பரையும் அவர்கள் பாடவில்லை. இதைப் புறநானூற்று 151 ஆம் பாடலின் உரை தெரிவிக்கிறது.

இந்த நன்னனுடைய மலை ஏழில் என்று சங்கப் பாடல் கூறுகின்றது. (நற். 391) செங்கண் மாத்து நன்னன் சேய் நன்னனும் ஏழில் மலைக்குரிய - பெண் கொலை புரிந்த நன்னனும் ஒருவனா என்பது பல ஆய்வாளரின் சிந்தனையைத் தூண்டிக் கொண்டேயிருக்கிறது. கணிதவியல் அறிஞர், சிந்து வெளிக் கணித ஆய்வாளர் - கு. வெங்கடாசலம் பெண் கொலைபுரிந்த நன்னனும், செங்கண் மாத்து நன்னனும் வேறு வேறானவர் என்று கூறியிருக்கிறார் (குறளியம் - சங்க காலத்து செங்கண் மாநகர். ப.29) "ஏழில் மலையை ஆண்ட நன்னனும், 800 கி. மீ. களுக்கு அப்பால் உள்ள பல்குன்றக் கோட்டத்தை அரசாண்ட நன்னன் சேய் நன்னனும் ஒருவனே எனக் கருதுதல் தவறாகும்" என்று அறிஞர் பி. எல். சாமியின் கூற்றை, அவர் மேற்கோளாகவும் காட்டுகிறார்.

நன்னனுடைய நறு மாமரத்தை அழித்து அவன் நாட்டில் நுழைந்த கோசரைப் பற்றிக் குறுந்தொகை 73 ஆம் பாடல் தெரிவிக்கிறது. அதன் குறிப்புரையில், "நன்னன் கொங்கு நாட்டுக்

கருகில் மலை நாட்டில் இருந்தவன் போலும்" என்று தேடிச் சென்று தமிழ் ஏடு தந்த உ.வே. சாமிநாதையர் கூறியுள்ளார்.

கொங்கு நாட்டு ஆனைமலையில் மாசானி அம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. அந்தக் கோயிலில் ஒரு பெண் தெய்வச்சிலை இருக்கிறது. அது படுக்கை நிலையில் கிடக்கிறது. ஆகவே மயானத்தில் சயனித்திருக்கும் - படுத்திருக்கும் பெண் என்பதைக் குறிக்கும் முறையில், அது மயான சயனி என்று சொல்லப்பட்டது. காலப்போக்கில், அத்தொடர் மாசானி என்று மருவி விட்டது. நன்னனால், கொலை செய்யப்பட்ட அந்தப் பெண்ணின் நினைவுச் சின்னமே அந்தச் சிலை என்பதை அந்தக் கோயிலில் உள்ள கல்வெட்டு கூறுகின்றது. அந்த வட்டாரத்தில் பாடப்படும் நாட்டுப் புறப்பாட்டிலும் நன்னனின் பெண் கொலைச் செய்தி வருகிறது.

பாண்டியனால் பெருந்தீங்கு இழைக்கப்பட்ட கண்ணகி, மாரியம்மன் என்ற பெயரில் இன்றும் வணங்கப்படுவது போல, நன்னனால் மாபெரும் தீங்கு விளைவிக்கப்பட்ட இந்தப் பெண்ணும் இன்று மாசானி அம்மன் என்று வணங்கப்படுகிறாள். இப்படி, வணங்கப்படும் தெய்வ நிலை பெற்ற காரணத்தினால் இவளைக் கண்ணகியின் நிழல் என்று ஒப்புமை கருதிக் கூறத் தோன்றுகிறது.

மாசானி அம்மனுக்கு மக்கள் கூட்டமாக வந்து வியாழக்கிழமை தோறும் சிறப்புப் பூசனை செய்கிறார்கள். அந்தக் கோயிலிலிருக்கும் பகுதியில் ஆளியாறு என்ற பெயரில் ஓர் ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றில்தான் நன்னனுடைய காவல் மரத்து மாம்பழம் அடித்துச் செல்லப்பட்டிருக்கக்கூடும். அங்குள்ள மலைப்பகுதி நன்னன் ஊர் என்றும் கூறப்படுகிறது. பெண் கொலை புரிந்த நன்னனுடைய ஏழில் மலையை அடுத்தப் பகுதி, ஏழில் உம்பர் எனப்பட்டது. (குறுந். 138) இன்று அங்குள்ள ஆனை மலைப்பகுதி உம்பற்காடு என்று சொல்லப்படுகிறது.

மாசானி அம்மன் வழிபாடு அந்தக் கோயிலில் உள்ள கல்வெட்டு, நாட்டுப்புறப் பாட்டு, நன்னன் ஊர், உம்பர்க்காடு போன்ற சொல்லாட்சிகள் ஆகியவை காரணமாக, ஆனைமலைப் பகுதியை ஆண்ட அரசன்தான் பெண் கொலை புரிந்த நன்னன் என்பது தெரிகிறது. மேற்கண்ட செய்திகளைத் தமிழிலக்கியப் புலமை சான்ற காவல் துறை உயர் அலுவலர் திரு. ரவி ஆறுமுகம் கண்டு பிடித்து அறிவித்திருக்கிறார். (HINDU, OCT. 21, 1995, P.4) பெண் கொலை நடந்த நிகழ்ச்சி கி.மு. 500 ஆண்டாக இருக்கலாம் என்று அறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் கருதுகிறார்.

இந்தக் கட்டுரை மூலம் பெறப்படும் ஆய்வு முடிவுகள்.

1) நன்னன் என்ற பெயரில் இரண்டு அரசர்கள் இருந்தனர்

2) பெண் கொலை புரிந்த நன்னன் ஆனை மலைப்பகுதியில் வாழ்ந்தவன்

3) அநியாயமாகக் கொலை செய்யப்பட்ட பெண், கண்ணகிபோல வேறு ஒரு பெயரில் தெய்வமாக மாற்றப்பட்டு வணங்கப்படுகிறாள்.

4) சங்கப்பாடல்கள் கூறும் வரலாற்றுச் செய்திகள் உண்மையானவை.

தமிழ் வரவு

தெ. முருகசாமி
முதல்வர்
இராசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி - 630 003.

தமிழாய்ந்த தலைமகன்தான் தமிழாம் நாட்டின்
முதலமைச்சாய் முப்போதும் வருதல் வேண்டி
இமிழ்கடல்சூழ் புதுவைநகர்ப் பாவேந் தர்தாம்
இசைத்தபடி வந்திட்ட கலைஞ ரேறே!
அமிழ்தான சங்கத்தமி ழாய்ந்த செல்வா!
அரியகுற ளோவியத்தின் உயிர்ப்பே! நன்மை
உமிழ்கின்ற ஒளிவிளக்காய் ஏற்றங் காணும்
உம்மைநான் வேண்டுகிறேன் ஒன்று நன்றே!
அமைச்சரிலே அருந்தமிழ்க்கோ ரமைச்சர் கண்ட
அரியதமிழ் அடலேறே! அஞ்சா நெஞ்சே!
குமைச்சலெலாம் ஒடுங்கிவிட்ட நேரந் தன்னில்
குறிப்பாகத் தாய்மொழிக்குச் செய்வ தெல்லாம்
இமைப்பொழுதும் தாழ்த்தாமல் ஏற்ற வாறாய்
இப்போதே செய்துவிட வேண்டும் என்பேன்!
உமைவிட்டால் தமிழ்தமிழென் றுரைப்பார் யாரே?
உம்வரவு தமிழ்வரவு உணர்வாய் நன்றே!
அந்நாளில் வள்ளுவர்க்குக் கோட்டங் கண்டாய்!
அடுத்தடுத்துப் பூம்புகாரைப் பொலிவு செய்தாய்!
இந்நாளில் முதல்வராக வந்த நீயும்
இருங்கடல்சூழ் கன்னியாநற் குமரி தன்னில்
செந்நாவின் புலவர்க்குச் சிலையும் வைத்தே
செழுந்தமிழின் அரசவைநற் கவிஞர் தம்மை
எந்நாளும் நிலையாக இருக்கச் செய்வாய்!
இவைபோலப் படிப்படியாய்ச் செய்வாய் நன்றே!

தமிழ் நாகர் – ஓர் ஆய்வு

புலவர் க. மா. வீரணன், எம். ஏ., பி. லிட்.,
நாடார் சரசுவதி மேனிலைப்பள்ளி,
உசிலம்பட்டி - 626 532
மதுரை மாவட்டம்

(சிலம்பு - 70, பரல் - 10, பக். 381 தொடர்ச்சி)

தமிழகத்தில் அரை நாகரிகமுடைய பல கிளையினங்களை மக்கட் பெருக்கமும், நாகரிக வளர்ச்சியுமுடைய நாகர் வென்றனர். இவர்கள் ஒரு காலத்தில் இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய பரப்பின் பெரும்பகுதியை ஆண்டனர். நாகர் தலைநகரம் இராமாயணத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

"நஞ்சுறை வன்பற்கள் கொடு நாகரின மைந்தர்
பொன்செய் கொடுந்தாழ் இரும்புரிசை மதில்காக்க
எஞ்சுதலில் வீதிபல எங்கணும் நிறைந்து
மிஞ்சவரு போகவதி மேவு நகரத்தே".
"மின்செய் பொன் பொலங் கோயிலிடை வியன் தவசின்மீதே
அஞ்சவரு வாசுகி அமர்ந்தபதி காண்நீ!
மஞ்சு தவழ்மாடமொடு கூடம் மிடைகாடு
விஞ்சவரு பைங்கழனி யாவும் விழி கொள்வாய்"

"Near Bhogavati stands the place
Where dwell the hosts of the Serpent race,
A broad-wayed city walled and barred
Which watchful legions keep and guard,
The fiercest of the serpent youth
Each awful for his venomed tooth;
And throned in his imperial hall
Is Vasuki who rules them all;
Explore the serpent city well,
Search town and tower and citadel,
Scan each field and wood that lies
Around it with your watchful eyes!

அமராவதியின் அழிபாடுகளிலிருந்து அகற்றப்பட்டுள்ள சில துண்டங்கள் சென்னை அரசியல் கண்காட்சிச் சாலையில் காணப்படுகின்றன. இச்சிற்பங்களில் நாக அரசருக்குத் தனிச் சிறப்புச் சின்னமாகப் பின்புறம் ஐந்தலை அல்லது எழுதலை நாகம்

உள்ளது. நாக இளவரசியருக்கு இதுபோல முத்தலை நாகங்களும் பொது நிலை நாகர்களுக்கு ஒருதலை நாகங்களும் உள்ளன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த தமிழ்மக்கள் நினைவெல்லைக்குள்ளாக, நாக அரசுகளைவிடப் பழமை வாய்ந்த அரசுகள் எதுவும் இருந்ததில்லை என்று தோற்றுகிறது. புகார் நகரம் நாகர்களின் ஒரு பழைய வாழ்விடமாயிருந்தது.

மாமல்லபுரத்திலுள்ள வராக சுவாமி கோயிலுக்கு அளிக்கப்பட்ட ஒரு மனையின் மானியப் பத்திரத்தில் கையெழுத்திட்ட சோழரின் உயர் பணியாளர்கள் :

1. ஒளிநாகன் மாடையன் அழகிய சோழ அமர்நாட்டு மூவேந்த வேளான்.
2. ஒளிநாகன் சந்திரசேகரன்.
3. ஒளிநாகன் நாராயணன்.
4. இந்துபுரவான் சங்கநாகன்.
5. உச்சன் கிழவன் முகுளிநாகன்.

பசர் நாகர் என்னும் அரசரைத் தாலமி குறிப்பிட்டுள்ளார். இனி இலங்கையை ஆண்ட நாக அரசர்கள் வருமாறு:-

மல்லகநாகர்	... கி.பி. 125
சந்தநாகர்	... கி.பி. 173
குடநாகர்	... கி.பி. 183
சிரீநாகர்	... கி.பி. 184

நீலநாகர்களால் அளிக்கப்பட்ட உயர்ந்த ஆடையை வள்ளல் ஆய் சிவபெருமானுக்கு அளித்தான். (சிறுபாண் - 96-99).

ஆரியர்கள் எழுத்துக் கலையை முதலில் கற்றது நாகர்களிடமிருந்தேயாகும். சமஸ்கிருத எழுத்துக்கள் இன்றளவும் இக்காரணத்தினாலேயே தேவநாகரி என்று அழைக்கப் படுகின்றன.

கங்கைக்கடல் முகத்தருகே இருந்த தாமிலித்தியிலிருந்து (Tamilithi) நாகர் தமிழகத்திற்குத் திரும்பினர். அதனால் தமிழர் எனப்பட்டனர். மேற்சொன்ன இடம் இன்று தம்ளக் (Tumluk) என்று வழங்கப்படுகிறது. தமிழர் என்ற சொல்லின் விளக்கம் இதுவேயாகும்.

நாகர்களை வென்ற முதற்சோழ அரசன் முசுகுந்தனே என்பது பற்றி ஐயம் எதற்கும் இடம் இல்லை.

தமிழ்த்தூண் தாமோதரனார்

பேராசிரியர் கு.அரசேந்திரன், சென்னை

முன்னுரை

சி.வை. தாமோதரனார் என்று தமிழுலகில் நிலைபெற்ற நீடுபுகழ் நாயகர் இன்றைக்கு 164 ஆண்டுகட்கு முன் (12.9.1832 இல்) பிறந்தவர். 96 ஆண்டுகட்கு முன் (31.12.1900) மறைந்தவர். 68 ஆண்டுகள் பூதவுடல் தாங்கி வாழ்ந்தவர். தமிழுக்கு இப் பெருமகனார் ஆற்றிய தொண்டின் அளவை நினைக்கின் அவர் பத்தோடு ஒருவர் என்ற வகையில் மதிக்கத் தக்கவர் அல்லர் என்பது விளங்கும். நம் தமிழுலகில் பெருமதிப்புடன் எவரொருவர் பாராட்டப்படவில்லையோ எவரொருவர் தமிழ் மக்களால் நன்றியுடன் நினைக்கப்படவில்லையோ அவரே உண்மையான தமிழ்த் தொண்டராக இருப்பார் என்று நாம் கருதிக் கொள்ளலாம். அன்ன வகையில் நம் தாமோதரர் பெருமதிப்புப் பெறா வொருவராகவே இன்றும் தமிழுலகில் இருந்து வருகின்றார்.

பொதுவாக ஒருவர் இறந்து போனால் அவ்வேளையில் அவரைப் பலரும் உண்மைக்கு மேல் ஒருபடி கூட்டிப் புகழ்வர். சில வேளைகளில் அப்புகழுரை முழு உண்மையாகவும் இருந்து விடுவதுண்டு. அப்படியாக நம் தாமோதரர் மறைந்த ஞான்று அவர் அருமையறிந்து பரிதிமாற் கலைஞர் பாடிய பாடல் இருந்தது.

> "தாமோதி வண்டுதேன் கடிமலர் கூட்டுதல்போல்
> நாமோது செந்தமிழில் நன்னூல் பதிப்பித்த
> தாமோ தரம்பிள்ளைச் சால்பெடுத்துச் சாற்றவெவர்
> தாமோ தரமுடை யார்"

என்பது அப்பாடல். தாமோதரர் சால்பெடுத்துச் சாற்றல் உண்மையில் எவர்க்கும் எளிதன்று.

முந்நிலைகள்

தாமோதரரின் முழுவாழ்வையும் மனங்கொண்டு உள்ளடக்கிப் பார்த்த நிலையில் அவரை மூன்று வகைகளில் சொல்லலாம் எனக் கருதுகின்றேன். அவை :

1. தமிழ்ப் பதிப்பின் தானைத் தலைமகன்
2. பதிப்புச் செம்மல் உ.வே.சா. அவர்களின் உற்ற வழிகாட்டி
3. தமிழ் மானம் கனன்ற தனிப்பேர் அரிமா

என்பன. இனி இம் முத்தலைப்பையொட்டிச் சுருங்கச் சொல்வோம்.

1. தமிழ்ப் பதிப்பின் தானைத் தலைமகன்

ஆங்கிலேயர் வருகையாலும் ஐரோப்பிய கிறித்துவப் பாதிரிமார்கள் முயற்சியாலும் நூல்கள் அச்சு ஊர்தியேறி உலா வந்தன. தமிழ் நூல் ஒன்றுதான் முதன்முதலாக இந்திய மொழிகளிலேயே அச்சேறிற்று என்பது வரலாறு. தமிழ் நூல்களை அச்சு வயப்படுத்தும் பணியில் முன் நின்ற வரலாற்றுப் பெருமகனாராக ஆறுமுக நாவலர் அவர்களே நமக்குத் தெரிகின்றார். கிறித்துவச் சமயத்தைப் பரப்ப கிறித்துவக் குருமார்கள் கையாண்ட அச்சு முயற்சியே ஆறுமுக நாவலர் அவர்கட்குச் சைவம் பரப்ப வழிகாட்டியாய் இருந்தது. இன்றைய, உலகம் உற்று நோக்கும் யாழ்ப்பாணத்தில் பிறந்த ஆறுமுக நாவலர் அவர்களை ஒட்டியே நம் கட்டுரை நாயகர் தாமோதரர் வாழ்வும் பல்வேறு ஒற்றுமைகளுடன் தொடர்ந்தது.

தாமோதரர் கல்வியும் பணியும்

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுப்பிட்டி என்னும் சிற்றூரில் 12.9.1832 ஆம் நாளில் வைரவநாதர் - பெருந்தேவி ஆகியோர்க்கு மகனாய்ப் பிறந்தார் தாமோதரர். இவருடன் உடன் பிறந்தோர் எழுவர். இவருடன் மூத்தவர் நம் சி.வை.தா. சி.வை.தாவின் தந்தையார் ஓர் ஆசிரியர். ஆதலால் தொடக்கக் கல்வியும் அறநூல்கள், நிகண்டு நூல்கள் போன்றனவும் தந்தை வழியே இவருக்குக் கிடைத்தன. மேனிலைக் கல்வியைத் தந்தவர் சுன்னாகம் முத்துக்குமர நாவலர்.

தமிழ்க் கல்வியில் வேரூன்றிய தாமோதரர் 12 ஆம் அகவையின் 1884 தொடக்கம் 1852 முடிய எட்டாண்டுகள் தெல்லிப்பழை மிசன் பாடசாலை, வட்டுக் கோட்டைக் கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக் கல்லூரி ஆகியவற்றில் ஆங்கிலக் கல்வி கற்றார்.

1852 இல் கல்வி முடித்த கையோடு 20 ஆம் அகவையில் கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் தாமோதரர் ஆசிரியரானார். 1856 இல் ஆறுமுக நாவலரின் ஆங்கில ஆசிரியரும் கிறித்துவ மறைநூல் விவிலியத்தை ஆறுமுக நாவலர் கொண்டு தமிழில் மொழி பெயர்ப்புச் செய்துவித்து வெளியிட்டவரும் ஆகிய பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தொடங்கிய தினவர்த்தமானிக்கு ஆசிரியர் பொறுப்பேற்றார்.

சென்னை வாழ்வில் 1856 இல் புகுந்த தாமோதரர் 1857 இல் சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழாசிரியப் பொறுப்பேற்றார். அத்துடன் அதே ஆண்டு அங்குத் தொடங்கிய பி.ஏ. பட்ட வகுப்பில் சேர்ந்து தேர்வெழுதிச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டதாரியானார்.

கள்ளிக் கோட்டை அரசினர் கல்லூரிக்குச் சென்னை மாநிலக் கல்லூரியிலிருந்து பணி மாற்றம் பெற்றுச் சென்ற தாமோதரர் தம் 39 ஆம் அகவையில் 1871 இல் பி.எல். பட்டமும் பெற்றார். 50 ஆம் அகவையில் 1882 ஆம் ஆண்டு அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற சி.வை.தா. 1884 இல் தாம் பெற்றிருந்த சட்டக் கல்வியின் சிறப்பால் புதுக்கோட்டை அரசின் முறைமன்ற நடுவரானார். அப் பணியிலிருந்து 1890 இல் ஓய்வு பெற்றார். 1895 இல் பெருமக்கள் பலரின் வாழ்த்துக்களுடன் இராவ்பகதூர் பட்டம் பெற்றார். 1901 சனவரி 1 ஆம் நாள் புரசைவாக்கத்தில் தம் 68 ஆம் அகவையில் இயற்கை எய்தினார்.

பதிப்பித்த நூல்களும் அருமைப்பாடும்

சி.வை. தாமோதரரின் பலநிலை தமிழ்ப்பணிகளில் முதன்மையானது அவரின் தமிழ் நூல் பதிப்புப் பணியே. அவரால் பதிப்பித்து வெளியிடப்பட்ட நூல்களும் ஆண்டுகளும் பின்வருமாறு அமைகின்றன.

1.	நீதிநெறி விளக்கம்	1854
2.	தொல் சேனாவரையம்	1868
3.	வீரசோழியம் பெருந்தேவனார் உரையுடன்	1881
4.	இறையனார் களவியல்	1883
5.	தணிகைப் புராணம்	1883
6.	தொல். பொருள். நச்.	1885
7.	கலித்தொகை	1887

8. இலக்கண விளக்கம்	1889
9. சூளாமணி	1889
10. தொல் எழுத்து	1891
11. தொல் - சொல் (நச்)	1892

அச்சில் வெளிப்போந்த நூல்களாக இவை அமைய தாமோதரர் 1898 இல் அகநானூற்றை வெளியிடும் நிலைக்கு அணியப்படுத்தி வைத்திருந்த உண்மையையும் அவர் வரலாற்றுவழி அறிகிறோம்.

சி.வை.தா வெளியிட்ட 11 நூல்களில் தொல் எழுத்து மகாலிங்க ஐயர் பதிப்புத் தவிர பிற அனைத்தும் அவரால் மட்டுமே முதன்முதலாக அச்சேற்றப்பட்டன என்பதை நாம் நினைக்க வேண்டும்.

தமிழ்ப் பற்றே பதிப்புப் பணிக்கு அடிப்படை

சி.வை. தாமோதரர்க்கு உயிருணர்வில் கலந்து நிறைந்திருந்த தமிழ்ப் பற்றே தமிழ் நூல் பதிப்பு முயற்சிக்குத் தூண்டு கோலாய் இருந்திருக்கின்றது. ஓலைச் சுவடிகளாக இருந்த தமிழ் நூல்களெல்லாம் அழிந்தொழிவதைக் கண்டு அவற்றை அச்சுவடிவில் கொண்டுவர அந் நாளில் யாரும் பெருமுயற்சி செய்யவில்லை. அரிய பணியானதால் எளிதாக யாரும் அப் பணியை மேற்கொண்டுவிட முடியவில்லை. யாரும் இப் பணியைச் செய்ய முன் வரவில்லை ஆயினும் இப்பணி மிக இன்றியமையாததோர் மூலப் பெரும்பணி என்பதை நம் தாமோதரர் அறிந்தபடியால் தாமே அப்பணியைப் பிறவி முழுவதையும் ஒப்படைத்துச் செய்து பார்ப்பதென முடிவு கொண்டார்.

"நல்ல தமிழ் நூல்களுக்கு வந்த விதியையும் கையெழுத்துப் பிரதிகளின் கதியையும் அவை அடைந்திருக்கும் ஸ்திதியையும் பார்த்துச் சகிக்க மாட்டாமையொன்றே என்னை இத்தொழிலில் வலிப்பது"

"பல பெரும் வித்துவான்கள் இந் நூலை (தொல்காப்பியத்தை) அச்சிட விரும்பியதும் முயன்றதும் இரண்டொரு பிரதிகள் தேடிப் பார்வையிட்டதும் தமக்கு நிகழ்ந்த சந்தேகங்களான் இதனை அச்சிடின் தம் பெயர்க்குக் குறைவு நேரிடுமென்று தம் முயற்சியைக் கைவிட்டதும் அடியேன் பூரணமாக அறிவேன். ஆதலால் பண்டிதர், கவி ராஜ பண்டிதர், மகாவித்துவான், புலவர் என்றின்ன பெரும்பட்டச் சுமையைத் தலைமேலேற்றிக் கொள்ளாது இன்னும் பலகாலந் தமிழ் படித்தற்கு உரிமை பூண்டு நிற்கும் என் போலியரே இதில் கையிடுவது பேரவசியமாயிற்று"

மாசு மறுவற்ற தமிழ்ப் பற்றாளர் சி.வை. தாவின் இக் கூற்றுக்களை தமிழின உரிமை மீட்புப் பெருந்தலைவர் தந்தை பெரியார் உரைத்த "ஈ.வே.ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தை உலகத்திலுள்ள மற்ற உயர்ந்த சமுதாயம் போல் ஆக்கும் பொறுப்பை மேற்கொண்டுள்ளேன். இதைச் செய்து முடிப்பதற்கு எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ வேறு யாரும் இதைச் செய்ய முன் வராத காரணத்தால் நானே இப் பொறுப்பை மேற்கொண்டுள்ளேன். இதுவொன்றே எனக்குப் போதுமான தகுதியென்று நான் கருதுகின்றேன்" என்ற கருத்துரையுடன் பெரிதும் ஒப்பு நோக்க வேண்டும்.

திருட்டு வேலை செய்கின்ற ஒருவன் தன்னைப் போலவே எல்லோரும் திருட்டுவேலை செய்யட்டும் என்று சொல்ல மாட்டான். மனத்தளவிலும் பிறர் செய்ய விரும்பமாட்டான். ஆனால் நற்பணிகள் செய்யும் ஒருவனோ தான் செய்யும் பணிகளில் இன்பமும் பிறர் பிறர்க்கும் இம்மன்பதைக்கும் நலமும் விளைவது கண்டு எல்லோரும் இப் பணியைச் செய்ய வேண்டும் என உலகோர்க்கு அழைப்பு விடுப்பான். மனத்தளவிலும் எல்லோரும் இப்பணியைச் செய்தால் உலகம் எப்படியிருக்கும் என்று கருதிக் கொண்டே கரைவான். நம் தாமோதரர் செய்த பணியோ பொதுப்பணி. உலகத் தமிழ்மக்களுக்கு வாழ்வும் வளமும் மானமும் மதியும் தோன்றுதற்கு மூலமாகிய அடிப்படைப் பணி. அத்தகைய அரும்பணியை அதன் முழு நன்மையும் கருதிச் செய்யத் தொடங்கிச் செய்தவர். ஆதலால் தாம் செய்யும் பணியைத் தமிழ் மன்பதையும் செய்ய வேண்டுமெனத் துடியாய்த் துடித்து வேண்டுகோள் விடுக்கின்றார்.

"சங்க மரீஇய நூல்களால் வகுக்கப்பட்ட எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்குட் தலைமை பெற்ற எட்டுத்தொகையில் இக் கலித்தொகையும் பத்துப்பாடலுட் திருமுருகாற்றுப் படையுமே இப்பொழுது அச்சில் வந்தன. எஞ்சிய பதினாறனையும் பெயர் மாத்திரையானே அறிந்தாற் போதுமா? இவைகளைத் தங்கள் தங்களால் நன்கு மதிக்கப்பட்ட

சில வித்துவான்களைக் கொண்டு பரிசோதிப்பித்து வெளியில் வரச் செய்யத்தக்க சீமான்கள் யாரும் இல்லையா! தமிழின் அருமை யுணர்ந்த பெரியோர், மடாதிபதிகள் என்றின்னோரா இவற்றில் கடைக்கண் சார்த்துமாறு சரஸ்வதி அனுக்கிரகிப் பாளாக" என்பன தாமோதரரின் உள்ள வேட்கையில் சிறு துளிகளேயாகும்.

பிறவிப் பணியே பதிப்புப் பணிதான்

உயிர்கள் யாவுமே அறிவுக் கூறுடையன. ஆயின் மாந்தனே அறிவுக் கூர்மையன். ஒவ்வொரு மாந்தனும் கூர்தலறப்படி ஒவ்வொன்றில் கூர்மையாகப் பிறக்கின்றான். அவ்வொவ் வொன்று என்னவென்று ஒவ்வொருவரும் தத்தமக்குள் கண்டாக வேண்டும். இயற்கையும் ஒவ்வொன்றில் ஒவ்வோருயிரையும் அவ்வொவ்வொன்றிற்காக இயக்கி வருகின்றது. இஃது மெய்ம்மம். மாந்தப் பிறப்பு இவ்விலக்கு நோக்கியே இயங்கியாகல் வேண்டும். மாடு, மனை, மக்கள், வீடு, உறவு, சொத்து என்பன யாவும் ஒவ்வொருவரின் குறிக்கோளுக்கு உறுதுணையே அல்லாமல் முதன்மையாகா. இவ் வகையில் சி.வை. தாமோதரரின் வாழ்க்கையை ஊன்றி நோக்கினால் அவர் தமிழ் நூல் பதிப்புப் பணிக்காகவே பிறந்தவர்; பிறப்பிக்கப் பட்டவர் என்பதை உணரலாம். ஓர் அறிஞன் தன் பணியை எங்குத் தொடங்கினானோ அல்லது எங்குத் தொடங்கும்படி இயற்கை பணித்ததோ அங்கேயே அங்கிருந்தே தன் பணியை முறையாய்த் தொடர்ந்து தான் மேற்கொண்ட பணியையும் தன்னையும் செழுமைப் படுத்திக் கொள்வான்.

1887 இல் கலித்தொகையைப் பதிப்பித்து வெளியிடும் சி.வை. தாமோதரர்க்கு அப்போது அகவை 55. முதல் நூலாக நீதி நெறி விளக்கத்தை 1854 இல் பதிப்பித்து வெளியிட்டபோது அகவை 22. இளம் அகவையான 22 இல் பதிப்புப் பணியைத் தொடங்கிய சி.வை.தா அதற்கும் முந்தைய கழியிளம் பருவத்திலேயே தமிழ் ஏடுகளைத் தேடும் பணியை மேற்கொண்டிருந்தார் என்பதை அவரின் கலித்தொகைப் பதிப்பு முன்னுரை வழி அறிகிறோம்.

"யான் முப்பத்தைந்து வருஷத்தின் முன் (அஃதாவது 1887 இலிருந்து முப்பத்தைந்தாண்டு முன்பு) பிரமாதீச வருஷம் ஒரு தரம் அருமையான தமிழ் நூல்கள் தேடி யாழ்ப்பாணத்திலிருந்து

இக் கண்டத்தில் வந்து நடமாடிய போது கூடலூரில் மஞ்சக்குப்பத்தில் சண்முக உபாத்தியாயரென்றோர் வயோதிகரும் புதுச்சேரியில் நெல்லித் தோப்பில் சொக்கலிங்கம் பிள்ளை யொன்றோர் தமிழ்ப் பண்டிதரும் கலித்தொகை வைத்திருந்தது என் ஞாபகத்திற்கு வர அந்த இடங்களில் சென்று விசாரித்தேன்"

சி.வை. தா 1887 க்கு முப்பத்தைந்து ஆண்டுக்கு முன் அஃதாவது 1852 இல் 20 அகவையராயிருந்தார். அப்பொழுதே அவர் தமிழ் நூல்களின் அருமை யுணர்ந்தவராய் இருந்த படியினாலேயே முப்பத்தைந்தாண்டு கடந்த 55 ஆம் அகவையிலும் பழைய நினைவு நிற்கும்படித்தாய் இருந்த தென்பதை இதன்வழி அறிகின்றோம்.

தாமோதரர் 1856 இல் தினவர்த்தமானிக்காகத் தம் 24 ஆம் அகவையில் சென்னைக்கு வந்து சேர்ந்ததன் முன் 1852 ஆம் ஆண்டாகிய 20 ஆம் அகவையில் முதன் முதலாகச் சென்னை வந்திருப்பார்போல் தெரிகின்றது. இவ் இருபதாம் அகவையில் வந்த வருகை அவர் கலித்தொகை முன்னுரையில் சுட்டியுள்ளது போல் தம் தந்தையாருடன் மேற்கொண்டிருந்த வருகையாகத் தெரிய வருவதால் அதுவே முதல் வருகை என்று கொள்ளலாம். 1856 ஆம் ஆண்டின் தினவர்த்தமானிப் பணியைத் தாண்டி 1857 இல் மாநிலக் கல்லூரித் தமிழாசிரியப் பணியேற்றபின் உள்ளே உறைந்து கிடந்த தமிழ்நூல் தேடும் வேட்கை மேலும் கிளர்ந்தெழ அடிப்படையாய் அமைந்திருக்க வேண்டுமெனக் கொள்ளலாம். சிறு அகவையிலேயே இவையிவை செய்யத்தக்க பணிகள் என மனங் கொண்டிருந்த தாமோதரர்க்கு வாய்ப்பும் வசதியும் வரும்போது வேகம் பிறந்தது இயல்பேயாகும்.

1857 இல் மாநிலக் கல்லூரித் தமிழாசிரியப் பணியேற்ற போது தமிழ் கற்பிப்பிற்குத் தூய தமிழ் இலக்கண நூலாக ஒன்றும் இல்லாதுபோன மனக்குறைவில்தான் தாமோதரர் தொல்காப்பியப் பதிப்புப் பணியைத் தொடங்கியிருப்பார்போல் தெரிகின்றது. மழவை மகாலிங்க ஐயரின் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம் 1848 ஆம் ஆண்டளவில் வெளியாகியிருக்க ஏனைய சொல்லும் பொருளும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து கிடந்ததும் தாமோதரர்க்குத் தொல்காப்பியப் பதிப்பு முதன்மையாகப் பட்டிருக்க வேண்டும். தாமோதரர் பல நூல்களைப் பதித்து வெளியிட்டிருப்பினும் அவர் பெரிதும் விரும்பி உழைத்துப் பாடுபட்டு வெளியிட்டவை தொல்காப்பியமும் கலித்தொகையுமே எனலாம். நூற்பதிப்பு

வெளியீட்டிலும் பழந்தமிழ் நூற்பதிப்பே அவரைப் பெரிதும் செய்யத்தூண்டிய பதிப்பென்று நாம் கருத வேண்டியுள்ளது. காரணம் சமய நூல்களெல்லாம் மடங்களாலும் சமயப் பற்றாளர்களாலும் பேணப்பட்டிருந்த நிலையில் பழந்தமிழ் நூற்சுவடிகளே புறக்கணிக்கப்பட்டுக் கிடந்தன. சமயப் பற்று மிகுந்தவரே நம் தாமோதரர் என்றாலும் தமிழின், தமிழரின் தனிப்பெரும் மாண்புகளைச் சமற்கிருதம் விரவாத தனித்தமிழ் நூல்களாகப் பழந்தமிழ் நூல்களே இருந்தபடியால் அவற்றை மீட்டலே தமிழுக்கும் தமிழர்க்கும் செய்யும் அடிப்படைப் பணிகளில் முதன்மையானவை என்று கருதியிருந்திருக்கின்றார்.

கலித்தொகைப் பதிப்பின் முன்னுரையில் தமிழ்ச் சுவடிகளின் அந் நாளைய நிலையைத் தாமோதரர் மிக விரிவாக விளக்குகிறார். இவ்விளக்கங்களை நாம் காணும்போது அவர் குறிப்பிடும் சுவடிகள் பலவும் பழந்தமிழ் நூற் சுவடிகளாகவே இருந்திருக்க வேண்டுமென்று நாம் அறிகின்றோம். இந் நாளில் ஏற்பட்டிருக்கும் தமிழ் தமிழிய இயக்கங்களுக்கும் முயற்சிகளுக்கும் பழந்தமிழ்ச் சுவடிகள் நூல்வடிவம் பெற்றமையே பெருங்காரணமாகும். ஆனால் அச்சுவடிகள் இருந்த நிலைமையை நேரிற் கண்டு மனம் நொந்தவர் நம் தாமோதரரே ஆவார்.

“பழைய சுவடிகள் யாவுங் கிலமாய் ஒன்றொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதிவைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதின்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்துவான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாள் இல்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாட் தவறினால் பின்பு தவம் புரிந்தாலும் ஒருதரம் அழிந்த தமிழ் நூற்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளம் பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்து மென்? ஓடன்றோ கிட்டுவது”

“எத்தனையோ திவ்விய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபைபிறக்க வில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்!! அயலான் அழியக் காண்கினும் மனந்தளும்புகின்றதே! தமிழ் மாது நும் தாயல்லவா? இவள் அழிய நமக்கென் என்று வாளா இருக்கின்றீர்களா! தேசாபிமானம் மதாபிமானம் பாஷாபிமானம் என்று இவையில்லாதார் பெருமை பெருமையாமா! இதனைத் தயை கூர்ந்து சிந்திப்பீர்களாக!”

(தொடரும்)

கலித்தொகை நாடகத் திறன்

டாக்டர் இரா. இராசகோபாலன்,
தமிழ்ப் பேராசிரியர்,
அரசு கலைக் கல்லூரி,
திருவாரூர்.

நாடகம் தமிழில் சிறந்தோங்கி இருந்தமையை, நம் பண்டைய நூல்களில் காணப்படும் செய்திகளால் அறியலாம். தொல்காப்பியத்திற்கு முற்பட்ட அகத்தியம் நாடக இலக்கணம் கொண்டு விளங்கியதாகக் கூறுவர். “அகத்தியனராற் செய்யப்பட்ட மூன்று தமிழ்”[1] என்ற வரியாலும், “அது முதனூலாகிய அகத்தியமே போலும் என்னை? அஃது இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் மூன்று பிண்டத்தினையும் அடக்கி நிற்றலின்,”[2] என்ற பேராசிரியர் உரையாலும் இது விளக்கமாகிறது. புலவர் இயற்றும் பனுவல்களில் உள்ள மரபு பற்றிக் கூறுமிடத்து ‘நாடகம்’ என்ற சொல்லும் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது.[3] இயல், இசை, நாடகம் என்று தமிழை மூன்றாகப் பிரித்து ‘முத்தமிழ்’ என்றே வழங்கி வந்துள்ளனர். ஏனைய மொழிகளில் இப்பிரிவுகள் இருப்பினும், அம்மொழிகள் முத்தமிழ் என்று தமிழை வழங்குதல் போல் வழங்குமாறில்லை. எனினும், தமிழில் நாடகத் திறன்கள் இன்னும் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலையே உள்ளது.

“நாடகம் நடிப்பதற்காக மட்டும் எழுதப்படுவதில்லை. நாவல் மாதிரி, சிறுகதை மாதிரி படிப்பதற்காகவே பிற மொழியிலும் பல ஆன்றோர்கள் அது போன்ற முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர்”[4] என்பர். ஆதலின் நடிப்பதற்கென்றும், படிப்பதற்கென்றும் நாடகம் இரு வகைப்படும். “நடிக்கும் வகையிலன்றி எழுத்து வகையான் அமைந்த நாடக இலக்கியத்துக்கு வடிவு வரையறையில்லை; பொருளைச் சொல்லிச் சொல்லும் முறையில் நாடகப் பண்புகள் அமைந்துள்ளனவா? என்று காணலே தகும்”[5] என்பர்.

சங்கப் பகுப்பாகிய எட்டுத்தொகையில் ஆறாவதாக ‘கற்றறிந்தா ரேத்துங்கலி’ என்று போற்றப்படும் கலித்தொகை இடம் பெற்றுள்ளது.

முதற் பாடலாகக் கடவுள் வாழ்த்தும், பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற வரிசையில் ஐந்திணைக்கும் முறையே 35,29,35,17,33 பாடல்களும் ஆக நூற்றைம்பது

பாடல்களைக் கொண்டது இந்நூல். இவை தனித்தனிப் பாடல்களாகும். கடவுள் வாழ்த்துத் தவிர அனைத்தும் அகப்பொருள் பாட்டுக்களாகும்.

> "கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
> உரிய தாகும் என்மனார் புலவர்"[6]

என்று அகப்பொருள் பாடுவதற்குரிய பாவினம் இரண்டனுள் முதலாவதாக கலிப்பாவைத் தொல்காப்பியம் கூறுகிறது. பாவின் பெயரையே இத்தொகை நூல் பெயராகவும் கொண்டுள்ளது. இத்தொகையில் அமைந்துள்ள ஒவ்வொரு பாட்டும் தனித்தனி நாடகச் செய்யுட்களாக கோத்தமைந்ததாக உள்ளது. எனினும், இவற்றின் நாடகக் கூறுகள் பொது நிலையில் தொகுத்தளிப்பதற்குரியனவாய் உள்ளன.

கலித்தொகை முழுவதும் கலிப்பாவால் ஆனது. தரவு, தாழிசை, தனிச் சொல், சுரிதகம் என்னும் அமைப்பினது, ஒத்தாழிசைக் கலியாகும். இத்தொகை நூலில் ஒத்தாழிசைக் கலிப்பாக்கள் மிகுதியாம்.

ஒத்தாழிசைக் கலி உறுப்புகளில் முதலில் அமைவது தரவு. இப்பகுதியில், தொடக்கம் குறிப்பாகத் தோற்றிப் பின் தாழிசைகளில் கருத்துக்கள் தெளிவாகிக் கேட்போர் வயமாகித் தாழிசை என்ற பெயருக்கொப்பத்தாழுமாறு ஆகித் தனிச்சொல் வழியாகச் சாறு போற் பிழிந்திறுகி, சுரிதகமாகிய முடிப்புப் பகுதியில் சுரிந்து முடியும்.

இவ்வகையில் தரவு தோற்றுவாய்ப்பகுதியாக அமைகிறது. தாழிசை கருத்துக்களை மும்முறை தெளிய விளக்குவதற்குத் தம்மில் ஒத்து மூன்றாய் வந்து கருவாக இருந்த தொடக்கத்தை மேலும் விரிவடையச் செய்கிற கருத்துப் பகுதியாக அமைகிறது. தனிச் சொல் நடுப்பகுதியையும், இறுதிப் பகுதியையும் இணைக்கிறது. சுரிதகம் முடிப்புப் பகுதியாக அமைகிறது.

எட்டுத் தொகை நூல்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, அகநானூறு ஆகிய அகப்பொருள் இலக்கியங்கள் ஆசிரியப்பாவால் அமைய, கலித்தொகைச் செய்யுட்கள் மட்டும் இவ்வாறு நாடகப் புறவடிவம் ஏந்தியுள்ளன.

"கலித்தொகையின் எந்தப் பாடலைப் படிக்கும்போதும் ஒரு சிறந்த சிறுகதையைப் படித்த உணர்வோ, அல்லது ஓர் உயர்ந்த நாடகத்தை அனுபவித்த உணர்வோ ஏற்படுவதை யாரும் உணரலாம்" என்று கூறி "பெரும்பாலான கலித்தொகைப் பாடல்களின் துறைக் குறிப்பே ஒரு சிறு கதைக்கான கதைத் திட்டம் (Plot) போலத்தான் காணப்படுகிறது" என்று விளக்கி,

"தமர் வரைவு மறுத்துழித் தோழி தாயார்க்கு அறத்தொடு நிற்ப, அவள் நற்றாய்க்கு அறத்தொடு நிற்ப", என்று காட்டுகள் பல கூறுவர்[7]. ஆதலின் கலித்தொகைப் பாட்டுகள் கதைப்பாங்குடைய நாடக இயல்பின என்பது போதரும். இதனை "முன்னும் பின்னும் உள்ள நிகழ்ச்சிகளை விடாமல் கூறி, இடையே உணர்ச்சி மிக்கபகுதியையும் அமைத்துக் கதைப் போக்கில் காட்டுவது நாடக நெறி"[8] என்பர். இவ்விதம் அமையக் கலித்தொகை நாடகப் புற வடிவமும் ஏற்றதாய் உள்ளது.

படிப்பதற்குரிய நாடகங்களில் சொற்களால் சூழ்நிலைகள் புனைந்து காட்டப் பெறுதல் வேண்டும். கலித்தொகை அகப்பொருளாய புலனெறி வாழ்வையே பொருளாகக் கொண்டது. பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் முறைமையில் தொகுக்கப் பெற்றது. புலனெறி வழக்கிடைப் பயின்றவை, முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள் எனப்படும். முதற்பொருள் நிலமும் பொழுதும் ஆண்டு வாழும் மக்கள், பறவை, விலங்கு, ஊர், பூ, மரம், உணவு, யாழ், பண், தொழில் முதலாம் கருப் பொருள், புணர்தலும், இருத்தலும், இரங்கலும், ஊடலும், பிரிதலும் உரிப்பொருளாகும். இவற்றில் முதற்பொருளையும், கருப்பொருளையும் காட்சிப் பொருளாகவும், உரிப் பொருளைக் கருத்துப் பொருளாகவும் விளக்கியுரைப்பர்.[9]

உலகியலும், புனைந்துரையும் விரவியதே புலனெறி வழக்கம் என்பதும், அதிலும் அதனைப் பாடுவதற்கு, சிறப்புரிமையாக முதலில் கூறப்படுவது கலிப்பாட்டேயாகும் என்பதும்,

> "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்,
> பாடல் சான்ற புலனெறி வழக்கம்
> கலியே பரிபாட் டாயிரு பாவினும்
> உரிய தாகு மென்மனார் புலவர்"[10]

என்ற தொல்காப்பிய நூற்பாவால் உணரலாம்.

இவ்வாறு அமைந்த பின்புலம் பற்றி "இத் தொகையின்கண் ஐந்திணையின் கருப்பொருள்களின் இயல்புகளும், ஆண்டு வாழும் மக்களின் பெற்றிமைகளும் கிழியில் எழுதிக் காட்டினா லொப்ப அழகுறத் தெளிந்து தோன்றுகின்றன"[11] என்பர்.

நாடகங்களில் பாத்திரங்களின் உரையாடல் உயிர்நாடி போன்றது என்பர். ஏனெனில் காப்பியம், புதினம் ஆகியவற்றில் கிளத்தல் முறையில் கதை கூறுவர். நாடகத்தில், நடிப்பு, உரையாடல்களின் மூலம் கதை கூறப்படும். அதுவும் "அகத்திணை ஒழுக்கங்களில் ஒரு கருத்தை ஒருவர்க்கொருவர் கட்டுரைத்துச்

சொல்லுதலென்பது ஒரு முதன்மையான நிகழ்ச்சியாகும். இக்கருத்தே பற்றிச் "சொல்லிய சொல்லும் வியங்கொளக் கூறு" எனக் கலித்தொகையிலும் ஓரிடத்தில் (193.11) நுவலுவதாயிற்று. இங்ஙனம் பயன்படும்படி கட்டுரைக்கும் முறையில் இக்கலிச் செய்யுளுறுப்புக்கள் நன்கமைந்திருக்கின்றன,[12] என்பர். எட்டுத் தொகை நூல்களில் பிற ஆசிரியப்பாவால் அமைய, கலித்தொகை மட்டும் ஒருவர்க்கு ஒருவர் கட்டுரைத்துச் சொல்லுதற்கேற்ப "ஓரோசை கனத்துத் தொடங்கிப் பின் படிப்படியாக மெல்லோசையாகி மெலியும் தருவாயில் மற்றோர் ஓசை மறுபடியும் கனத்து ஒலித்துச் செல்லும்"[13] பாங்குடைய இயல்பாகவே ஓசை நயம் சிறந்து நிற்கும் துள்ளலோசையுடைய கலிப்பாவால் இயன்றதாகும். ஏனைய எட்டுத்தொகை நூல்களில், தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று என்றே அமையும். கலித்தொகையில்,

"கூற்று மாற்றமும் இடையிடை மிடைந்தும்
போக்கின் றாக லுறழ்கலிக் கியல்பே"[14]

என்று, உரையாடல் வகையில் "ஒருவர் ஒன்று கூறுதற்கு மறு மாற்றம் மற்றொருவர் கூறிச் சென்று பின்னர் நின்றது" என்று பேராசிரியர் உரை கூறுவதற்கொப்ப உறழ்கலியில் அமைந்துள்ளது.

தலைவி

ஏஎ! இஃதுஒத்தன், நாண்இலன் - தன்னொடு
மேவேம்என் பாரையும் மேவினன் கைப்பற்றும்

தலைவன் பதிலும், தலைவி வேட்கை மறுத்து உரைத்தலும்

'மேவினும், மேவாக்கடையும், அஃது எல்லாம்
நீஅறிதி: யான்அஃது அறிகல்லேன்; பூஅமன்ற
மெல்இணர் செல்லாக் கொடிஅன்னாய்! நின்னையான்
புல் இனிது ஆகலின், புல்லினென்'. - 'எல்லா!
தமக்கு இனிது என்று, வலிதின், பிறர்க்கு இன்னா
செய்வது நன்றுஆமோ மற்று?'

"மகளிரை வலிதிற் புணர்தலும் அறநூல் வழக்கு' என,

தலைவன் மொழிதல்.

சுடர்த்தொடீ! போற்றாய் களைநின் முதுக்குறைமை;
போற்றிக் கேள்!
வேட்டார்க்கு இனிதுஆயின் அல்லது, நீர்க்குஇனிது என்று
உண்பவோ, நீர் உண்பவர்?
செய்வது அறிகல்லேன்; யாது செய்வேன் கொலோ -
ஐவாய் அரவின் இடைப்பட்டு, நைவாரா?

'மைஇல் மதியின் விளங்கு முகத்தாரை
வௌவிக்கொளலும் அறன்' எனக் கண்டன்று.

கலித்தொகை 62 ஆம் பாடற்பகுதி இவ்வாறு அமைந்தமைக்கு ஒரு சான்றாகும்.

நாடகங்களில் பேச்சு மொழி இடம் பெறும்.

இதனை,
"சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலனென மொழிப் புலனுணர்ந்தோரே"[15]

என்று தொல்காப்பியத்தில் நாடக இலக்கிய வகையாகக் கருதப் படும் 'புலன்' வனப்பில்' குறிப்பிடப்படுகிறது.

எட்டுத் தொகையில் பிற நூல்கள் அன்பின் ஐந்திணையையே பாடுகிறது. அவ்வாறு, அல்லாமல் கலித்தொகையில் நடப்பியலை ஏற்றுக் கைக்கிளை, பெருந்திணை பற்றியதாகவும் பாடப்பட்டுள்ளது. எல்லாத் தரப்பினரும் பாத்திரங்களாக இடம் பெறுகின்றனர். மருதக்கலியில் கூனி - குறளன் (கலி. 94) உரையாடலும் இடம் பெற்றுள்ளது. ஆகவே, அவ்வப் பகுதியில் மக்கள் பேசும் பேச்சு மொழிகளும் இடம் பெற்றுள்ளது. ஆதலின் "பிற அக நூல்களில் காணப் பெறாத 'நின்றீத்தை' (93) 'போசீத்தை' (93), 'பாடித்தை' (130), 'இஃதொத்தன்' (84) போன்ற சொற்கள் இதில் இடம் பெற்றுள்ளன"[16] என்பர். அவ்வவ் பகுதியில் வாழும் மக்கள் ஆண்பாலராயின் 'ஏடி', என்று பெண்பாலரை விளிப்பதும், பெண்பாலாராயின், 'எல்லா', 'ஏடா' 'ஏஎ' என்று ஆண்பாலரை விளிக்கும் பேச்சு மொழிகளும், "பேசுந்தமிழ் பேசுநர்க் கேற்ப அமையுமென"[17] குறிப்பிடப் படுவது போல், கலித்தொகையில் சேரி மொழிகள் இடம் பெற்று, நாடக இலக்கண நெறி கூறும் புலன் வனப்பினதாய்ப் பொலிகிறது.

' கலித்தொகைப் பாட்டுக்களில் ஒத்தாழிசைக் கலியுறுப்பாகிய தனிச்சொல், வந்து இரண்டு கருத்துக்களைத் தொடர்பு படுத்தி இணைக்க, உதவுகிறது. அவ்விதம் 'என ஆங்கு', 'என இவன்', 'என நின்', 'அதனால்', 'இனி யான்', 'என நீ', 'என நாம்' 'அவனை', 'என்று நின்', 'ஆங்க', 'கேட்டீ', 'ஆங்கு', 'ஆங்கு இனி', 'அவ்வழி', 'என', 'அவ்வழி', 'என நாம்', 'ஆங்கு அதை', 'எனப்பாடி', முதலாய சொற்கள் இடம் பெற்றுள்ளன. "சிலப்பதிகாரம் நாடக நூலாதலின் காட்சிகளுக்கிடையே தொடர்பு சுட்ட, ஒரு முழுப் பாடல் கொடுத்து காலம் நீட்டியாது தனிச் சொல்லைப் பயன்படுத்தினர். கதைப் போக்கின் ஓட்டத்தை, வேகப்படுத்தினர். 'உரையிடையிட்ட' என்பதற்குச் 'சொல்லிடை

யிட்ட' என்பதுவே பொருள். (உரை - சொல்) என்பர். ஆங்கு, அதனால், அவளுந்தான், அவனுந்தான், அவரை, அவ்வழி என்று அதில் பயிலும் சொற்களை உரைச் சொல்லாகச் சுட்டுவர்.[18]

தனிப்பாட்டுக்களாக விளங்கும் கலித்தொகையில் உரைச் சொற்கள் இடம் பெற்றிருப்பது நாடகப் பயன் விளைத்தற் பொருட்டேயாம். இவ்விதம் எட்டுத்தொகையின் பிற நூல்களில் பயிலாததும் ஒப்பு நோக்க, கலித்தொகைச் செய்யுட்களின் நாடகப் போக்குத் தெளிவுறும்.

இன்றைய நாடகங்களில் தனி மொழி மிகுதியும் பயன்படுத்தப்படுகிறது. இத்தனி மொழி பாத்திரம் தன்னைத் தானே ஆராயும் ஆராய்ச்சியாகும். எல்லை மீறி அமைந்தால் அலுப்புத் தட்டுமாதலின் அளவு மீறாது அமைதல் வேண்டும். "தமிழ் மொழியில் முன்னர் இருந்த நாடகங்களில் 'தனி மொழி' உண்டா என்பது நாம் அறிய முடியாத ஒன்று"[19] என்பர்.

தனி மொழி என்பது பாத்திரங்களின் பண்பை எண்ண வெளிப்பாடு மூலம் விளக்குவதற்கு நாடக ஆசிரியன் மேற்கொள்ளும் உத்தியாகும். இவ்வுத்தி கலித்தொகையில்

> **"அறனும் அதுகண்டற் றாயின், திறன் இன்றி,**
> **கூறும் சொல் கேளான். நலி தரும்: பண்டு நாம்**
> **வேறு அல்லம் என்பது ஒன்று உண்டால் அவனொடு**
> **மாறுஉண்டோ, நெஞ்சே! நமக்கு?[20] "**

என்று 'புணர்ச்சிக்கு உடம்பட்டு தலைவி நெஞ்சோடு கூறுதலாக" அமைந்துள்ளது. இப்பாடலேயன்றி 84, 87, 94, 105 ஆகிய பாடல் களிலும் முறையே 'தலைவி தன் நெஞ்சு அழிந்து கூறுதல்', 'தலைவி நெஞ்சோடு கூறல்', 'அவள் செலவு நோக்கிக் குறளன் தன் நெஞ்சிற்கு உரைத்தலும்', 'தோழி தன் நெஞ்சோடே தலைவி விரும்பக் கூறியது' என்று தனி மொழிகள் அமைந்துள்ளன.

இதனால் நாடக ஆசிரியன் தான் நேர் நின்று பேச இயலாத இடங்களில், இவ்விதம் தனிமொழி மூலம் பாத்திரங்களின் பண்பை வெளிப்படுத்தும் உத்தி கலித்தொகைச் செய்யுள் நாடகத்திறன்களின் ஒன்றாகவும் அமைந்திருத்தல் வெள்ளிடை மலை. ஆதலின் தமிழ் மொழியில் முன்னர் இருந்த நாடகச் செய்யுட்களில் தனி மொழி உண்டு என்பது போதரும்.

'மெய்ப்பாடு' என்பது நாடகத் திறன் பற்றிய செய்தியாகும். கலித்தொகைக்கு நச்சினார்க்கினியர் உரையானது, செய்யுள் தோறும் மெய்ப்பாடும், பயனும் தெரிவித்து இயன்றுள்ளது.

இவ்வாறு இயன்றமை கொண்டு கலித்தொகையின் நாடகத்திறன் உணர்த்தப்படுதல் தேர்தற்பாற்றாம்.

இவற்றால் கலித்தொகைச் செய்யுட்கள் நாடக அக வடிவம் தழுவிய நிலை புலனாகும்.

இத்தகு செய்திகள் கலித்தொகை நாடகத்திறனையும், அவை நாடகச் செய்யுட்களே என்பதனையும் கூறா நிற்கும்.

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், உவமையியல், 37 பேராசிரியர் உரை.
2. மேற்படி செய்யுளியல், 172
3. மேற்படி அகத்திணையியல். 56.
4. த. செயகாந்தன், த.1, 'முன்னுரை' சினிமாவுக்குப் போன சித்தாளு, செப். 1972, பக்.7.
5. மாணிக்கம், வ. சு. ப. 'சிலப்பதிகாரத் திறன்' இரட்டைக் காப்பியங்கள், திசம்பர், 1960. பக். 40-41.
6. தொல்காப்பியம், அகத்திணையியல், 56.
7. தண்டாயுதம், இரா. சங்க இலக்கியம், நவ. 1978, பக். 301, 306.
8. வரதராசன், மு. 'முன்னுரை', குறுந்தொகைச் செல்வம், சூலை, 1958, பக். 5.
9. வேங்கடசாமி நாட்டார், ந.மு., கலித்தொகைச்சொற்பொழிவுகள். மார்ச்சு, 1940. பக்.8.
10. தொல்காப்பியம், அகத்திணையியல், 56.
11. வேங்கடசாமி நாட்டார். ந.மு., கலித்தொகைச் சொற்பொழிவுகள், சனவரி 1967. பக். 10-11.
12. இளவழகனார். கலித்தொகைச் சொற்பொழிவுகள். சனவரி 1967. பக். 24.
13. இளவழகனார், கலித்தொகைச் சொற்பொழிவுகள், சனவரி 1967, பக். 25 - 26.
14. தொல்காப்பியம். செய்யுளியல். 149.
15. தொல்காப்பியம், செய்யுளியல். 233.
16. இராசமாணிக்கனார். மா., தமிழ்மொழி - இலக்கிய வரலாறு. நவம்பர் 1976, பக். 208.
17. பரிதிமாற் கலைஞர், நாடகவியல், நூ. 66, 70.
18. மாணிக்கம், வசுப. 'சிலப்பதிகாரத்திறன்', இரட்டைக் காப்பியங்கள். திசம்பர், 1960. பக். 42.
19. ஞானசம்பந்தன், அ.ச. இலக்கியக்கலை சூலை1964. பக். 348.
20. கலித்தொகை. செப். 62.

மாணிக்கவாசர் காலத்தில் ஆசீவகர்

பேராசிரியர், ஆ. சிவலிங்கனார், மயிலம்

முன்னுரை

மாணிக்கவாசகர் காலத்தைப் பற்றிப் பலர் பலவாறு கூறுவர். மறைமலையடிகள் கிபி. மூன்றாம் நூற்றாண்டு என்று வரையறை செய்து கூறியுள்ளார்*, அக்காலம் ஆரிய வேத எதிர்ப்புக் காலம்; எதிர்த்தவர்கள் ஆசீவகர், பௌத்தர், சைனர் முதலியோர்.

மாணிக்கவாசகர் தம் காலத்தில் அறுவகைச் சமயங்கள் இருந்தன என்றும் அவை பேய்த்தேர் (கானல்நீர்) போன்றன என்றும் கூறியதோடு, அவற்றின் வேறான கடவுள் உண்டு எனும் கோட்பாடில்லாத உலோகாயதன் (திருவாசகம் 4:56) புத்தன் (250, 318) ஆகியோரையும் கூறியுள்ளார்.

ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர். (4:46-47)

எனக் கடவுட் கோட்பாடில்லாதவர்களைப் பற்றிக் கூறினார். 'ஆப்தன்' எனும் சொல் 'ஆத்தன்' என மருவும், 'ஆத்தன்' என்பது அருகநிலையடைந்தவனையும் தலைவனையும் குறிக்கும்.# சமயத்தலைவர்களையே 'ஆத்தமானார்' என மாணிக்கவாசகர் குறிப்பிட்டார். நாத்திகம் பேசிய ஆத்தமானார் என்பவர் பௌத்தர் சைனர், ஆசீவகர் முதலியோர் ஆவர். சைனரையும் ஆசீவகரையும் மாணிக்கவாசகர் தம் பாடல்களில் எங்கும் குறிப்பிடாத காரணத்தால் அவ்விருவரினும் பௌத்தர்களே அவர்காலத்தில் தமிழகத்தில் பெரிதும் பரவியிருந்தனர் எனக்கொள்ளலாம். அவர் புத்தரொடு வாதிட்ட வரலாறும் சான்று பகரும். எனினும், அவர் பாடல்களை ஊன்றிப் படிக்குங்கால் அவர், ஆசீவகர் கோட்பாடுகளையே மிகுதியும் மறுத்துள்ளமை புலப்படும். அதனால் மாணிக்கவாசகர் காலத்தில் தமிழகத்தில் ஆசீவகர் பெரிதும் பரவியிருந்தனர் என அறியலாம். இக்கட்டுரை ஆசீவகர் கோட்பாடுகளை மாணிக்கவாசகர் மறுத்துள்ளமை கண்டு அதனை வற்புறுத்துவதையே நோக்கமாகக் கொண்டதாகும்.

---

* மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், கழக வெளியீடு (1957)

\# தமிழகத்தில் ஆசீவகர்கள் பக்.114. ர.விஜயலட்சுமி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113 (1988)

ஆசீவகக் கோட்பாடுகள்*

1. உலகம் நிலவணு, நீரணு. தீயணு, காற்றணு, உயிரணு எனும் ஐந்து அணுக்களால் இயங்கி வருகின்றது. இவ்வணுக்கள் ஒன்றனுள் ஒன்று புகப்பெறா. அவற்றின் குணங்கள் இயல்பானவை. ஒருவரால் அமைக்கப்பட்டனவல்ல.
2. மனித உயர் தாம் கொள்ளும் தொழில்களுக்கேற்ப நிறங்கள் உடையன. கருமை, நீலம், செம்மை, பசுமை, வெண்மை, கழிவெண்மை என்பன நிறங்கள். ஆசீவகத்தலைவன் மற்கலி என்பான் கழி வெண்மை நிறத்தன்.
3. உயிர்களுக்கு நான்கு நியதிகள் உண்டு. ஆவது ஆம், ஆம் வகை ஆம், ஆம் அளவு ஆம், ஆம் காலத்து ஆம் என்பன. அவை, 'சதுவாநியதம்' எனப்படும்.
4. அணுக்கள் மாறுபடா நிலைபேறுடையன. 'அவிசலிதநித்தியத்துவம்' எனப்படும்.
5. உயிர்கள் செய்வனவும் பெறுவனவும் அவை கருவிற்பட்ட போதே நியமிக்கப்படுபவை. உயிர்களின் வினை காரணமாக வருபவையல்ல. வினை என்பது இல்லை.
6. உயிர் அடையும் இறுதிநிலை வீடுபேறு. அது திரும்ப வாரா நிலையில் உள்ளதும் வரும் நிலையில் உள்ளதும் என இருவகைப்படும். வீடுபேறடைந்த உயிர் சில காலம் இருந்து மீளவும் உலகில் தோன்றும். இந்த வீடுபேறு 'மண்டல நெறி' எனப்படும். திரும்பவும் வாரா வீடுபேறு 'செம்போதக நெறி' எனப்படும்.

மேலே கூறப்பட்டவையே யன்றிப் பிற கோட்பாடுகளும் உண்டு. அவை பிற மதத்தவர்களும் கைக் கொள்ளக் கூடியனவே. அதனால் மேலே குறிப்பிட்டனவற்றை மாணிக்கவாசகர் எவ்வாறு மறுக்கிறார் என்பதை இனிக்காண்போம்.

1. அணுக் கோட்பாடு

உயிரணு தவிர மற்றைய நில நீர் தீ காற்றணுக்கள் மிகுதியும் குறைவுமாகக் கலந்தே நிலம் நீர் தீ காற்று அமைகின்றன. நிலமானது நிலவணு நான்கு விழுக்காடும் நீரணு மூன்று விழுக்காடும் தீயணு இரண்டு விழுக்காடும் காற்றணு ஒரு விழுக்காடும் ஆகச் சேர்ந்தே உருப்பெறுகிறது. இப்படியே நீரணு நான்கு விழுக்காடும் மற்றவை குறைந்தும் சேர்ந்ததே நீராகும். இப்படியே பிறவும் ஆகும்".

---

* தமிழகத்தில் ஆசீவகர்கள் பக். 17–40

ஆசீவகர் ஆகாயத்தை ஒருபொருளாகக் கருதவில்லை. மாணிக்கவாசகர் ஆகாயமும் ஒரு பொருள் (பூதம்) என்னும் கொள்கையுடையவர் அதையும் சேர்த்து இறைவனானவன் அவ்வைந்தாகவும் இருப்பவன் என்றார். என்னும்போது நிலமானது நீர் தீ காற்று ஆகாயம் சேர்ந்து ஐந்தாகவும், நீரானது நிலம் தவிர மற்றையன சேர்ந்து நான்காகவும், தீயானது நிலம் நீர் தவிர காற்றும் ஆகாயமும் சேர்ந்து மூன்றாகவும், காற்றானது நிலம் நீர் தீ தவிர ஆகாயத்துடன் சேர்ந்து இரண்டாகவும், ஆகாயம் தான் ஒன்றேயாகவும் அமைந்தன என்றும், அவ்வமைப்பில் இறைவன் கலந்துளான் என்றும் மாணிக்கவாசகர் கூறினார்.

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி. *(4:137-141)*

என்றது காண்க. எனவே நிலம் முதலிய யாவும் இறைவனால் படைக்கப்பட்டவையே தவிர அவை இயல்பாய் அமைந்தவை யல்ல என்பது மாணிக்கவாசகர் கோட்பாடு என்பது புலப்படும்.

நிலத்தின் குணம் வலிமை; நீரின் குணம் குளிர்மை; தீயின் குணம் வெம்மை; காற்றின் குணம் அசைதல். இவை இயல்பிலேயே அமைந்தவை என்பது ஆசீவகர் கோட்பாடு. மாணிக்கவாசகர் அவற்றுக்கு அக்குணங்கள் இறைவனால் அமைக்கப்பட்டன என்னும் கோட்பாட்டினர்.

"தீயின் வெம்மை செய்தோன்: பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன்: மேதகு
காலின் ஊக்கம் கண்டோன்: நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்: வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்." (3: 22-26)

என்னும் அவர் வாக்கினைக் காண்க.

ஆசீவகர் ஓரணுவுள் ஓரணு புகுதல் இல்லை என்பர். மாணிக்கவாசகர் இறைவன் அணுவுள்புக்கும் அணுவுள் நிறைந்தும் இருப்பன என அவர்களை மறுப்பர்.

"அணுத்தரும் தன்மையில் ஐயோன்" (3:45)
"நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே" (50)
"என்னுள் புகுந்தனன்" (51)

சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால் (1:17) என்பன அவர் வாக்கு.

(தொடரும்)

நூல் மதிப்புரை

நூல்	:	விருந்தும் மருந்தும்
ஆசிரியர்	:	கவிமாமணி வேலூர் ம. நாராயணன். எம்.ஏ.
வெளியீடு	:	நிறைவாணன் பதிப்பகம், தமிழ்ச் சோலை, 3. பெரியார் வீதி, பாவேந்தர் நகர், ரங்காபுரம், வேலூர் – 632 009. வ.ஆ.அ. மா
பக்	:	124 விலை : ரூ. 28/-

வெண்பா விருந்து முதலாக தோரணங்கள் ஈறாகப் பத்து மேடைச் சொற்பொழிவுகள் விருந்தும் மருந்துமாக உருவெடுத்துள்ள நூல். அழகான முகப்பு; அருமையான அச்சு.

"புலவர்க்கு வெண்பா புலி" என்பர். அந்தப் புலியை அருந்தமிழ்ப் பாவலர்கள் எப்படியெல்லாம் ஆட்டிப்படைத்திருக்கிறார்கள், என்பதை மிகத் தெளிவாக விளக்கிச் செல்கிறது வெண்பாவிருந்து என்னும் பொழிவு. தலைவனுக்குத் தலைவியின் நோக்கே நோயும் மருந்துமாக இருப்பது போலே இலக்கியம் விருந்தும் மருந்துமாக விளங்குகிறது என்பதை அடுத்து வரும் பொழிவு அழகு நடையில் செல்கிறது.

பாரதியார் அக்கினி என்றால் பாரதிதாசன் அக்கினிக் குஞ்சு என்பதை அவர்களின் பாடல்களைக் கொண்டு நிறுவுகிறது 'அக்கினியும் குஞ்சும்' பெரியாரின் மனித நேயம் பற்றிய ஆய்வில் தோய்ந்த ஆசிரியர் பொதுவான மனித நேயம் எது என்பதை உலகளாவிய பார்வையில் கண்டு தெளிந்து தெரிவிக்கும் கருத்துகள் மனிதனாக வாழ நினைக்கும் ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெற வேண்டியவை. எஞ்சியுள்ள பிறவும் இலக்கிய விருந்து; அறியாமை மம்மர் அறுக்கும் மருந்து.

கண்டதைப் படித்தவன் பண்டிதன் ஆவான் என்பர். கண்டதைப் படிக்கப் பலராலும் இயலுவதில்லை. கண்டதைப் படித்து அவற்றில் நல்லவை எனத் தான் கண்டதையெல்லாம் திரட்டித் தந்துள்ள ஆசிரியரின் பணி பாராட்டத்தக்க பணி.

அறுசுவை நல்கும் அமுதப் பொழிவே
விருந்தும் மருந்தும் விரும்பு.

– வே.இரா. சிவஞான வள்ளல்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்)	10 00
திரு. முருக விசாகநம்பி அவர்கள்	5 00
தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்	5 00
திரு. த. ஆறுமுகம் அவர்கள், சென்னை – 79.	5 00
தவத்திரு. ஈசுவரனார் அவர்கள்	5 00
திரு. வேணுகோபால் அவர்கள் சாந்தி திரையங்கம், சென்னை – 2.	25 00
திரு. K.E. மணவாளன், பெங்களூர்	10 00
திரு. N.S. இராஜலெட்சுமி, முத்தையால் பேட்டை தெய்வீக சங்கம்	200 00
திரு. முனைவர் மு.ச. சிவம், ஈரோடு	10 00
தாமரைச் செல்வி D/o. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18.	10 00
முத்துமணி D/o. திரு. பொ. பாலசுப்பிரமணியம், சென்னை – 18.	10 00
திரு. ப. கோவிந்தராசு, மதுரை	35 00
திரு. மன்றவாணன், சென்னை – 12	50 00
டாக்டர் பொன் கோதண்டராமன், சென்னை – 20	50 00
டாக்டர் பூவண்ணன், கோவை – 11	10 00
திரு. மு. துரைசாமி, மலேசியா	100 00

மறைமலையடிகள் கலைமன்ற வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்)	10 00
தவத்திரு. ஈசுவரனார் அவர்கள்	5 00
ஜெயா தங்கமாளிகை, பல்லாவரம், வழிபாட்டுச் செலவு	25 00
திரு. அருணாசலம், சென்னை – 15	10 00

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை – 108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிப்.

அருள்நந்திசிவம் அருட்பணி மன்ற வெளியீடு

சிவஞானபோதம் - விளக்கவுரை	60	00
சைவசித்தாந்தம் - சு. மணி	8	00
சிவப்பிரகாசம்	22	00
திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார்	20	00
மெய்கண்ட நூல்களுள் ஏழு	30	00
சிவஞானமாபாடியம்	260	00
சிவஞானசித்தியார்	60	00
தசகாரியம்	11	00

கிடைக்குமிடம்
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.,
154, டி. டி. கே. சாலை, சென்னை-18.

WORKS OF Dr. G. U. POPE

TIRUKKURAL (Paper Pack)	120	00
,, (Hard Bound)	295	00
NALADIYAR	495	00
TIRUVASAGAM	495	00

ASIAN EDUCATIONAL SERVICES
No. 5, SRIPURAM FIRST STREET,
ROYAPETTAH, MADRAS-600 014.

பதிவு எண் : M/4899 ஜூலை--1996

கழகப் புதிய வெளியீடுகள்

மாமனிதர் மண்டேலா	
- இராம்குமார்	75 00
நினைவுத் திரைகள் (என் வரலாறு)	
- கா. பொ. இரத்தினம்	90 00
திருவாசகம் தெளிவுரை	
- ப. இராமநாத பிள்ளை	75 00
மருத்துவத் தமிழ் முன்னோடி - டாக்டர் கிறீன்	
- அம்பி	35 00
இதயமும் இதய நோய்களும்	
- தமிழும் பன்னீர்செல்வம்	25 00
திருமுருகன் அந்தாதி	
- ம. அரங்கநாதன்	5 00
நெல்லை மாவட்டச் சித்தர்கள்	
- சக்தி பி. சுப்பிரமணியம்	40 00
மானிட உடல் இயக்கவியல்	
- டாக்டர் கதிரேசன்	35 00
மருத்துவத் தமிழ்க் களஞ்சியம்	
- டாக்டர் கதிரேசன்	35 00
ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும்	
- சு. ந. சொக்கலிங்கம்	45-00
விண்வெளிப் பயணம்	
- டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்	35-00
நமது உடல்	
- டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்	30 00
முல்லாவின் கதைகள் முப்பது	
- புலவர் இரா. இளங்குமரன்	18 00
பூமியின் கதை	
- என். கே. வேலன்	22 00
வங்காளப் பழமொழிகள்	
- டாக்டர் கொ. முத்தையா	25 00
புதையல் வீடு	
- டாக்டர் பூவண்ணன்	30 00
அறிவியல் ஆராய்ச்சிகள்	
- என். குழந்தை, பி.ஏ.	20 00
விஞ்ஞான முன்னோடிகள்	
- என். குழந்தை. பி.ஏ.	45 00

அப்பர் அச்சகம், சென்னை-108.

"செந்தமிழ்ச் செல்வி"
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை
இதழாசிரியர் குழு
முனைவர் பொன் கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப அறவாணன்
முனைவர் பொன் சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்
ஆசிரியர் ; இரா. முத்துக்குமாரசுவாமி, எம்.ஏ., பி. லிப்.,

உள்ளுறை

	பக்கம்
எண்பதிலும் இளமை	441
மாணிக்கவாசகர் காலத்தில் ஆசீவகர்	446
பாவேந்தர் நினைவுகள்	449
தமிழ்த்தூண் தாமோதரனார்	451
தலைவ, நீ வாழ்க !	458
திரு நேரிசை - இது பண்ணா	459
தமிழ் நாகர் - தொடர்கிறது	461
சிந்தனைப் புரட்சி எழ வேண்டும் !	463
பின்லாந்து தேசிய காவியம் : கலேவலா	464
சித்தர் எண்ணியர்	468
இன்னிலை கூறும் பொருளியல்	470
மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை	480

மானிட உடலியக்கவியல்
டாக்டர் அ. கதிரேசன் எம். டி.,
இந்நூல் தமிழில் மருத்துவ அறிவியல் செய்திகளை புரிந்துகொள்ள பெரிதும் உதவுகிறது. தசைமண்டலம், எலும்புமண்டலம் மூச்சு மண்டலம் எனப் பல மண்டலங்களைப்பற்றி அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. நமது உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நமக்கு எளிமையான முறையில் அனைவருக்கும் புரியும்படியாகக் கூறுகிறார்.
விலை ரூ. 35/-

செந்தமிழ்ச் செல்வி
தி. வ. ஆண்டு 2027 - ஆடி
ஆகஸ்டு - 1996
சிலம்பு - 70 பரல் - 12

எண்பதிலும் இளமை

தமிழ் இலக்கியம், இலக்கியத் திறனாய்வு, மொழிப் புலமை, சமய இலக்கியம், சைவ தத்துவம் போன்ற பலதுறைகளில் வல்லவரும் சிறந்த மேடைச் சொற்பொழிவாளரும், பட்டிமன்றம், வழக்காடு மன்றம் போன்றவற்றின் சிறந்த தலைவரும் எண்பதைக் கடந்தும் இளமை குன்றாது திகழ்பவருமான பேராசிரியப் பெருந்தகை அ.ச. ஞானசம்பந்தனார் அவர்கள் அண்மையில் எண்பது அகவை நிறைந்தமையை மிக எளிமையாகக் கொண்டாடினார்கள். அருஞ்சொல் விளக்கனார் அ.மு. சரவண முதலியார் பெற்றெடுத்த பெருஞ்செல்வம் அ.ச.ஞா. இந்த மூன்றெழுத்தையும் சுருக்கி அ.ச. என்று கூறுவாருமுளர்.

"சரவண முதலியார் ஒரு சைவத் தமிழ்க் கடல் அக்கடலினின்றும் பிறந்த கற்பகம் ஞானசம்பந்தம். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் இளநிலைப் பட்டம் பெற்றார். அவ்வமயத்திலிருந்து இவர் நோக்கு அறிவியல் நோக்காயிற்று. எதையும் அறிவியல் கண் கொண்டு நோக்குவார். இன்றும் நோக்குகிறார். ஞானசம்பந்தர் இயற்கையில் விஞ்ஞானி. அவர் எம்.ஏ.வில் 'விஞ்ஞானம்' எடுப்பாரென்று யான் எதிர்பார்த்தேன். அவர் தம் தந்தையார் விரும்பியவாறு தமிழ்' எடுத்தார் என்று கேள்வியுற்றேன். சிறிது வருந்தினேன். தமிழ் மீது எனக்கு எவ்விதக் காழ்ப்புமில்லை. ஞானசம்பந்தர் தமிழில் பட்டம் பெற வேண்டுவதில்லை என்பதும் அவர் ஆறாம் பாரத்திலேயே புலவராயினர் என்பதும் என் உள்ளக் கிடக்கை" (திரு.வி.க.)

தமிழில் முதுகலைப்பட்டம் பெற்றபின் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணியேற்றார். திருமதி இராஜம் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டு இல்லறமாம் நல்லறத்தைத் தொடங்கினார். "சம்பந்தருடைய வேக வெம்மைக்குக் கிடைத்த தண்மை" இராஜம் அம்மையார். அது

மட்டுமல்ல. ஞான சம்பந்தர் வாழ்க்கைக்கு அறிவும் அன்பும் மல்கிட ஒரு பெருஞ்செல்வம் கிடைத்த தென்றே யான் சொல்வேன். (திரு.வி.க.)

இளமையிலேயே பேச்சுக் கலையில் தேர்ந்தார். "ஞானசம்பந்தர் பேச்சு, பிள்ளைமைப் பேச்சு; தமிழ்ப் பேச்சு. எனது இளைப்பு, களைப்பு எல்லாம் விலகும். அப் பேச்சுக்களிடைச் சீர்திருத்தம் நுழையும். அஃது எனக்கு மகிழ்ச்சியூட்டும். 'உற்ற வயதில் இவர் ஒரு பெருஞ் சீர்திருத்தக் காரராய் நாட்டுக்கு நலஞ் செய்வர்' (திரு.வி.க.). அன்று தொடங்கிய மேடைப் பேச்சு இன்று வரை மெல்லிய பூங்காற்றாய், இடை இடையிடையில் புயல் காற்றாய், தமிழ் நாட்டு மேடைகளில் வீசிக்கொண்டிருக்கிறது.

இவர்தம் பேச்சுக்கு உறுதுணையாக இருப்பது இவர் தம் குரல்வளம். கணீரென்ற குரல். ஏற்ற இறக்கத்துடன் கூடியது. கேட்டார்ப் பிணிக்கும் தகையது. கேட்டுக் கொண்டேயிருக்கலாம் என்று எண்ணத்தக்கது. முடிந்த பின் பேச்சு முடிந்து விட்டதே இன்னும் தொடரவில்லையே என்று எண்ணி வருந்தத்தக்கது. சீர்காழிக்காரர் அன்னையின் பால் ஞானப்பால் அருந்தியவர். யாரிடம் ஞானப்பால் பெற்றாரோ இந்தச் சிராப்பள்ளிக்காரர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இளமை முடுக்குடன் மேடைகளில் கணீரென ஒலித்த குரல் - இன்று எண்பதிலும் இளமையாக - அதே கம்பீரம், அதே கணீரென்ற குரல். எதிரில் இருக்கும் அனைவரையும் விடத் தனக்கே எல்லாம் தெரியும் என்ற அதிகாரத்துடன் கூடிய குரல். எதிர்த்துப் பேச விழை பவர்களையும் அடக்கி வைக்கும் குரல். சென்ற நூற்றாண்டில் சைவ சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர் எழுப்பிய குரல். இந்த நூற்றாண்டு முழுவதுக்கும் இவர் ஒருவர் வழியாகவே ஒலித்துக் கொண்டிருக்கும் குரல்.

"உமது நெற்றியில் ஏன் திருநீறில்லை என்று முன்பு ஞானியார் அடிகள் வினவ "சைவம் திருநீற்றில்தான் இருக்கிறதா" என்று இளமைத் துடுக்குடன் எதிர்க் கேள்வி கேட்டாலும் ஆன்று அவிந்து அடங்கிய இன்றைய நிலையில் நெற்றி நிறைய நீறுபூசி, இன்றைய வெண்தாடி வேந்தராய், நீள் முடியினராய், இருபதாம் நூற்றாண்டுச் சித்தராய்க் காட்சியளிக்கிறார் அ.ச.ஞா.

பேசுதல் யார்க்கும் எளிது. எழுதுகோல் எடுத்து எழுதுதல் கடினம். அ.ச.ஞா. பேச்சில் எவ்வளவு வல்லவரோ அவ்வளவு

எழுத்திலும் வல்லவர். எழுத்தில் புரட்சி வெடிக்கும். இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் எல்லோரும் பிறன் மனை நோக்கும் பித்தனாக இராவணனை இழிவாகப் பேசிய நிலையில், அவனுடைய அருமை பெருமைகளை எடுத்துச் சொல்லி 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்' என்ற அரிய நூலை எழுதினார். கிப்பனின் 'ரோமப் பேரரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்' போல இந் நூல் புகழ் பெற்றது.

கம்பராமாயணம் இவர்தம் கைவந்த கலை என்பதைக் 'கம்பன் கலை' நாட்டுக்கு உணர்த்தியது. தம்பியர் இருவர், அரசியர் மூவர், நாடும் மன்னனும் போன்ற நூல்கள் இன்றைய கம்பராமாயணப் பட்டிமன்றப் பேச்சாளர்கட்குக் கையேடுகள். இவற்றுக்கு மேலாகக் கோவைக் கம்பன் கழகத்திற்காகக் கம்பராமாயணத்திற்குப் புத்துரை காணும் பணியில் ஈடுபட்டு, இவர் தலைமையின் கீழ் அமைந்துள்ள உரையாசிரியர் குழு இதுவரை முதல் ஐந்து காண்டங்களுக்கு உரையெழுதி வெளியிட்டுள்ளது. எஞ்சிய காண்டங்கள் தொடர்கின்றன.

இவருக்கு இலக்கியத் திறனாய்வு உலகில் பெருமை தேடித்தந்தது இலக்கியக் கலை. பல்கலைக்கழக அளவில் இலக்கியத் திறனாய்வு பாடமாகப் புகுத்தப்பட்ட போது வேறு நூல் இல்லாத நிலையில் இது எழுதப்பெற்றது. இன்றும் இதுவே இத்துறையில் முதல் நூல் ஆகும். முதல் தரமான நூலும் ஆகும். தர்ஸ்டனையும், ஐ.ஏ. ரிச்சர்ட்சையும் ஆங்கிலத்தில் படித்துப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இந்நூல் அனைத்து இலக்கியத்திறனாய்வு முறைகளையும் அழகுதமிழில், இனிய நடையில் தந்துள்ளது.

எந்தச் செய்தியையும் எளிதாகவும் இனிமையாகவும் எடுத்து விளக்குவதில் வல்ல பேராசிரியர் பயனுள்ள பல நூல்களைப் படைத்தார்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் துறையில் 1940இல் சேர்ந்த பேராசிரியர் 1957 வரை பணி புரிந்தார். அங்கிருந்து அனைத்திந்திய வானொலி நிலையத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகச் சென்றார். சில ஆண்டுகள் வானொலிப் பணிக்குப்பின் தமிழக அரசுத் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநரானார். தமிழில் நல்ல அறிவியல் நூல்கள் வெளிவரத் துணைநின்றார். சில ஆண்டுகள் அதில் வேலை பார்த்த பின் மீண்டும் ஆசிரியத் தொழிலில் இணைந்தார். புதிதாக உருவாக்கப்

பெற்ற மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றார். அறுபதாம் அகவையில் ஓய்வு பெற்றார். பத்து ஆண்டுகள் கழித்து மீண்டும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தத்துவத் துறையில் பேராசிரியர் பொறுப்பேற்றார். சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரிய புராணத்தைப் புதிய கோணத்திலிருந்து ஆய்வு செய்து அருமையான நூலை இயற்றினார். மூன்றாண்டுகளில் அதிலிருந்தும் ஓய்வு பெற்றார்.

தம் ஓய்வுக் காலத்தைக் கம்பராமாயாணப் பொழிவுகளிலும் சமயச் சொற்பொழிவுகளிலும் ஈடுபடுத்தி வருகிறார்.

கடந்த நான்காண்டுகளுக்கு முன்பு சைவநாயன்மாரின் சமுதாயப் பணியை நாட்டுக்கெடுத்துரைப்பதற்காக 'சேக்கிழார் ஆய்வு மையத்தைத் தொடங்கினார். அதன் வழி திரு.வி.க. அவர்களின் குறிப்புரையுடன் கூடிய பெரிய புராணத்தை மீண்டும் அழகாக அச்சில் பதிப்பித்தார். நான்காண்டுகளாகச் சேக்கிழார் விழாவைச் சென்னையில் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்.

எண்பதைக் கடந்த நிலையிலும் இவர்தம் எழுத்துப் பணி தொய்வடையவில்லை. வடமொழிப் புராணங்களின் சிறப்பை எடுத்துக் கூறும் 'பதினெண் புராணங்கள்' நூலை இரு தொகுதிகளாக இம்மாதம் வெளியிட்டுள்ளார். இவர்தம் எழுத்துப் பணிக்கு உதவிவருபவர் இவர்தம் திருமகளார் ஞா.மீரா அம்மையார்.

இவ்வளவு அரிய பணிகளைச் செய்துள்ளமைக்காகப் பேராசிரியர் அ.ச.ஞா. அவர்களுக்கு இராசா சர்.முத்தைய செட்டியார் நினைவுப் பரிசாக ரூ. 50,000 அண்மையில் வழங்கப் பெற்றுள்ளது. ஆழ்வார்கள் ஆய்வு மையம் ரூ25,000 கொண்ட அறிஞர் அண்ணா விருதை வழங்கவுள்ளது.

செயற்கரிய சாதனைகளைப் புரிந்த பேராசிரியர் அ.ச.ஞா. அவர்கள் இவ்வளவு பாராட்டுதல்களுக்கும் முற்றிலும் உரிமையானவர். எஞ்சிய வாழ்நாளில் இவர், சின்னையா என்று போற்றும் திரு.வி.க. அவர்கள் இவருக்கிட்ட பணியை நிறைவேற்றுதல் வேண்டும். "திருவாசகத்தை அவர் விஞ்ஞானக்கண் கொண்டு பார்க்கிறார். சீர்திருத்த உள்ளம் கொண்டு நோக்குகிறார். அக்கால மணிவாசகரை இக்காலத்தவராகக் காட்டுகிறார். ஞானசம்பந்தர் வாயிலாகத்

திருவாசகத்துக்கு ஒரு விரிவுரை வெளிவரின் தமிழ் உலகம் நலம் பெறுவதாமென்று நான் நம்புகிறேன்." என்று அவர் தம் வாழ்க்கைக் குறிப்புகள் நூலில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் முனி இட்ட பணி. நிறைவேற்றி நம்மையெல்லாம் உய்விக்க வேண்டியது பேராசிரியரின் கடமை. உதவிக்கு மீரா அம்மை இருக்கிறார். 'கொழுமதியும், ஆழ்ந்த சிந்தனையும், ஆராய்ச்சித் திறனும்" உடையவர் என்று திரு.வி.க.வே போற்றிய பேராசிரியருடைய வாழ்க்கைத் துணைவியார் இராஜம் அம்மையார் இருக்கிறார். பேராசிரியர் அ.ச.ஞா. நிறைவேற்றி விடுவார் என்று உறுதியாக நம்பலாம்.

திருவாசகப் பணியை முடிக்காமல் போய் விடுவோமோ என்று தளர்ந்து போயிருந்த டாக்டர். ஜி.யு.போப் அவர்களை அவருடைய நண்பரான பேலியல் கல்லூரித் தலைவர் "பெரிய பணியில் ஈடுபட்டிருப்பது நீடூழி வாழ்வதற்குரிய வழி. (To have a great work in progress is the way to live long) என்று கூறி ஊக்கப்படுத்தினார் அது போல அதே திருவாசகப் பணியில் பேராசிரியர். அ.ச.ஞா. அவர்கள் ஈடுபட்டு நீண்ட காலம் வாழ எல்லாம்வல்ல அம்மையம் பலவாணன் அருள்புரிவானாக."

வண்ணப்பூங்கா வாசன் நூல்கள் வெளியீட்டுவிழா

சிறந்த கவிஞரும் ஓவியரும் வண்ணப் பூங்கா என்னும் இதழின் ஆசிரியருமான திரு.வாசன் அவர்களின் சமுதாயப் பார்வை, கவிதைக்குச் சோதனை, உங்களுக்குத் தெரியுமா? ஆகிய மூன்று நூல்களும் 26.6.96 மாலை சென்னை மியூசிக் அகாடெமி அரங்கில் வெளியிடப் பெற்றன. தன்மானக்காவலர் திரு.வை.கோ. அவர்கள் நூல்கள் வெளியிட்டு நூல்களையும் நூலாசிரியரையும் பாராட்டினார். விழாவுக்குத் திரு.கோ. அய்யாவு தலைமை தாங்கினார். விழாவில் டாக்டர். வி.ஜி. சந்தோசம், திரு. டி. ஆர். ஆர். செங்குட்டுவன், திரு.ஜி.வி. சிவா முதலியோர் கலந்து கொண்டனர். திரு.எல்.கணேசன், கவிஞர் குடியரசு, திருமதி. விஜயா தாயன்பன் முதலியோர் நூலாசிரியரைப் பாராட்டிப் பேசினர். திரு. வண்ணப்பூங்கா வாசன் ஏற்புரை வழங்கினார். திரு.சி. பத்ம நாபன் நன்றி நவின்றார்.

மாணிக்கவாசகர் காலத்தில் ஆசீவகர்

பேராசிரியர், ஆ. சிவலிங்கனார், மயிலம்

செல்வி 70 - பக். 438 தொடர்ச்சி

2. நிறக் கோட்பாடு

உயிர்கள் தத்தம் நிலைகளுக்கேற்ப நிறங்கொள்ளும் என்பது ஆசீவகர் கோட்பாடாம். சைனர்களும் இந்நிறக் கோட்பாடுடையவர்களே. எனினும் வேறுபாடு உண்டு. வேடர், திருடர் போல்வாரைக் கரும்பிறப்பினர் என்றும், திருட்டு வாழ்வுடைய புத்தபிக்குகளை நீலப்பிறப்பினர் என்றும், ஆசீவர்களைப் பசும் பிறப்பினர் என்றும், ஆசீவகத் துறவிகளை வெண்பிறப்பினர் என்றும், வீடு பேறடைந்த மக்கள்போல்வாரைக் கழிவெண்பிறப்பினர் என்றும் வகைப்படுத்துவர் ஆசீவக நூலார் இந்நிறக் கொள்கையை அபிசாதிக் கொள்கை என்பர்.

மாணிக்கவாசகர் உயிர்களுக்கு நிறம் கூறவில்லை. நிறம் கடவுளுக்கே உரியது எனும் கருத்தினர்.

"நிறங்கள் ஓர் ஐந்துடையாய்"

எனவும் (1: 47)

"வெளியாய் கரியாய் பச்சையனே செய்ய மேனியனே"

எனவும், (135)

"முத்து மாமணி மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி அத்தன்" (432)

எனவும் இறைவனுக்கே நிறம் கூறினார். அன்றியும்,"உன்றன் வண்ணந்தான் அது காட்டி வடிவு காட்டி" (29) என இறைவன் தன் நிறத்தைக் காட்டியதாகவும் கூறினார்.

3. நால்வகை நியதி

ஆவது ஆம், ஆம் வகை ஆம், ஆம் அளவு ஆம், ஆங்காலத்து ஆம் எனும் சதுவாநியதக் கோட்பாடு எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவானதே. ஆசீவகர் இவற்றில் உறுதியாக நிற்பவர். மற்றையோர் முயன்றால் மாற்றலாம் என்பர். மாணிக்கவாசகரும் இவற்றை மாற்றலாம் எனும் கோட்பாட்டினரே. அதற்கு இறையருளும் உயிரின் முயற்சியும் தேவை என்பர். "நமச்சிவாய வாழ்க" எனத் தொடங்கும் சிவபுராணப் பாடலைப் பொரு ளுணர்ந்து சொல்லுவார், பல்லோரும் ஏத்தச் சிவனடிக்கீழ்ச் செல்வர் *(1:93-95)* எனக் கூறுவதன் மூலம் அதனை வலியுறுத்தினார்.

4. மாறுபடா நிலைபேறு

அணுக்களும் (நிலம் நீர் முதலியன) அவற்றின் செய்திகளும் எக்காலத்தும் மாறுபடாத நிலை பேறானவை என்பது ஆசீவகர் கோட்பாடு. இதனை நீலகேசி, "ஒருகாலத்தில் நோயில்லா திருந்தவன் பின் ஒரு காலத்தில் நோய்வாய்ப் பட்டு நிற்பதைப் பார்த்தும் உலகில் எல்லாம் மாறுபடாது நிலைபேறுடையனவாய் உள்ளன எனக்கூறுவது பொருளற்றது" என மறுப்பாள் நீலகேசி சைனசமயத்தவள். மாணிக்கவாசகர்,

"நோயுற்று மூத்துநான் நுந்துகன்றாய் இங்கிருந்து".

எனத் தம்மைப் பற்றியும், (224)

"வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர் மண்கெடினும்"

எனநிலம் முதலியன பற்றியும், (252)

"சோர்ந்து ஈமொய்த்து அழுக்கொடு திரியும் சிறுகுடில்இது." (418)

எனத் தம் உடம்பு பற்றியும் கூறுமுகத்தான் மாறுபடாநிலை பேற்றை மறுத்தவாறு காணலாம்.

சிவபிரான் செயலாகத் 'தம் ஊனினை யுருக்கியுள்ளொளி

பெருக்கியதைக் கூறியதும் காணலாம் *(542)*

5. நியதிக் கோட்பாடு

உயிர்கள் அடையும் இன்பதுன்பங்களுக்கும் செய்யும் செயல்களுக்கும் அவற்றின் முன்னைய ஊழ் வினைகளே காரணம் என்பது மற்றைச் சமயத்தார் கூறும் கோட்பாடாம். ஆசீவகரோ அவை உயிர் கருவிற்பட்டபோதே அமைக்கப் பட்ட நியதியாகும். ஊழ்காரணமாகாது என்னும் கோட்பாட்டினர். எது நேர்ந்தாலும் அதற்குக் காரணம் கூறக்கூடாது என்பது அவர்தம் கோட்பாடு. அதனால் அவர்கள் காரணம் வேண்டாக் கடவுட்குழாம் எனப்பட்டனர். மாணிக்கவாசகர் யாவற்றுக்கும் வினையே காரணம் என்பதைப் பலபாடல்களில் கூறிச் சென்றார்.

"வினையிலே கிடந்தேனை" (26)

"வினையென் போலுடையார் பிறர்யார்" (41)

"இனியார் மூங்கி லனையேன் வினையைப் பொடியாக்கி" (93)

எனத் தம் வினைபற்றிக் கூறினார். "தீவினையினேற்கு நெஞ்சம் கல்லாம் கண்ணிணையும் மரமாம்" எனவும் கூறினார். உயிர்களின்

ஊழ்வினையைக் கெடுப்பவன் இறைவன்; அதனால் அவன், "வினைக்கேடன்" எனப்படுவான் எனவும் கூறினார் *(26)*

மனிதப் பிறவி எடுத்த உயிர், வளர்ந்து உலகியலறிந்து வீடுபேறடையும் வரையுள்ள துன்பங்களை விவரித்து அவற்றினின்றும் பிழைத்தமை கூறியதன் மூலம் (4:11-41) உயிர்கள் வினை செய்தலும் அதன் பயனும் அதனைப் போக்கிக் கொள்ளுதலும் கூறினார்.

6. வீடுபேறு

திரும்பி வரும் நிலையில் உள்ள (மண்டல) வீடுபேறு, திரும்பி வாரா நிலையில் உள்ள (செம்போதக) வீடுபேறு என இருவகை வீடுபேறு கூறுவர் ஆசீவகர். திரும்பி வரும் நிலையில் உள்ளதாயின் அது வீடு பேறாகாது; திரும்பி வாராநிலையில் உள்ளதே வீடுபேறாகும் என்பது மாணிக்கவாசகர் கோட்பாடு. அதனால் அவர், திரும்ப வந்தால் மீளவும் வினைப்பிறவியே வரும் என்றும், அவ்வாறு வினைப்பிறவி சாராமே சூக்கும உடம்பை அழிக்க வல்லவன் இறைவன் என்றும் கூறினார்.

"மீட்டு இங்கு வந்து வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லான்" (1:87/88)

என்பது அவர் வாக்கு. அதனால் அவர் வீடுபேறு அடைதற்குரிய நெறியை

"மீண்டு வாரா வழி" (2:117)

"வாரா வழி" (176)

எனக் கூறினார். வீட்டுலகை "வாராவுலகம்" (422) என்றார்.

மேலும் உயிர்களுக்கு உரிய நான்கு நியதிகளுள் ஆங்காலத்து ஆம் என்பது ஒன்று உண்டென்றாலும், காலம் என்பது ஒன்றில்லை என்னும் கோட்பாடும் அசீவகர்க்கு உண்டு. கணநேரக் கழிவு உண்டு; அவ்வளவே. காலம் எனத் தனி ஒன்று இல்லை என்பர். மாணிக்கவாசகர் மக்களைப் பார்த்துக் "காலம் உண்டாகவே (இறைவனிடம்) காதல் செய்து உய்மின்" (528) எனக் கூறியும், "முந்தையான காலம் நின்னை எய்திடாத மூர்க்கனேன்" (83) எனத் தம்மைப் பற்றிக் கூறியும், "நச்சிட வந்திடும் காலமே" (470) எனச் சிவபிரானைக் காலம் எனக் கூறியும் காலம் என்பது ஒன்றுண்டு என்றார்.

இவற்றால் மாணிக்கவாசகர் காலத்தில் ஆசீவகரும் செல்வாக்குப் பெற்றிருந்துள்ளனர் என்பது புலப்படும்.

குறிப்பு : பிறைக்கோட்டில் உள்ள திருவாசக எண்கள், திருவாவடுதுறை ஆதீன வெளியீடாகிய (1971) திருவாசகத்தில் உள்ளபடி குறிக்கப்பட்டன.

"பாவேந்தர் நினைவுகள்"

(டாக்டர் மு. துரைசாமி, *மலேசியா*)

(மார்ச் - 96, பக். 262 ன் தொடர்ச்சி)

11. கட்டிலில் செந்தமிழ்க் கவிஞனைக் கண்டேன்!

அறுபத் திரண்டாம் ஆண்டில் சென்னையில்
அரசு ஸ்டான்லி மருத்துவ மனையில்
மருத்துவ ராகநான் இருந்த நாளில்,
"பாண்டியன் பரிசைப்" படமாய் எடுக்கவும்.
யாண்டும் தம் ''குயில்'' இதழைப் பரப்பவும்.
தி.நகர், இராமன் தெரு, பத் தாம் எண்
வீட்டில் நம்,பா வேந்தர் வாழ்ந்தார்.
பாட்டின் வேந்தரை நான்போய்ப் பார்த்தவர்
நலத்தைக் கண்டும், நற்றமிழ் கற்றும்
சிலபல செய்திகள் செப்பக் கேட்டும்
வருவதென் வழக்கம். ஒருநாள் மாலையில்
கவிஞரை அங்ஙனம் காணச் சென்றேன்.
சிவந்த மேனியும், சிரித்த முகமும்,
இருபதை எட்டா வயதும், மெல்லிய
உருவமும் உடைய இளைஞர் ஒருவர்
இருந்தார் அங்கே. இருவரும் உடனே
அறிமுகம் ஆனோம். அவர்தாம் தமக்குக்
கூடவே இருந்து குறிப்பை யுணர்ந்தே
ஆடி ஓடி அனைத்தையும் செய்தும்,
எழுதிய கவிதையைப் படிகள் எடுத்துச்
சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்தும்,
எதையும் இனிய முகத்துடன் இயற்றி
உதவியாய் இருப்பதாய் உரைத்தார் கவிஞர்.
ஆயினும் அன்றுநான் சென்ற போழ்தில்,

நோய்வாய்ப் பட்டவர் நடுங்கிக் கிடந்தார்.
காய்ச்சல் அவர்க்குக் கடுமையாய் இருந்தது.
மருத்துவ மனையில் சேர்ந்து சிலநாள்
இருத்தல் நலமென எடுத்து விளக்கினேன்.
மறுநாள் அவர்எம் மருத்துவ மனைக்கு
வர, என் 'வார்டில்' சேர்த்து, கே.வி.
திருவேங் கடம் எனும் தலைமை மருத்துவர்
முடிமுதல் அடிவரை முழுமையாய் அவரைச்
சோதனை செய்து சொல்லிய படி, நோய்
ஏதினை அறிய ஏற்றவை செய்தபின்,
மருந்து மாத்திரை தரும்படி செய்தேன்.
மறுநாள் காலை 'வார்டில்' நுழைந்ததும்,
அங்குநான் கண்டது வியப்பை அளித்தது!
அந்த 'வார்டில்' எந்தநோ யாளியும்
இந்த முறையில் இருந்ததைக் கண்டிலேன்!
விழித்த நிலையில், மல்லாந்து படுத்துக்
கழுத்தின் கீழ்த்தம் கைகளை வைத்தே,
ஒருகால் நிறுத்திமேல் மறுகால் போட்டுச்
சுற்றுச் சூழலை முற்றும் மறந்து, நான்
நிற்பதைக் கூட உணரா நிலையில்
பெருங்கற் பனையில் இருந்தார் அன்னார்!
கட்டிலில் எனதுநோ யாளியைக் காணேன்!
ஒட்டிய உடம்புடன் கால்மேல் காலொடு
செருக்குடன் இருந்த செந்தமிழ்க் கவிஞனை,
பாவேந் தர்தம் பரம்பரை தன்னை
அன்றுநான் கண்டேன்! அவர்தாம், இன்று
பொன்னடி யான்எனும் புகழ்சால் கவியே!

தமிழ்த்தூண் தாமோதரனார்

பேராசிரியர் கு. அரசேந்திரன், சென்னை.

(சிலம்பு - 70, பரல் - 11, பக். 428 தொடர்ச்சி)

"என் சிறு பிராயத்தில் எனது தந்தையார் எனக்குக் கற்பித்த நூல்கள் இப்போது தமிழ் நாடெங்கும் தேடியும் அகப்படவில்லை. ஒட்டித் தப்பியிருக்கும் புத்தகங்களும் கெட்டுச் சிதைந்து கிடக்கும் நிலைமையைத் தொட்டுப் பார்த்தாலன்றோ தெரிய வரும். ஏடு எடுக்கும் போது ஓரம் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும் போது இதழ் முரிகிறது. ஒன்றைப் புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ என்றால் வாலும் தலையுமின்றி நாலுபுறமும் பாணக்கலப்பை மறுத்து மறுத்து உழுதுகிடக்கின்றது"

1887 இல் கலித்தொகைப் பதிப்புரையில் 55 ஆம் அகவையில் இவ்வாறெழுதும் தாமோதரர் திடீரென ஒரு நாளில் தமிழ்ச்சுவடிகள் இருந்த நிலைகண்டு எழுதியன அல்ல இவை. தம் 20 ஆம் அகவை தொடங்கித் தமிழ்ச் சுவடிகள் இருந்த நிலையனைத்தையும் உளங்கொண்டு கொதிப்புற்று அழுது எழுதியனவே இவையாகும். 1852 ஆம் ஆண்டாகிய 20 ஆம் அகவையிலேயே ஏடுதேடிய தாமோதரர் 1854 ஆம் ஆண்டாகிய 24 ஆம் அகவையில் நீதிநெறி விளக்கம் பதிப்பித்து விடுகின்றார். பதிப்புலகின் தந்தை எனப்படும் உ.வே. சாமிநாதர் பிறந்த ஆண்டு 1855 ஆகும். சாமிநாதர் சீவக சிந்தாமணியைப் பதிப்பித்து வெளியிட்ட ஆண்டு 1887. உ.வே.சா. அவர்கட்கு அப்பொழுது அகவை 32. உ.வே.சா. ஏடு தேடி அலையத்தொடங்கிய ஆண்டுகட்கு 35 ஆண்டுகட்கு முன்பே அஃதாவது 35 ஆண்டுகளாக நம் தாமோதரர் தன்னந் தனியராய்ச் சுவடி தேடி அலைந்திருக்கின்றார்.

ஏடுதேடிய இன்னல்

தாமோதரனாரின் தன் வரலாற்று நூல் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. அவரும் எழுதியதாகத் தெரியவில்லை. உ.வே.சா. அவர்களின் என் சரித்திரம் போன்றதொரு நூல் தாமோதரருக்கு இருந்திருக்குமேல் அவர் காலத்திய தமிழ், தமிழர் நிலை நமக்கு மிகத் தெளிவாய்த் தெரிந்திருக்கும். அத்துடன் அவற்றுக் கிடையே உழன்ற தாமோதரர் துயரமும் முழுமையாய் நமக்குத்

தெரிந்திருக்கும். ஆயினும் கலித்தொகைப் பதிப்பின் முன்னுரையில் ஏடுதேட அவர்பட்ட பாடுகளை அவர் குறித்திருப்பது கொண்டு அவரின் பேருழைப்பையும் பேருணர்வையும் நாம் அறியலாம். ஒருவர், தாம் ஒரு வினையின் போது பட்ட பாடுகளனைத்தையும் சொல்லிவிடுவதென்பது முடியாது. தாங்கமுடியாத துயர அழுத்தங்களால் அவதிப்பட்டோர் வாய் திறந்து பேசும்போதும் கைகுவித்து எழுதும்போதும் தாம் பட்ட துயரத்தைச் சொல்லில் சொல்லவே முடியாதென்பர். நம் தாமோதரர் கலித்தொகை ஏடு தேடிய பாடுகளைச் சொல்கிறார் பாருங்கள்.

"கலித்தொகைப் பிரதிகள் தேட யான் பட்ட கட்டம் வாயினாற் கூறும் அளவைத் தன்று. முதன் முதல் யான் பார்த்தது புதுவை நயனப்ப முதலியாரது. மூல பாடப் பிரதி. அது தலையுங் கடையுமின்றிய குறைப்பிரதி. மேலும் பெரும்பாலும் எழுத்துக்கள் சிதைந்து ஒரு பாட்டின் சேருறுப்பாவது முற்றும் வாசிக்க முடியாமற் கிடந்ததாற் படிப்பதற்கே வெறுப்புண்டாய் நீக்கிவிட்டேன்.

பின்னர்த் தொல்காப்பியப் பரிசோதனைக்காகத் தேடியபோது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் பிரதி அகப்பட்டது. அது கொண்டு கலித்தொகை அருமையுணர்ந்து அது எப்படியும் உலகிற்குப் பயன்பட வேண்டுமென்னும் அவாவுற்று ஸ்ரீ ஆதீன மடாதிபதிகளுக்கு விண்ணப்பம் செய்து கொண்டேன். காருண்ணிய முங் கலாபரி பாலனமுமே தமது திருமேனியாகக் கொண்டு விளங்கும் திருவாவடுதுறைச் சற்குரு நாத சுவாமிகள் உடனே தங்கள் மடத்துப் பிரதியுடன் வேறு இரண்டு பிரதி தென்றேசத்தினின்று வருவித்தனுப்பி அச்சிட்ட பிரதியும் 20 எடுத்துக் கொள்வதாக உத்தரவு செய்தது. இப்பேருபகாரத்திற்கு யானே அடிமையாவதன்றி வேறுயாது கைம்மாறு உளது?

யாழ்ப்பாணத்து மல்லாகம் விசுவநாத பிள்ளையவர்கள் புத்திரரும் தமிழ்க்கலை விநோதந் தமக்குப் பொழுது போக்காக உடையவருமான ஸ்ரீ கனக சபைப் பிள்ளையவர்கள் தமது பிரதியும் திருமணம் செல்வ கேசவராய முதலியார் மயிலை இராமலிங்கம் பிள்ளை பிரதியும் தயை செய்தார்கள். சென்னைப் பிராகிய கிரந்த மண்டபத்துந் தஞ்சை சரஸ்வதி மாலிலும் இங்கும் அங்கும் சிதறுண்ட சில ஒற்றைகளைச் சேர்த்துக் கட்டி ஓரொரு பிடியேடு கலித்தொகை என்று அபிதானஞ் சூட்டி வைக்கப் பட்டிருந்தது. இவற்றாற் பிரயோசன மிரா தென்ற நீக்கிவிட்டு

வேறு எவ்விடத்தும் பிரதி அகப்படாமையால் அகப்பட்ட பிரதிகளை வைத்துக்கொண்டு அச்சிட ஆரம்பித்தனன். போகப் போக ஒன்றொன்றாக ஆங்காங்கு முடிவு பெற்று நான்காவது முல்லைக்கலி முடியுமுன்னந் திருவாவடுதுறைப் பிரதி ஒன்றொழிய ஏனையேட்டின் அனைத்துந் தலைகட்டிக் கொண்டன. இத் தசையில் யாது செய்வ தென்று தெரியாது மயங்கி வேலையை நிறுத்தி இன்னும் பிரதி தேடும் படி ஓரொருதிசைக்கொருவராகக் குறைவதெனாது குடாது மூன்றற்கும் மூன்று பெயரை அவ்வத் திசையிலுள்ள தக்க உத்தியோகஸ்தர்கள் பெரிய மனுஷர்களுக்குக் கடிதமெழுதி அனுப்பி வடாது திக்கிற்கு யானே பிரயாணமானேன்"

சி.வை.தா. குடந்தைக் கருகிலுள்ள கருப்பூரில் இருந்து கொண்டு இக் கலித்தொகைப் பதிப்புப் பணியை மேற்கொண்டிருந்தார் ஆதலால் அவர் கடலூர், திண்டிவனம், புதுவை முதலிய பகுதிகட்குச் செலவு மேற்கொண்டதை வடதிசைப் பயணமாகக் குறிப்பிடுகின்றார். அவ்வாறு அவர் வடதிசையைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் ஒன்று உள்ளது. மாந்த மூளை கணினியைப் போல ஒரு நிகழ்வின்போது அத்துடன் தொடர்புடைய பழைய நிகழ்வுகளையெல்லாம் உடன் கொண்டு வந்து நிறுத்தி நிகழ்காலத்துடன் அசைபோட வைக்கும் இயல்புடையது. தெளிந்த சிந்தையுடையோர்க்குக் கண்ணாடிபோல் அனைத்தும் எப்பொழுதும் துலக்கமாகத் தெரியும். இவ்வகையில் சி.வை.தா. 1852 இல் அஃதாவது 1887 க்கு முப்பத்தைந்தாண்டுகட்கு முன் கடலூரில் மஞ்சக்குப்பத்தில் ஓரிடத்தில் கலித்தொகை ஏட்டினைக் கண்டிருக்கின்றார். 1852 இன் 20 அகவை நினைவு 1887 இன் 55 ஆம் அகவையில் தொடர்கிறது. இதுவே இவர் வடதிசை தேர்ந்ததற்குக் காரணம்.

"யான் முப்பத்தைந்து வருஷத்தின் முன் பிரமாதீச வருஷம் ஒருதரம் அருமையான தமிழ் நூல்கள் தேடி யாழ்ப்பாணத்தினின்று இக் கண்டத்தில் வந்து நடமாடிய போது கூடலூரில் மஞ்சக்குப்பத்தில் சண்முக உபாத்தியாய ரென்றோர் வயோதிகரும் புதுச்சேரியில் நெல்லித்தோப்பிற் சொக்கலிங்கம் பிள்ளையென்றோர் தமிழ்ப்பண்டிதரும் கலித்தொகை வைத்திருந்தது என் ஞாபகத்திற்கு வர அந்த இடங்களிற் சென்று விசாரித்தேன். முன்னையவர் இருந்த இடமும் தென்பட்டிலது. பின்னையவர் இருந்த இடத்தில் விசாரித்து, அவர் வமிசத்தில் அவரது தௌகித்திரியுங் குடும்பமும் அடுத்த ஊரில் இருப்பதாகக் கேள்வியுற்று ஆங்கடைந்து தௌகித்திரியின் நாயகனை

வினவியபோது, அவர் ஏதோ ஒரு கட்டுச்சுவடிகள் பூர்வார்ச்சிதமாக வைத்திருக்கின்றோம், நமக்கு அவற்றின் பெயருந் தெரியாது, தங்களுக்கு வேண்டியிருந்தாற் பார்த்து எடுத்துக் கொள்ளலாமென்று மகா உதாரத்துவத்தோடு ஏட்டுக் கட்டை அளித்தனர். ஏடுகள் இருந்த நிலைமை கண்டுயானுற்ற பரிபாவத்திற்கு என் விழியினின்று பெருகிய கண்ணீரே சாட்சி. கலித்தொகையும் அங்கும் இங்கும் மிக ஊமை அடைந்திருந்தும் எனக்கு வேண்டிய நெய்தற் கலியிருந்தமையால் மிக மகிழ்வோடு வாங்கி வந்தேன்.

அப்பால் திண்டிவனத்திலும் ஒரு பிரதி அகப்பட்டது. அதில் நெய்தற்கலியின் முதற்பாகம் இருந்தது.

திரிகோணமலை ஸ்ரீ த. கனக சுந்தரம் பிள்ளையவர்கள் சென்னைப் பிராசிய கிரந்த மண்டபத்தில் தான் நெய்தற் கலி பார்த்தேனென்று உறுதியாகச் சொன்னமையால் மீளவும் அவ்விடஞ்சென்று முன் யான் நீக்கி வைத்த ஏடுகளே இப்பொழுது எனக்கு வேண்டிய நெய்தற்கலி உடையவாயிருத்தல் கண்டு அளவற்ற சந்தோஷமடைந்தேன். அஃதல்லாமல் பின்னும் ஒரு பிரதி நெய்தற்கலி 23 ம் செய்யுள் வரைக்கும் அம்மண்டபத்தே அகப்பட்டது. அதனை எனது பிரதியோடு ஒத்துப் பார்வையிட்டு ஆங்காங்குக் கண்ட பாடபேதங்களைக் குறித்துக் கொண்டோம்.

பின்னர்த் திருத்தணி குருசாமி ஐயர் கிரகத்திற் சென்று, சென்னையில் மிகப் பெயர் பெற்றிருந்த வித்துவானாகிய அவரது பிதாமகன் ஸ்ரீ சரவணப் பெருமாளையருடைய புத்தக நாமாவலியைப் பார்வையிட்டதில் அவரது கலித்தொகைச் சுவடி கோயமுத்தூரில் ஒருவர் கையிற் போயிருப்பதாகத் தெரிய வந்தது. அதனைச் சின்னாள் இரவலாக வாங்கியனுப்பும்படி அவ்வூரிற் பெரிய மனுஷர் சிலருக்குக் கடிதம் விடுத்தேன். அவர்கள் அரவின் சுடிகை அரதனத்திற்கும் ஆழிவாய் இப்பியுண் முத்திற்கும் அவை உயிரோடிருக்குங்காணும் ஆசை கொளல் வேண்டாவாறு போல, இம் மஹானுடைய சீவ திசையில் இவர் கைப்பட்ட புஸ்தககங்களைக் கண்ணாற் பார்க்கும் அவாவினை ஒழிகவென்று பதிலெழுதினார். சிவனே! சிவனே! இதுவுங் கலித்தொகையைப் பிடித்ததோர் கலித்தொகையோ என்று உளம் நொந்தேற்கக் கடைசியில் அதுவும் மற்றைப் பெரும்பான்மைய பிரதிகளொப்ப நெய்தல் வளம் பெறாது முல்லையோடு முடிந்த பிரதியெனக் கேள்வியுற்றுச் சஞ்சலம் ஒழிந்தேன்.

ஸ்ரீ இராமசாமி சாஸ்திரிகள், ஸ்ரீ கோபால கிருஷ்ணமச் செட்டியார், ஸ்ரீ வைத்தியலிங்கச் செட்டியார் முதலிய உத்தியோகஸ்தர்களும் ஸ்ரீ வெங்கட்ட ரமண சாஸ்திரிகள், ஸ்ரீ திருச்சிற்றம்பல பிள்ளை, ஸ்ரீ விசுவலிங்க பிள்ளை, ஸ்ரீ சொக்கலிங்கக் கவிராயர் முதலிய வித்துவான்களும் யான் கடித வாயிலாகக் கேட்டுக் கொண்டபடி தங்கள் தங்களால் ஆன பிரயாசைப்பட்டும் பிரதி கிடைக்காமையால் அவர்களிடம் யான் அனுப்பி வைத்த மூவரும் வெறுங்கையராய் வந்து சேர்ந்தார்கள்.

குறைப் பிரதியாயினும் முழுப்பிரதியாயினும் அகப்பட்ட இப் பத்துப் பிரதிகளையும் கொண்டு கலித்தொகை பதிப்பித்தேன்".

சி.வை. தாமோதரர் கலித்தொகை பதிப்பிற்கு ஏடு தேடிப்பட்ட இன்னல்கள் முழுவதையும் மேற்காட்டிய நீண்ட அவரின் உரைப்பகுதி சுட்டிவிட்டதென்று கூறி விட முடியாது. இப்பதிப்பு முன்னுரையால் அவர்பட்ட பாட்டின் ஒரு கூறையே நாம் அறிவதாகக் கொள்ள வேண்டும்.

பதிப்புப் பாடு

எல்லோரும் நல்லது செய்யத்தான் ஆசைப்படுகிறார்கள். ஆனால் செய்வதில்லை. காரணம் மனம் ஆசைப்பட்டதை எட்டிப் பிடிக்க மிகுந்த இன்னல்களைச் சந்திக்க வேண்டும். இவ் வின்னல் வகையினை 1. மெய் வருத்தம் 2. பசித்துன்பம் 3. தூக்கக் கலக்கம் 4. பிறர் தீமையால் வரும் அயர்வு 5. செய்யும் செயலின் களைப்பு 6. ஏளனமாய் இழித்தும் பழித்தும் உழைப்பிலார் சொல்லும் அவமதிப்புத்துயர் என்று இவற்றை 'மெய் வருத்தம் பாரார்' பாடல்வழி வரிசைப் படுத்தலாம். செயல் செய்ய மிக வேகமாய்க் கிளம்புவோர் இவ்வின்னல் ஆறினுள் ஒவ்வொன்றைச் சந்திக்கும் அளவிலேயே பணியிலிருந்து ஒதுங்கிக் கொள்வர். ஆறுவகை இன்னலையும் அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும் என்ற உணர்வுடன் ஏற்று எதிர் கொள்வோர் உலகில் மிகச் சிலரே. அச்சிலருள் ஒருவரே நம் தாமோதரர். அவர் எடுத்துக் கொண்ட பணி பிறர் எவரும் செய்ய நினைக்காதது. காரணம் அவர் செய்ய மேற்கொண்ட பணியில் ஆறுவகையாக்வும் இன்னல்கள் உண்டு.

உடல் உழைப்பு, மூளை உழைப்பு என்ற இரண்டில் மூளை உழைப்பு உடல் நலத்தை உள்முகமாக அரிப்பது. அறிவு வெகுவேகமாகச் செல்லும் விரைவுப் பிறப்பினது அவ்வறிவு

செல்லும் திசையில் முட்டுப்படுமானால் அவ் வேகம் உடலையும் உளத்தையும் தாக்கும். தமிழ்ச் சுவடிப் பதிப்புப் பணியிலோ மிகமிகக் காணும் இடமும் தொடும் இடமும் தடை தடையாகவே தோன்ற வாய்ப்புண்டு. இன்று நாம் படிப்பதுபோல் தெளிவான எழுத்துக்களும் விளக்கங்களும் சுவடியில் இருந்த பாடல்களில் இருந்ததில்லை. உ.வே. சாமிநாதர் தன் என் சரிதத்தில் தமிழ்ச்சுவடிகளில் இருந்த எழுத்துக்களைப் பற்றிக் கூறுகையில்

"இது கொம்பு, இது சுழி என்று வேறு பிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியே இராது. ரகரத்துக்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. சரபம் சாபமாகத் தோற்றும். சாபம் சரமாகத் தோற்றும். ஓரிடத்தில் சரடு என்று வந்திருந்த வார்த்தையை நான் காடு என்றே பலகாலம் எண்ணியிருந்தேன். தரனென்பதைத் தான் என்று நினைத்தேன்".

சுவடிகளில் தமிழ் எழுத்துக்கள் இருந்த நிலைமைக்கு ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதாகவே உ.வே.சா. அவர்கள் கூறியுள்ள பகுதி கொண்டு நாம் அறிய வேண்டும்.

தாமோதரரும் இச்சுவடிகளை வாசிக்கப் பட்டபாட்டைத் தம் வீர சோழியப் பதிப்புரையில் சொல்லி வருந்துகின்றார்.

"விரலை வாலென்றும் கட்டிலைக் கடலென்றும் பஞ்ச பாண்டவரைப் பிஞ்சுப் பாகற்காய் என்றும் மாற்றி எழுதி வைத்தால் அம்மொழியைச் சரிப்படுத்தல் இலேசாகுமா?"

"ஒரு தேசத்தில் வழங்கி வரும் பிரதிகளை மாத்திரம் பார்த்தார்க்கு இம் மாறுபாட்டின் பெருக்கந் தோன்றாது. மதுரைப் பிரதி திருநெல்வேலிப் பிரதிக்கு வேறு. யாழ்ப்பாணத்துப் பிரதி இவ்விருதேசப் பிரதிகட்கும் வேறு. தஞ்சாவூர்ப் பிரதி முதன் மூன்றற்கும் வேறு. சென்னைப் பட்டணப் பிரதிகள் இவை எல்லாவற்றிற்கும் வேறு"

"இலக்கணக் கொத்துடையார் நூலாசிரியர் உரையாசிரியர் போதகாசிரியரென வகுத்த மூவகை ஆசிரியரோடு யான் பரிசோதனாசிரியரென இன்னுமொன்று கூட்டி இவர் தொழில் முன் மூவர் தொழிலினும் பார்க்க மிகக் கடியதென்றும் அவர் அறிவு முழுதும் இவர்க்கு வேண்டிய தென்றும் வற்புறுத்திச் சொல்லுகின்றேன். தூக்கினாலன்றோ தெரியும் தலைச்சுமை? பரிசோதனாசிரியர் படும் கஷ்டமும் ஓர் அரிய பழைய நூலைச் சுத்த மனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங்காது. இவையெல்லாம் அனுபவத் தாலன்றி அறியப்படாப்

பொருள்கள். ஒன்றற்கொன்று ஒவ்வாத இருபது இருபத்தைந்து பிரதிகளையும் அடுக்கி வைத்துக் கொண்டு என் கண்காணச் சிந்தாமணி பரிசோதனை செய்து பதிப்பித்த கும்பகோணம் வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் வே. சாமி நாதையரைக் கேட்டால் இந் நால்வகையாசிரியர் தார தம்மியம் சற்றே தெரியலாம் எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி".

ஓலைச் சுவடிகளில் உள்ள பாடல்கள் மூல ஆசிரியன் எழுதியதன்று. தொடர்ந்து படிக்கும் பல்லோரும் படியெடுத்துக் கொண்டு படிப்பதற்கு எழுதியனவே அவை. அவ்வாறு எழுதுவோர் தம் அறியாமையாலும் விருப்பு வெறுப்பாலும் தாறுமாறாய் எழுதி விடுவது உண்டு. இவற்றாலேயே ஓலைச் சுவடிகளில் உண்மை காண்பது கடினமாகி விடுகின்றது. தாமோதரர் தாம் பட்ட பாட்டை உ.வே. சாமிநாதர் மட்டும் விளங்கிக்கொள்ள முடியும் என்றும் அதற்குக் காரணம் தம்மைப் போன்றே அவரும் உழைக்கத் தொடங்கி உழைத்து வருகின்றார் என்பதையும் அறிந்தமையே தான். நாம் அழிவோம். நம் சொத்தும் சுற்றமும் இல்லாமலும் போகும். ஆனால் நம்மொழி என்றும் இருக்கும். எனவே நாம் நிலையாகக் கால வெள்ளத்தில் கரைந்து போகாமல் நிற்க வேண்டுமேல் நிலையான மொழியில் நம்மைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படித் தம்மைத் தத்தம் மொழியில் சேர்த்துக் கொண்டவர்களே உலகில் சிலராவது இறவாது வாழ்ந்து வருகின்றனர். தாமோதரர் உழைத்தது தமிழை நிலை நிறுத்த உழைத்த உழைப்பு. ஆதலால் அவர் தமிழுள்ள அளவும் நிலை நிற்பார். தமிழ்ப் பதிப்பின் தானைத் தலை மகன் என்ற பெருமை என்றும் அவர்க்குண்டு.

(தொடரும்)

செந்தமிழ்ச் செல்வி

	உள்ளூர்	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	40/-	400/-
ஆயுள் கட்டணம்	400/-	1500/-

குறிப்பு : 1995 – 96 சிலம்பு 70க்கான கட்டணம் இந்த ஆடி இதமுடன் நிறைவுறுகிறது. உறுப்பினர்கள் சிலம்பு 71க்கான கட்டணத்தை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

– ஆசிரியர்.

தலைவ, நீ வாழ்க!

க. கணேசலிங்கம், சென்னை

காரிருள் கலைந்து; கதிரவன் எழுந்தான்!
காலையின் ஒளியினில் தமிழகம் குளித்துச்
சீருடன் எழுந்தது! சிறுமைகள்விழச்
செந்தமிழ்த் திருமகன் தலைவன்எம் கலைஞர்
ஆரிது வரையிவன் போற்பெரு வெற்றி
அடைந்தனன் எனப்பெரு வெற்றியைக் கண்டான்!
கூரிய சொற்கள்நற் சிந்தனை வீரம்
கொண்டிடு செயல்மிகு தலைவன்நீ வாழ்க!

* * *

பைந்தமிழ் மொழிகனம் நிலத்தினைக் காக்கும்
பாரிய பணிகளை நேருறச் செய்வாய்!
செந்தமிழ் பிறமொழிக் கலப்புகள் இன்றி
செழுமையுற் றிடத்தமிழ் பண்புடன் மானம்
சிந்தையில் முந்திடு நிலைமையைச் சேர்ப்பாய்!
சிறுமையுற் றனாதைக ளாகித்தம் மண்ணில்
நொந்தலைந் தழிந்திடும் ஈழத்துத் தமிழர்
நலிவினைப் போக்கிட நல்லன செய்வாய்!

* * *

இங்குள்ள தமிழர்கள் வாழ்த்துகின் றார்கள்!
இனிஇருள் இலையென எண்ணுகின் றார்கள்!
அங்குள்ள தமிழர்கள் அல்லல்கள் நீங்கும்
அறிகுறி இதுவென நம்புகின் றார்கள்!
எங்கெங்கும் இருக்கின்ற தமிழர்கள் கலைஞர்
எமதரும் தலைவரென் றேத்துகின் றார்கள்!
பொங்கிடு கடலென எழும்தமிழ் உணர்வு
புவியினில் வென்றது! தலைவ, நீ வாழ்க!

திரு நேரிசை – இது பண்ணா?

முனைவர் வீ. ப. கா. சுந்தரம்
திருச்சி 620 021.

தேவாரத்தில் ஒருவகை அறு சீர் விருத்தத்தில் அமைந்த பாடல்களைத் திரு நேரிசை என்று குறிப்பிட்டனர்.

எ– டு :

ஒரு விளம் ஒரு மா தேமா ஒரு விளம் ஒரு மா தேமா
உடம்பெனும் ♦ மனைய ♦ கத்துள் ♦ உள்ளமே ♦ தகளி ♦ யாக
மடம்படும் ♦ உணர்நோய் ♦ அட்டி ♦ உயிரெனும் ♦ திரிம யக்கி
இடம்படு ♦ ஞானத் ♦ தீயால் ♦ எரிகொள ♦ இருந்து ♦ நோக்கில்
கடம்பமர் ♦ காளை ♦ தாதை ♦ கழலடி ♦ காண ♦ லாமே

- *நாவுக். 4:75:4)*

மேலே காட்டிய திருநேரிசைப் பாடலில் 'ஒரு விளம் + ஒரு மா + தேமா' எனும் வாய்பாட்டில் சொற்கள் அமைந்துள்ளன. 'ஒரு விளம்' என்றால் கூவிளம் அல்லது கருவிளம் ஆகச் சொல் நிற்கலாம். 'ஒருமா' என்றால் புளிமா அல்லது தேமா ஆகச் சொல் நிற்கலாம். இறுதியில் 'தேமா'வாக மட்டுமே சொல் வருதல் வேண்டும். இந்த வாய்பாட்டில் முதல் மூன்று சீரும் அரையடியாகி, அடுத்த மூன்று சீரும் அரையடியாகி வருவதே திருநேரிசை என்னும் பாடல். முதல் அரையடியிலும் அடுத்த அரையடியிலும் நேராகச் சீர்கள் ஒத்து வருவதால், இப்பாடல் திரு நேரிசை எனப்பெயர் பெற்றது. அறு சீர் விருத்தமானது திரு நேரிசை எனப் பெயர் பெற்றதற்குக் காரணம் இங்கு விளக்கப்பட்டது.

இனி, 'திருநேரிசை' என்பது ஒரு பண்ணையும் குறிக்கும் பெயர்; இதனைத் திரு ஞான சம்பந்தப் பெருமானார் காட்டியுள்ள செய்யுளால் அறியலாம்.

நீண மார்முரு , குண்டு வண்டி னம்	= (2+2)
நீலமாமலர் , கவ்வி நேரிசை	= (2 + 2) } 8
பாணில் யாழ் முர , லும்புற வார் பனங்	= (2+2)
- காட்டூர் - - - - - - - - -	= (2+2) } 8
நாணழிந் துழல் , வார் சம ணரும்	= (2+2)
நண்பில் சாக்கிய , ரும்நகத் தலை	= (2+2) } 8
ஊணுரியவ ணேயுகப்பார்க்	= (2+2)
- கரு ளாயே - - - -	= (2+2) } 8
(*சம்பந். 2:53:10*)	32

மேற்காட்டிய இப்பனுவலைப் பல நூல்கள் ஒழுங்குற அலகிட்டுப் பதிக்கவில்லை; இது தா கு தா ததிம், எனும் வாய்பாட்டுச் சொற்கட்டில் நடைபோடுகிறது. தா கு தா ததிம் = 3/4 + 1/2 +3/4 = 2 என்னும் தாள எண்ணிக்கையாகும். இதனைத் தென்னிந்திய இசை இலக்கியப் பரப்பில், ஞான சம்பந்தர் முதன்முதலாக ஏராளமான பாடல்களில் பதித்துத் தாளவளம் ஊட்டியுள்ளார். சம்பந்தப் பெருமானாரே - தாளப் பெருங்கணக்கின் ஆழப் பெருங்கடல். மேலும் ஒரு சிறப்புக் குறிப்பு: இரண்டாம் திருமுறையில் - 51, 53 ஆகிய இருபதிகங்களிலும் - 'அருளாயே' என்னும் திருப்புகழில் வளர்ந்துள்ள தொங்கலை அமைத்து அருணகிரி நாதர்க்கு வழி காட்டியுள்ளார். தாளமயமான அருணகிரி நாதர்க்கு இசைக் குரு - சம்பந்த நாயனாரே.

மேற்காட்டிய பாடலில் வண்டுகள் தேனை உண்டு நேரிசை என்னும் பண்ணில் யாழை வாசித்தன. என்கிறார். வண்டு இனம் நேரிசைப் பாணில் யாழை இசைத்தன என்கிறார். "நேரிசை பாணில்" = நேரிசையாகிய பண்ணில் "வண்டினம் யாழ் முரலும்" = வண்டுகள் யாழ் வாசிக்கும். இங்குக் காட்டிய குறிப்புக்களால், நேரிசை என்பது ஒரு பண் என்பது தெளிவாய்த் திட்டமாய் அறியலாகும்.

2

நேரிசை எனும் பண்ணுக்கு மற்று மொரு சான்று:

நேரிசையாக , அறுபத முரன்று
நிரைமலர்த் தாதுகள் , மூசவிண் டுதிர்ந்து
வேரிக ளெங்கும் , விம்மிய சோலை
வெங்குரு மேவியுள் , வீற்றிருந் தாரே

- (சம்பந். 1:75:3)

இங்கு - ஆறு பாதங்களை உடைய வண்டுகள் மலரில் தாதுகளை உண்டு நேரிசையாகப் பாடின என்கிறார் (ஆறுபாதம் : ஆறுகால்களை யுடைய வண்டு).

3

இனிக் கொற்றவன்குடி உமாபதி சிவாச் சாரியார் 'சொன்னட்ட பாடைக்கு' எனத் தொடங்கும் பனுவலில் "நந்தாத நேரிசையாம் கொல்லிக்கு" என்று குறிப்பிட்டுள்ளது நேரிசை

என்பது பண் என்றும் அதற்கு மறு பெயர் 'கொல்லி' என்றும் தெளிவூட்டுகின்றது. பார்க்க : விபுலானந்தரின் யாழ் நூல் - பக். 214 (1947). கொல்லி என்பது பண்.

எனவே திருமுறை கண்ட புராணத்துள் உமாபதி சிவாச்சாரியாரின் கூற்றுப்படி நேரிசை என்பது பண் என நிறுவப்படுகிறது.

மேலும் இந்தக் கொல்லி என்பது பண் என்று அப்பரடிகளார் குறிப்பிட்டுள்ளார்."கொல்லியாம் பண்ணுகந்தார்" - (நாவுக்.4:49:6) எனவே கொல்லிப் பண்ணையே நேரிசைப் பண் எனக்குறிப்பிட்டனர். சிவ பெருமானுக்குக் 'கொல்லியாம் பண் உகந்தார்" என்றும், 'கொல்லியான்' என்றும் பெயர்கள் உண்டு. கொல்லியான் குளிர்தூங்கு குற்றாலத்தான். (நாவுக். 5:34:1) இங்கு மேலே தருக்க நெறியாகக் காட்டியவற்றால் - நேரிசை என்பது பண் என்றும் அறியலாகும்.

தமிழகத்தில் ஒரு பண்ணாய்வு மன்றம் எனது இந்தக் கட்டுரையை நான் படிக்கக் கேட்டது. நேரிசையை ஒரு பண் என்று அது ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது. அது மறுத்து இங்கு ஒரு கட்டுரை எழுதினால் காரணம் அறிந்து கொள்ளலாம்.

அடுத்து வரும் கட்டுரைகளில் குறிஞ்சி நேர்பாலை, நேர்திறம், நோதிறம் வைகறைப் பாணி, பஞ்சுரம், பஞ்சமமம், காந் தாரமாகிய பியந்தை விளரி, சீகாமரம் முதலிய பண்களுக்குரிய இன்றைய ராகம் பற்றி ஆராயலாம். பண்களின் மெய் வடிவம் காண்போம். இசை வளம் செய்வோம்.

தமிழ் நாகர் - தொடர்கிறது.

க.மா.வீரணன்

(சிலம்பு - 70, பரல் - 10, பக். 420 தொடர்ச்சி)

வரலாற்றுக் காலத்திற்கு முன் நாகப் பேரரசு தென்னாட்டில் ஒப்பாரு மிக்காருமின்றி பெரும் வல்லரசாகத்திகழ்ந்தது. அது குறித்த சான்றுகள்:

"எற்பொரு நாகர்த மிருக்கை யீதெனக்
கெற்பதோர் காட்சிய தெனினும் கூழுறக்
கற்பக மனையவர்க் கவிஞர் நாட்டிய
சொற்பொருளாமெனத் தோன்றல் சான்றது"

(கம்பராமாயணம் - பம்பா-6)

“நஞ்சுறை வன்பற்கள் கொடு நாகரின மைந்தர்
பொன்செய் கொடுந் தாழ் இரும்புரிசை மதில் காக்க
எஞ்சுதலில் வீதிபல எங்ஙனும் நிறைந்து
மிஞ்சவரு போகவதி மேவு நகரத்தே
மின் செய் பொலங் கோயிலிடை வியன்தவிசின் மீதே
அஞ்சவரு வாசுகி அமர்ந்த பதி காணீர்!
மஞ்சு தவழ் மாடமொடு கூடம் மிடை காடு
விஞ்ச வரு பைங்கழனி யாவும் விழி கொள்வீர்!“

(சைன ராமாயணம்)

ஆரியர் தமிழகத்திற்கு வந்தபோது அவர்களுக்குப் பேசத் தெரியும்; எழுதத் தெரியாது. ஏனெனில் அவர் மொழிக்கு வரிவடிவம் இல்லை. எழுத்துக் கலையை அறியாதிருந்தனர். சுருதி எனப்படும் அவர்கள் வேதமும் ஓதத்தக்கனவேயன்றி எழுதத் தக்கன அல்ல.

அவர்களின் பரிதாப நிலை கண்டு இரங்கி தேவநாகன் என்னும் தமிழன் அவர்களுக்குப் புதிய எழுத்துக் கலையை கண்டு பிடித்துக் கற்பித்தான். இன்றும் அவன் பெயரால் அது வழங்குகிறது. அதுவே தேவநாகரிலிபி எனப்படும்.

ஆரியர் வேதத்திலும் செம்பாதி தமிழறிஞர்களின் படைப் பென்பதை உலகம் அறியாது. தேவநாகன் பெயர் இன்றும் மதுரை மாவட்டத்தில் வழக்கில் இருக்கிறது. தமிழில் சில சொற்கள் முன்பின்னாக மாறி வழங்கும். கால்வாய், வாய்க்கால் ஆகும். அதுபோல தேவநாகன் என்னும் பெயர் நாகத் தேவன் என வழங்குகிறது. இப்பெயர் கொண்டோர் எண்ணற்றோர் இங்குள்ளனர். எனவே நாகரின் வரலாறு மேலும் ஆராயத்தக்கது.

(ஆதாரம்:1800 ஆண்டுக்கு முற்பட்ட தமிழகம்)

ஆசிரியர் : கனகசபை பிள்ளை.

கி.மு.3 ஆம் நூற்றாண்டில் நூற்றுவர் கன்னர் என்ற சதகர்ணி பரம்பரையினர் ஆந்திர நாட்டு எல்லையில் ஆரியருடனும் நாகருடனும் தொடர்பு கொண்டு ஆண்டனர் என்பது வரலாறு கண்ட உண்மையாகும்.

ஆதாரம் : “வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும்”

ஆசிரியர் : அ.மு. பரமசிவானந்தம்

சிந்தனைப் புரட்சி எழவேண்டும்!

கவிஞர். எஸ். சங்கரநாரயணன்

செந்தமிழ் நாட்டின் நிலைதனையே
சிந்தனை செய்து பார்த்தாலே,
எந்தன் உள்ளம் புலம்புவதை,
எவ்விதம் எடுத்து உரைத்திடுவேன்?

சங்கம் வைத்துத் தமிழ்வளர்த்த
சான்றோர் வாழ்ந்த தமிழகத்தில்,
எங்கும் இன்று சங்கங்களாம்;
எல்லாம் சாதிப் பிரிவுகளே!

உலகின் முதன்மொழி தமிழென்றும்
உயரிய மனிதர் தாமென்றும்,
நிலவும் உண்மை புரியாமல்
நிதமும் சொல்வதால் பயனுண்டோ?

தமிழர் ஒற்றுமை யாயில்லை!
தமிழரைத் தமிழரே பகைக்கின்றார்!
தமிழோ ஆட்சி மொழியில்லை!
தன்மா னந்தான் சிறிதுமில்லை!

ஒருவரை யொருவர் நம்பாமல்,
ஒரேயொரு தலைவரை ஏற்காமல்,
பிரிந்தனர் பலப்பல கட்சிகளாய்!
பேசியே காலம் கழிக்கின்றார்!

சூதும் வாதும் கொண்டசிலர்
சூழ்ச்சி செய்தே தமிழர்களை,
ஏதும் செய்யத் துணியாமல்
இருத்திட இன்றும் முனைகின்றார்!

'வந்தே மாதரம்' என்போரும்
'வாழ்க தமிழென் றுரைப்போரும்,
இந்திய நாட்டில் ஒரேநிலையில்
இருந்திடும் நிலைவர வேண்டாமோ?

மந்திர தந்திரம் தேவையில்லை!
மனதில் தெளிவு பெற்றிடனும்!
சிந்தனைப் புரட்சி எழவேண்டும்!
சீருடன் தமிழர் வாழ்வதற்கே!

பின்லந்து தேசிய காவியம் : கலேவல

கே. கந்தசாமி,

பொதுச் செயலாளர்,

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

பின்லந்து நாடு வடமேற்கு ஐரோப்பாவில் சுவீடன், ருசியா ஆகிய நாடுகளுக்கு இடையில் வடதுருவத்தை அடுத்து உள்ளது. பின்லந்தின் வடபகுதி வடதுருவக் கோட்டுக்கு அப்பாலும், தென்பகுதி இக்கோட்டுக்கு இப்பாலும் உள்ளது. இதனால் வடபகுதியிலும் பார்க்கத் தென்பகுதியிலேயே அதிக மக்கள் வாழ்கிறார்கள். பின்லந்து ஆதியில் சுயஆட்சி நாடாக இருந்து பின்பு சுவீடன் ருசியா ஆகிய நாடுகளால் ஆளப்பட்டு இப்போது சுதந்திர நாடாக உள்ளது. பனி படர்ந்த நாடாக இருப்பினும் இயற்கை வளம் உள்ளது.

கலேவல என்பது இந்நாட்டின் தேசிய காவியம். இச்சொல் பின்லந்தின் ஆதி முதல் மனிதனின் பெயர் ஆகும். பின்பு இச்சொல் இவ்வாதி மனிதன் வழிவந்த பிரதேசத்தையும் குறித்து இப்போது இப் பிரதேசமக்களைப் பற்றிய காவியத்தைக் குறிக்கின்றது.

இக்காவியப் பாடல்கள் கிறிஸ்த்தவ வரலாற்றுக்கு முற்பட்டன. அக் காலத்தில் இம்மக்கள் காடுகளில் சேனைப்பயிர் விவசாயம் செய்வோராக வாழ்ந்தனர். இவர்கள் அக்காலத்தில் பாடிய பாடல்களே கலேவலக் காவியப் பாடல்கள். இவை இருக்குவேதப் பாடல்கள் போல நீண்டகாலம் வாய்மொழிப் பாடல்களாக வழங்கி வந்தன. பின்பு இப்பாடல்கள் இந்நாட்டில் பைன் மரப்பட்டைகளில் எழுதப்பெற்றன.

இப்பாடல்கள் இம்மக்கள் அயலின மக்களோடு செய்த போர்களையும், இம்மக்களது திருமணமுறைகள், மந்திரம் கிரியைகள், சமயநம்பிக்கைகள் ஆகியவற்றையும் குறிப்பவையாக உள்ளது. இக்காவியம் இராமாயணம், பாரதம் போன்ற பழமையை உடையது. அக்காவியங்களில் வருவன போன்ற போர்களையும், சிலப்பதிகார காவியத்தில் உள்ள கலாசார வெளிப்பாடுகளையும் இக் கலேவலக் காவியம் கொண்டுள்ளது. அக்காலப் பின்லந்துமக்களின் முன்னேற்றமான வாழ்க்கை முறைகளைக் கலேவலக் காவியம் உணர்த்துகின்றது.

கலேவலப் பாடல்கள் நீண்டகாலமாக நாடோடிப் பாடல்களாகப் பின்லந்து மக்களால் பாடப்பட்டு வந்தன. இவற்றின் பயன் பாட்டை 19 ம் நூற்றாண்டில் பின்லந்து மருத்துவராகவும் பேராசிரியராகவும் இருந்த கொன்ரொத் அவர்கள் உணர்ந்தார். இவர் கால்நடையாக நீண்டதூரம் காடுகளுக்குள் சென்று இப்பாடல்களைத் தொகுத்தார். இவர் தொகுத்த பாடல்கள் 65,000. இவை இவரின் முனைவர் பட்டத்தின் ஆய்வுக்கு உரியதாக இருந்தன, இவர் இப் பாடல்களைக் கலேவலக் காவியம் என்னும் பெயரொடு கி.பி. 1835 ஆம் ஆண்டு வெளியிட்டார். இவரது அயராத உழைப்பினால் இந்நூல் உலகின் பழம் பெரும் காவியங்களுள் ஒன்றாக விளங்குகின்றது.

கொன்ரொத் அவர்களின் பின், பின்லந்தின் வாழ்ந்த ஜெயன் சிபெலியுஸ் என்பவர் கலேவலப் பாடல்களுக்கு இசை அமைத்து உதவினார். இதனால் இப்பாடல்கள் இப்போது பின்லந்து மக்களின் சிறந்த இசைப்பாடல்களாக உள்ளன. கலேவலப் பாடல்கள் பின்லந்து மக்களின் சிறந்த இசைப் பாடல்களாக உள்ளன. கலேவலப் பாடல்கள் பின்லந்து ஓவியர்களின் மன உணர்வுகளையும் ஊக்கத்தையும் வளர்த்தன. அதனால் அச்செவி கல்லேன் அவர்கள் இப்பாடல்களுக்குச் சிறந்த சுவர் ஓவியங்களை வரைந்துள்ளார்.

பின்லந்து சுதந்திரம் பெற்ற பின், பின்லந்து நாட்டின் இலக்கியமும் கலாசாரமும் பெரும் வளர்ச்சியை அடைந்தன. கலேவலப்பாடல்களின் பழம் பெரும் பண்பாட்டுப் பயன் பாடுகளை உணர்ந்த பின்லந்து அரசு ஆண்டுதோறும் பெப்ரவரி 28 ம் நாளைப் பின்லந்தின் தேசிய நாளாக வைத்துப் பெரும் விழா எடுத்து வருகிறது. பின்லந்து அரசின் நிதி உதவியோடு கலேவல காவியம் 29 உலக மொழிகளில் வெளிவந்துள்ளது. இப்போது இக்காவியம் தமிழிலும் வெளிவந்துள்ளது.

பின்லந்தின் தலைநகரான கெல்சிங்யில் உள்ள பல்கலைக் கழகத்தில் உள்ள ஆசிய ஆப்பிரிக்க திணைக் களமும் இலக்கிய மன்றமும் இணைந்து பின்லந்துக் கல்வி அமைச்சு நிதி உதவியோடு இக் கலேவலக் காவியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியைத் தொடங்கின. இம்மொழி பெயர்ப்புப் பணியை ஏற்றுச் செவ்வனே நிறைவு செய்தவர் கெல்சிங்கிப் பல்கலைக் கழகத்தில்

தமிழ்த்துறையில் பணியாற்றும் திரு.இரா. சிவலிங்கம் அவர்கள். இவர் இலங்கைத் தமிழறிஞர். இவர் இங்கு பல நாவல்களையும் சிறுகதைகளையும் உதயனன் என்னும் பெயரோடு எழுதிப் புகழ் பெற்றவர்.

இவர் பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பின்லந்தில் வாழ்ந்து பின்னிஷ் மொழியை நன்கு கற்றுள்ளார். தமிழ் இலக்கண இலக்கியங்களையும் நன்கு கற்று இவைகளில் மிக ஈடுபாடு உள்ளவர். பின்னிஷ் மொழியில் இருந்தே இத்தமிழ்க் கலேவலக் காவியத்தை ஆக்கியுள்ளார். பின்னிஷ், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் உள்ள இவரது ஆழமான அறிவும், நீண்ட அனுபவமும், உயர் ஆற்றலும் இக்கலேவலத் தமிழ்க் காவியம் மிகச் சிறப்பாக அமையக் காரணம் ஆயின. மூன்றாண்டுக் காலம் இக்காவிய ஆக்கத்துக்காக இவர் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளார். இக்காவிய ஆக்கம் அனைத்து வகையிலும் சிறப்பாக அமைந்து உலக மொழிபெயர்ப்பு ஆக்கங்களுள் சிறந்த ஒன்றாகவும், தமிழில் உள்ள பெருங் காப்பியங்களுள் ஒன்றாகவும் விளங்குகின்றது.

வடமொழியில் இருந்து இராமாயணக் காவியத்தைத் தமிழ்மொழியில் தந்த கவியரசர் கம்பர் செய்த பணிபோல இவர் பின்னிஷ் மொழியில் இருந்து தமிழ்க் கலேவல காவியத்தைத் தந்துள்ளார். சிறந்த எளிமையான உள்ளம் கவரும் வகையில் இக்காவியப் பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு படலத்திற்கும் விளக்கமும் குறிப்புகளும் இவர் எழுதியுள்ளார். இக் காவியத்தின் தொடக்கத்தில் பின்லந்து மக்கள், பின்னிஷ்மொழி, கலேவலக் காவியத் தோற்றம், இதன் பயன்பாடு ஆகியவை பற்றிய ஆய்வுக் குறிப்புகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் உள்ளன. காவியத்தின் பிற்பகுதியில் இக்காவியத்தில் வரும் பாத்திரங்கள், இடங்கள், பொருள்கள் பற்றிய அகராதியும், பின்னிஷ் மொழிகளுக்கான விளக்கக் குறிப்புகளும் உள்ளன. பின்லந்து தேசப்படமும் இக்காவியத்துக்காக 16 வர்ணப் படங்களும் 428 சிறு விளக்கப் படங்களும் இக்காவியத்தில் உள்ளன. பாடல் அடிகள் 22,795 பக்கங்கள் 480 இவை. அனைத்தும் இக்காவியத்திற்கு அணி செய்கின்றன.

இக்காவியம் கொங்கொங் நகரில் உள்ள ஆல்ரலேட் அச்சகத்தில் அழகாக அச்சிடப் பெற்றுள்ளது. பின்லந்து அரசு

இக்காவிய ஆக்கத்திற்கு எழு இலட்சம் ரூபா வழங்கியுள்ளது. ஒரு நூலின் சாதாரண பதிப்பு 400 ரூபா. சிறப்புப்பதிப்பு 500 ரூபா. பின்லந்தில் உள்ள பின்னிஷ் - இலங்கை நட்புறவுக் கழகம் பதிப்பாளரிடம் 100 பிரதிகளை விலையாகப் பெற்று இலங்கையில் உள்ள நூலகங்களுக்கு வழங்குவதற்காகக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளது. விற்பனை உரிமையைச் சென்னை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஏற்றுள்ளது.

பின்னிஷ் மொழி திராவிட மொழிக் குடும்பத்தில் நீண்ட தொடர்புள்ள இன மொழிகளுள் ஒன்று என ஒப்பியல் மொழியியல் அறிஞரான கால்டுவெல் அவர்களும், ஏனைய மொழி ஆய்வு அறிஞர்களும் தெரிவித்துள்ளனர். பின்லந்து மக்களும் திராவிடத் தொடர்புள்ளவர்களே என்பது ஆய்வாளர்களின் கருத்து ஆகவே கலேவலக் காவியத் தமிழ் ஆக்கம் பின்னிஷ், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும், இம்மொழிகளைப் பேணும் மக்களுக்கும் நெருங்கிய பண்பாட்டுத் தொடர்பை ஏற்படுத்தி உள்ளது. கலேவலத் தமிழ் காவியம் பின்னிஷ் கலேவல காவியத்தின் முப்பதாவது மொழி பெயர்ப்பு நூல் ஆகும். கலேவலத் தமிழ்க் காவிய அறிமுக சங்கம் ஏற்றுள்ளது. இந்தியா, இலங்கை நாடுகளுக்குத் தூதுவராக டெல்லியில் உள்ள பின்லந்துத் தூதுவரும் அவர் பாரியாரும் இவ்விழாவில் பங்கு பெற்றனர். இக்காவிய அன்பளிப்பு நூல்களையும் இலங்கை நூலகங்களுக்கு இவர்கள் வழங்கினர். இந்நிகழ்ச்சி இந்நாட்டின் வரலாற்றுச் சிறப்பு மிகு நிகழ்வுகளுள் ஒன்று எனலாம்.

இத்தமிழ்க் காவிய ஆக்கத்திற்கு நிதி உதவிய பின்லந்துக்கல்வி அமைச்சுக்கும் தமிழ் காவிய ஆக்கப்பணியை மேற்கொண்ட கெல்சிங்கிப் பல்கலைக்கழக ஆசிய ஆபிரிக்க திணைக்கள இலக்கிய மன்றத்திற்கும், இலங்கை நூலகங்களுக்கும் 100 பிரதிகளை அன்பளிப்பாக உதவிய பின்னிஷ் - இலங்கை நட்புறவுக் கழகத்திற்கும் நூலாசிரியர் திரு.க. சிவலிங்கம் அவர்களுக்கும், இக்காவிய அறிமுகவிழாவில் பங்குபற்றி நூல்களை நூலகங்களுக்கு வழங்கிய அதிமாண்புமிகு பின்லந்து தூதுவருக்கும் அவரது பாரியாருக்கும் இந்நாட்டு மக்கள் பாராட்டும் நன்றியும் மக்கள் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கும் கடமைப்பாடு உடையர். பின்னிஷ் இலங்கை நட்புறவு வளர்க.

சித்தர் எண்ணியர்

திரு.மு.ஈசுவரன், பெங்களூர்

சித்தமருத்துவம்

இங்கண் 'சித்த'மும் 'துவ'மும் செந்தமிழுடன் தொடர்பேதுமற்ற வட சொற்களேயாகும்.

'சித்' எனும் சமசுகிருத அடிச்சொல்லினிற்கு எண்ணம் (Thought), அகத்திறன் (Mental Power) அறிவு (Intelect) ஓட்பம் (Wisdom) எனப் பற்பொருள்ளன.

சித்தபதி	எண்ணமுடையோன்,
சித்சுவரூபம்	தூய எண்ணம் (Pure Thought)
சித்தசவுரா	உள்ளக்களவாளி (Heart-thief)
சித்தஜா	உள்ளத்தில் பிறந்தவன் (ள்) (Heart-born)
சித்தஞா	உள்ளமறிந்தவன் (Knower of the heart)
சித்ததாரா	எண்ண ஒழுக்கு (Flow of thought)
சித்தனாத	எண்ணத்தலைவன், எண்ணத்தில் புகுந்தவன்
சித்த நாச	எண்ணமிழப்பு எண்ணக்கேடு (loss of conscience)
சித்த நிர்விர்த்தி	எண்ணநிரைவு (contention of mind)
சித்தபவ	உள்ளுறை (பவை) being in the thought
சித்தபேத	எண்ணவிலகல்/வேறுபாடு (Contrierty of will
சித்தபிரமா (பிராந்தி)	எண்ணத்தெளிவின்மை/மருட்சி
சித்தவிகார	எண்ணக்கலக்கம் (disturbance of mind)
சித்தவிக்ஷேப	எண்ணமின்மை (absense of mind)
சித்த வினாசன	எண்ணமழிப்பு (destroy consiousness)
சித்த விப்லவ	எண்ணப்பிளவு
சித்தவிருத்தி	எண்ணநிலை எண்ணவிரிவு/வளர்ச்சி
சித்தானுபோத	எண்ணக்கற்பு (instruction of mind)
சித்தாசங்க	எண்ணச்சேர்க்கை
சித்தாசுக	உளநோய்
சித்தசாந்தி	உளவமைதி (composedness of mind)
சித்தாந்தம்	எண்ணீறு (End of thought)
சத்-சித்-ஆனந்தம்	உண்மை - உள்ளம் - உவப்பு

சித்தம், சித்து, சித்தர், சிந்தனை என்பனவெல்லாம் தமிழில் வழங்கி வருவது வட சொல் இரவல்களே யன்றி வேறல்ல. தனித்தமிழில் இவற்றிற்கான நேர் சொற்கள் பலவிருந்தும் அவை பயன்பாட்டிற்கு வராமல் போனதற்கும் அவ்வாரிய பண்பாட்டு படையெடுப்பே வயணம். 'அறிவோர்' 'எண்ணியர்', 'உளவாளர்' 'உள்ளுணர்ந்தோர்' உளமறிந்தோர் என்று மிகப்பல தமிழ்ச் சொற்களைக் கையாள இயலும்.

'மருந்துடன்' இணைக்கப்பட்டுள்ள 'துவ'(ம்) கூட வட சொல்லன்றோ!

மகத்துவம், கிருத்துவம் - இந்துத்துவம் - தத்துவம் என்ற சொற்களில் உள்ள துவ(Tua) என்ற விகுதி இன்றைக்கும் கிரேக்கத்தில் தோய் (Toi), இலத்தினில் து (Tu), ஆங்கிலத்தில் தம் (Dom) [எ.க. Kingdom, freedom எனவே உள்ளன]

மருந்து எனும் தனித்தமிழ்ச் சொல்லுடன் இணைந்துள்ள 'துவம்'த்தினை அருந்தமிழ் விகுதியான 'மை' எனும் ஓரொலி எழுத்தொன்றே பகர்த்தி எடுத்து 'மருத்துமை' என செந்தமிழ்ச் சொல்லாட்சி நடாத்திடுமே.

சித்தார்த்தன் = எண்ணப் பொருளோன்

இன்னிலை கூறும் பொருளியல்

பா.சிவநேசன் எம்.ஏ., எம்ஃபில், பி.எட், தருமபுரம்.

பொருள் உலகியல் வாழ்விற்கு அடிப்படையான ஒன்று. ஒருவரிடத்துப் பொருளில்லையேல், அவர் ஒரு பொருட்டாகக் கருதப்படார். அஃதாவது, அவருக்கு இவ்வுலகில் செல்வாக்குக் குறைவு. இதனை வள்ளுவர் 'பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லை' என்றார். வீட்டுலகினைப் பெற விரும்புவார்க்கு இதன் கண் பற்று கூடாது. ஆனால் இவ்வுலக வாழ்விற்கு இதுதேவை. எனவேதான் வள்ளுவரும் 'செய்க பொருளை' என்றார். கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இன்னிலையும் இதனைப் போற்றுகின்றது. இந்நூல் அறப்பால், பொருட்பால், வீட்டுப்பால் எனும் நான்கு பிரிவினையுடையது. இதன் ஆசிரியர் பெயர் அறிதற்கில்லை.[1] இந்நூலுக்கு வ.உ.சி. அவர்கள் எழுதிய உரை ஒன்று உள்ளது. செய்யுட்தொகை நாற்பத்தைந்தில் ஒன்பது பாடல்களில் பொருளியல் பற்றிய செய்திகள் பேசப் படுகின்றன. அவற்றை ஈண்டுக் காண்போம்.

1. ஏதுக்கள்

ஒரு செயலைச் செய்யத் தொடங்குங்கால், அதற்குரிய ஏதுக்களை ஆராய வேண்டும். ஏதுக்கள் மிகுதியாக இருப்பின், அச்செயலில் விரைவுகாட்டப் பெறும். பொருளைச் சேர்த்தற்குப் பல்வேறு ஏதுக்கள் உண்டு. அவற்றை இந்நூல் காட்டி, மக்களைப் பொருள் சேர்க்குமாறு ஆற்றுப்படுத்துகின்றது. அவ்வேதுக்கள் இருபால்தரும், ஊரெல்லாம் சுற்றம், மெய்யா அளிப்பன நான்கு, ஈட்டும் நெறி தேரான் நிலை எனும் தலைப்புகளில் இங்குத்தரப்படுகின்றன.

1 –1. இருபால்தரும்

உலகில் சிறப்பாகக் கருதப்படும் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்காம். அவற்றுள் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றும் எளிதில் பெறப்படுவன. இம்மூன்றில் நடுவணதாக உள்ள பொருளைப் பெறின், ஏனைய இரண்டும் ஒருங்கே கைகூடிவிடும். இதனை,

> **ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்**
> **ஏனை இரண்டும் ஒருங்கு** (760)

எனத் திருக்குறளும்,

1. பொய்கையார் எனும் குறிப்பும் உள்ளது.
பாலூர் கண்ணப்ப முதலியார். தமிழ்நூல் வரலாறு.

> **வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்**
> **நடுவணது எய்தல் இருதலையும் எய்தும்** (114)

என நாலடியாரும் கூறியிருத்தலான் அறியலாம். இன்னிலையும் பொருளே அறம், இன்ப மேனும் இரண்டையும் தரவல்லது என்று கூறுகிறது. மேலும், வீரர்கையில் உள்ள வாள் இருபக்கமும் செல்லுதல் போன்று, பொருளும் அறம், இன்பமெனும் இரண்டிடத்தும் செல்லவல்லது என்றும் கூறுகின்றது.

> **உடைமை.................... கண்ணீர்**
> **இருபாலும் தோன்றன்ன ஈர்க்கலார் போழ்வாள்**
> **இருபால் இயங்கலினோடு ஒப்பு** (11)

என்பது அக்கருத்தமைந்த பாடலாகும். இருபாலும் தரக்கூடிய பொருளை வீரர் வாளோடு ஒப்பிட்டிருக்கும் பாங்கு அருமையுடையதாகும்.

1–2. ஊரெல்லாம் சுற்றம்

பொருளே, 'உறுதிப்பொருள்' எனும் மயக்கத்தைக் கொடுக்கவல்லது. எனவே, பொருளுடையாரை உலகத்தவர் சிறப்புச் செய்வது இயல்பு. ஒருவர் பொருளுடையவராகச் செல்லின், சென்றவிடத்து மக்களெல்லாம் சுற்றமாகிவிடுவர். அதுஇல்லாமல் செல்லின் இகழ்வது இயற்கை. இது மாறாத்தன்மையது. இதனை,

> **'உடைமையராச் சென்றக்கால் ஊரெல்லாம் சுற்றம்'** (12)

என இன்னிலை கூறும். இவ்விடத்து,

> **- தம்கைத்து**
> **உடையார்க்கும் எவ்வூரும் ஊர்** (84)

எனும் நான் மணிக்கடிகைப் பகுதி ஒப்பு நோக்கத்தக்கது.

1–3 மெய்யா அளிப்பன நான்கு

பொருளானது உண்மையாக வழங்கக்கூடியன நான்காம். அவை உடலோடு இணைந்தன இரண்டு. உணர்வோடு இணைந்தன இரண்டு. உடல்வலியும், வாழ்நாளும் முன்னையவை. பின்னையவை செல்வாக்கும், நல்லொழுக்கமுமாகும். இக்கருத்து,

> **மெய்வலியும் சென்னிலையும் வாழ்நாளும் தூவொழுக்கும்**
> **மெய்யா அளிக்கும் வெறுக்கை** (14)

எனும் இன்னிலையினாலேயே அறியப்படும்,

1-4. ஈட்டும் நெறிதேரான் நிலை

கிளரொளி இளமை கெடுவதன் முன்னர் ஆற்றவேண்டுவனற்றைப் போற்றுதல் வேண்டும். அவற்றுள் பொருளாக்கமும் ஒன்று. பொருளை இளமைக்காலத்தே தேடிட வேண்டும். இல்லையேல் மக்களிடத்து மதிப்பு இராது. (15). சுற்றமும் வேறுபட்டு நிற்கும். (14). அக்காலத்தே தேடின், முதுமையில் எச்சங்களை எண்ணி வருந்த வேண்டுவதில்லை. (18). என்பனபோன்றவற்றையும் இந்நூல் குறித்துச் செல்கின்றது.

பொருளே பொருளாகி நின்று, கூரைச் சுற்றமாக்கிச் சிலவற்றை உண்மையாக அளிக்க வல்லதாதலால், இவ்வேதுக்களை மனதிற்கொண்டு 'பொருளைத் தேடுக' என்று ஆற்றுப்படுத்துகின்றது இந்நூல். இனிச் சிறப்பான கோட்பாடுகளை ஆராய்வோம்.

2. மாண்பொருளே அருஞ்செவிலி

பொருள் ஒருவனிடத்து அறவுணர்வை ஏற்படுத்துமென்று முன்னரே கண்டோம். மக்கள் அறப்பயன் கைகூடிய நிலையில் ஒழுகி, ஒருகால எல்லையில் வீட்டுலகினை அடைவர். இவ்வருமைப்பாட்டிற்கு அடிப் படையானது பொருளாகும். எனவே, இப்பொருள் செவிலியோடு ஒப்புமைப்படுத்த வல்லதாம். அஃதாவது செவிலியானவள் தலைவியினிடத்து நற்பண்புகளை வளர்த்து இல்லறம் படுத்துவது போன்று, பொருளும் சென்றவனிடத்து அறவுணர்வைத் தூண்டி வீட்டுலகம் புகச் செய்தலின், இவ்வாறு ஒப்பிடுதல் சாலப்பொருந்துவதாகும். இவ்வருமை வாய்ந்த கருத்து,

> மண்நீர் உடையார் வழங்கிச் சிறுகாலைத்
> தண்ணீரார் சாரும் நிலஞ்சார்வர் உண்ணீர்
> அறியின் அருஞ்செவிலி மாண்பொருளே (13)

எனும்பாடலில் அமைந்துள்ளது. இது,

> அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
> செல்வச் செவிலியால் உண்டு (757)

எனும் திருக்குறளை ஏற்றமைந்ததாகும். இவ்வமைப்பு மகிழ்தற்குரியதாக உள்ளது.

(தொடரும்)

Vol. LXX (70) 1995 - 96

"செந்தமிழ்ச் செல்வி"

திங்கள் வெளியீடு

*

எழுபதாவது சிலம்பு

திருவள்ளுவர் ஆண்டு 2026 - 2027

*

தென்னிந்திய தமிழ்ச் சங்கம்

79, பிரகாசம் சாலை (பிராடுவே),

சென்னை - 600 108.

“செந்தமிழ்ச் செல்வி”

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

1. பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்
2. முனைவர் தமிழண்ணல்
3. முனைவர் பொன். கோதண்டராமன்
4. முனைவர் க. ப. அறவாணன்
5. முனைவர் கு. சுந்தரமூர்த்தி
6. பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
7. கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
8. முனைவர் வீ. ப. கா. சுந்தரம், தமிழியற்புலம்.

நிறுவனர் : தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை
ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.

உள்ளுறை

அகர முதலும் ஆதிபகவனும்
- க. கணேசலிங்கம் — பக். 253

அகல் விளக்கே அழலாமா ?
- டாக்டர் . ஆலந்தூர் கோ. மோகனரங்கம் — பக். 38

ஆதிபகவனா - ஆதி பகலனா?
- பேரா. ஆ. சிவலிங்கனார் — பக். 71

‘இத்தை விளைவித்தல் மலம்’
- முனைவர் கோ.ந. முத்துக்குமாரசுவாமி — பக். 324

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற
இருபத்தேழாம் கருத்தரங்க அறிவிப்பு. — பக். 79

இ.மு. சுப்பிரமணிய பிள்ளை
நூற்றாண்டு விழா. — பக்.401

இரண்டாம் வீரநாய்க்கரின் தமிழ் உரை நடை (18 நூ)
ஓர்சேமா. கோபால கிருஷ்ணன் (பிரான்சு) — பக். 104, 154, 165, 205

இருண்ட கண்டத்தில் அருந்தமிழ்ப் பணி — பக். 161

இருந்தமிழ் நாட்டின் இன்றைய இழிநிலை
- பேரா. தெ.முருகசாமி — பக்.278

இலக்கியக் கல்வியின் எதிர்காலம்
- முனைவர். கி.இராசா — பக். 64

இலக்கியக் கல்வியின் நிகழ்நிலைத் தொடர்பு
- டாக்டர். பொற்கோ — பக். 124

இறவாப்பெருநெறி — பக். 201

இளம் பூரணர் உரைவழு
-முனைவர். இரா. இராசகோபாலன் — பக். 263

இன்றைய இலக்கியம், திறனாய்வு
- சில குறிப்புக்கள்
- முனைவர். சொ. சிங்காரவேலன் — பக். 3

இன்னிலை கூறும் பொருளியல்
- பா. சிவநேசன், தருமபுரம் — பக். 470

உயரிய வாழ்வுக்கு வழியமைப்பாய்!
- கவிஞர். எஸ். சங்கரநாராயணன் — பக். 357

உலகந்தேடும் தமிழ் : நமது தலைமுறைக் கடமைகள்
- டாக்டர். கி.நாச்சி முத்து — பக்.193

எண்பதிலும் இளமை — பக். 441

“எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்”
- தெ. முருகசாமி
ஆ. சிவலிங்கனார் — பக். 225, 146

"எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான்"
ஒரு புதிய சிந்தனை
- டாக்டர். சொ. சிங்காரவேலன் பக். 74, 146

ஏற்றமிகு எழுபது பக். 1

ஒன்றாக நல்லது கொல்லாமை
- க.சி. அகமுடைநம்பி பக். 114

ஃ ஆய்தம் பெற்ற பெரு வாழ்வு
- க.மா. வீரணன் பக். 341

க(அ)ம்பர்ச் சிலம்பி
- பா.சிவநேசன் பக். 352

கண்ணகியின் நிழல்
- முனைவர்.மலையமான் பக்.414

கலித்தொகை நாடகத்திறன்
- டாக்டர். இரா. இராசகோபாலன் பக். 429

கலைஞரே, முதல்வரே வருக!
- கவிஞர். எஸ். சங்கரநாராயணன் பக். 382

காந்தி நேரு இன்றிருந்தால் . . . . . ?
- எஸ். சங்கரநாராயணன் பக். 62

காமுண்டன்
- இரா.ஜெகதீசன் பக்.92

"கானல் வரி" பெயர்ப் பொருத்தம்
- பேரா. தெ.முருகசாமி பக்.45

குழந்தை இலக்கிய நாவல்களில் மதிப்புகள்
- சா. இரகுராமன் பக். 8

கேட்ட தாய்
- பேரா. ஆ. சிவலிங்கனார் பக். 306

கொடிய காலம்
- முத்தமிழ்க் கவிஞர் டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் பக். 277

கோகிலாம்பாள் கடிதங்கள் திறனாய்வு
- இலக்கணப்புலவர். த. சரவணத்தமிழன் பக். 302

சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையான் (ஆண்டாள்)
- தி. இராசமாணிக்கம் பக். 26

சம்பந்தர் பாடல்களில் இயற்கை
- டாக்டர். சரளா இராசகோபாலன் பக். 311, 354

சித்தர் எண்ணியர்
- திரு. மு. ஈசுவரன், பெங்களூர் பக். 468

சிந்தனைப் புரட்சி எழவேண்டும்
- கவிஞர் எஸ். சங்கரநாராயணன் பக். 463

சிவஞான போதம் மங்கல வாழ்த்து உரை
- பேரா. ஆ. சிவலிங்கனார் பக். 32

சிறப்புற வளர்க - செந்தமிழ்ச் செல்வி!
- மழலைக் கவிமாமணி மயிலை முத்தெழிலன் பக். 113

சிறு சொல்
- முனைவர் மலையமான் பக். 272

'சிற்றிலக்கிய வகைகளில் இராமாயணம்'
- பா. சிவநேசன் பக். 88

செஞ்சொற்கவிக் கொண்டல்
- டாக்டர். சொ. சிங்காரவேன் மறைவு பக். 109

செந்தமிழ் ஞாயிறு
பேரா. டாக்டர். ந. சேதுரகுநாதன் மறைவு
- இரா. நடராசன் பக். 318

சைவமும் கலைகளும்
- முனைவர். க.ப. அறவாணன் பக். 51

சொல்லின் செல்வரின் நூற்றாண்டு விழா பக். 241

டாக்டர். அ. கதிரேசன் நூல்கள் வெளியீட்டு விழா பக். 37

டாக்டர். ஆ. வேலுப்பிள்ளைக்கு ஸ்வீடன்
பல்கலைக் கழகம் சிறப்பு முனைவர் பட்டம்
- இ. நாச்சிமுத்து பக். 383

தமிழக அரசியல்- அன்றும் இன்றும் இனியும்
- தெ. முருகசாமி பக். 347

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் பக். 361

தமிழகத்தில் சில புதிய முயற்சிகள் பக். 81

தமிழக வேதாகமக் கல்லூரி பக். 281

தமிழில் இடிபஸ் தொன்மம்
- சு. சந்திரா. பக். 169,209

தமிழீழம் பக். 121

தமிழை உரிய தளங்களில் நிறுத்த............
- முனைவர் க.ப. அறவாணன் பக். 127

தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புறச் சாயல்கள்
- மு. இளங்கோவன் பக். 174, 216

தமிழ் இலக்கியம் காட்டும் நட்பும்
புலம் பெயர்ந்த தமிழர்களும்
- திரு. அழகப்பா ராம்மோகன் பக். 266, 292

தமிழ்க்கடல் சொ.சி.
- சொ.ச. செந்திலாண்டவன் பக். 276

தமிழ்க் கடவுள்
- தி. இராசமாணிக்கம் பக். 180

தமிழ்ச் சேதுப்பிள்ளை
- வே. இரா. சிவஞான வள்ளல் பக். 385

தமிழ்த்தூண் தாமோதரனார்
- பேரா.கு.அரசேந்திரன் பக். 421, 451

தமிழ் நாகர் - ஓர் ஆய்வு
- புலவர்.க.மா. வீரணன் பக். 369, 419, 461

தமிழ் வரவு
- தெ.முருகசாமி பக். 418

தலைவ, நீ வாழ்க!
- க. கணேசலிங்கம் பக். 458

தலித் எனும் சொல் எதற்கு?
- டாக்டர். தே. ஞானசேகரன் பக். 139

தனித்தமிழ் காத்தவர்
-வே. இரா. சிவஞான வள்ளல் பக். 301

திரு. என். சி. நாயுடு மறைவு பக். 285

திருக்குறளில் சிவாகமக் குறிப்பு
- தெ. முருகசாமி பக். 138

திருக்குறளில் பெண்கள்
-க.சி. அகமுடை நம்பி பக். 330

திருநேரிசை - இது பண்ணா?
- முனைவர் வீ. ப. கா. சுந்தரம் பக். 459

தினந்தோறும் கவிதை!
- முத்தமிழ்க் கவிஞர் டாக்டர். ஆலந்தூர் கோ. மோகனரங்கன் பக். 364

தீரர்கள் நாம் எனக் காட்டிடணும்
-எஸ். சங்கரநாராயணன் பக். 235

தேயாத முழு நிலவாய்.....
- கவிச்சுடர் புதுமைக்கோமான் பக். 31

தொல்காப்பியர் நோக்கில்
'ஒன்பது' என்பது ஒரு தனிச்சொல்
- அரங்க சீனிவாசன் பக். 366

நாக்கு மரம்!
- முத்தமிழ்க் கவிஞர் டாக்டர். ஆலந்தூர். கோ. மோகனரங்கன் பக். 148

நாட்டுப்புறச் சிறுவர் பாடல்களும்
- இளைஞர் இலக்கியமும் - ஒரு பார்வை
- ஜி. வசந்தா பக். 336

நூல் மதிப்புரை பக். 77, 358, 399, 439

பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேராசிரியருக்கு அமெரிக்கத் தமிழ்ச் சங்கக் கூட்டமைப்பின் பரிசும் பாராட்டும் பக். 76

பாவலரேறு தமிழ்க்களம் பக். 185

பாவேந்தர் நினைவுகள்
- டாக்டர். மு.துரைசாமி, மலேசியா. பக். 110, 135, 186, 224, 262, 449

"பாவேந்தர் பாத்தடம்"
- பேரா. தெ.முருகசாமி பக். 299

பிச்சாடனமூர்த்தி
- தி. இராசமாணிக்கம் பக். 83, 150

பின்லாந்து தேசிய காவியம் : கலேவல
- கே. கந்தசாமி, கொழும்புத் தமிழ்ச் சங்கம் பக். 464

பொங்குகவே பொங்கல் நன்றாய்
- பாவலர். கருமலைத்தமிழாழன் பக். 192

பொதுத் தேர்தல் பக். 321

பொற்காலம் வருக
- மு. இளங்கோவன் பக்.60

மங்காத் தமிழ் வளர்த்த
- மாத்தமிழர் ம.பொ.சி. பக். 41

மண்ணின் மைந்தர்
- பெரு. தமிழ் வேந்தன் பக். 137

மரபிலக்கணப் பயிற்சியின் இன்றியமையாமை
- பேரா. ஆ. சிவலிங்கனார் பக். 228

மறைமலையடிகளும் இயற்கையும்
- டாக்டர். கோமதி சூரிய மூர்த்தி பக். 95

மாணிக்கவாசகர் காலத்தில் ஆசீவகர்
- பேரா. ஆ. சிவலிங்கனார் பக். 436, 446

மாமண்டூர் நரசமங்கலம் குடைவரைகள்
- டாக்டர். இரா. கலைக்கோவன் பக். 12

மாற்றம் இல்லையா தமிழா?
- செ.ப. இளவாணன் பக். 63

முதல் திருக்குறள் மருத்துவ அறிவியல் மாநாடு பக். 158

"முதல்வருக்கு நன்றி சொல்வோம்"
- மு. முத்துவேல் பக். 398

வகையறியாமல் வாடி நிற்பதேன்?
- கவிஞர். செ.ப. இளவாணன் பக். 310

வள்ளுவர் ஆளும் வர்க்கத்தை ஆதரித்த புலவரா?
- பா. வீரமணி. பக். 236, 247, 286

வாழ நினைக்காதவன் இவன்!
- கவிஞர்.செ.ப. இளவாணன் பக்.112

விகுதியின் பிறப்பு - ஒரு புதிய கருத்து
- முனைவர் மலையமான் பக். 188

விடுதலை இயக்கத்தில் சுப்பிரமணிய பாரதியும் சுப்புரத்தினப் பாவலரும்
-புதுவை.சிவ. இளங்கோ பக். 386, 405

* * *

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்)	10 00
திரு. முருக விசாகநம்பி அவர்கள்	5 00
தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்	5 00
திரு. த. ஆறுமுகம் அவர்கள், சென்னை – 79.	5 00
தவத்திரு. ஈசுவரனார் அவர்கள்	5 00
திரு. வேணுகோபால் அவர்கள் சாந்தி திரையங்கம், சென்னை – 2.	25 00
திருவருட்டிரு . சக்தி ஐயா மா. செல்வராசு அவர்கள் சேலையூர், தாம்பரம்.	101 00
செல்வி பா. சங்கரி , எம். ஏ., பொன்னேரி	51 00
திரு. முனைவர் மு.ச. சிவம், ஈரோடு	10 00
தாமரைச் செல்வி D/o. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18.	10 00
முத்துமணி D/o. திரு. பொ. பாலசுப்பிரமணியம், சென்னை – 18.	10 00
டாக்டர் பூவண்ணன், கோவை – 11	10 00

மறைமலையடிகள் கலைமன்ற வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்)	10 00
தவத்திரு. ஈசுவரனார் அவர்கள்	5 00
ஜெயா தங்கமாளிகை, பல்லாவரம், வழிபாட்டுச் செலவு	25 00

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை – 108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிட்டப்பெற்றது.

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிப்.

218705

முத்தமிழ்ச் செம்மல்

டாக்டர் புரட்சிதாசன் எம்.ஏ.,

இயற்றிய

தமிழிசைக்களஞ்சியம்

விலை : ரூ. 500-00

தொல்காப்பிய மெய்ப்பாட்டு நளிநயம், சிலப்பதிகாரக் கூத்திசை; ஆய, வட்ட சதுர, முக்கோண, பஞ்சமரபுத் தாள, லய நாட்டிய, முத்திரைகள், கருணாமிருத சாகர சுரவிளக்கம்; யாழ்நூல் நரம்புக் கருவிகள்; சேக்கிழார், ஆழ்வார் சிவனியமாலிய தேவார திருவாசக, நிகண்டு மேற்கோள் வரைபடத்துடன் கூடிய அறிவியல் இலக்கிய இலக்கணப் படிப்பினைத் திரட்டு.

பாண்டியன் பாசறை,
17, வடக்கு போக் சாலை,
தியாகராய நகர், சென்னை-17

Regn. No. G/17/ M/4899
Licence No. TN/MS/WPP/30

கழகப் புதிய வெளியீடுகள்

மாமனிதர் மண்டேலா - இராம்குமார்	75 00
நினைவுத் திரைகள் (என் வரலாறு) - கா. பொ. இரத்தினம்	60 00
திருவாசகம் தெளிவுரை - ப. இராமநாத பிள்ளை	75 00
மருத்துவத் தமிழ் முன்னோடி - டாக்டர் கிறீன் - அம்பி	35 00
இதயமும் இதய நோய்களும் - தமிழம் பன்னீர்செல்வம்	அச்சில்
திருமுருகன் அந்தாதி - ம. அரங்கநாதன்	5 00
நெல்லை மாவட்டச் சித்தர்கள் - சக்தி பி. சுப்பிரமணியம்	40 00
மானிட உடல் இயக்கவியல் - டாக்டர் கதிரேசன்	35 00
மருத்துவத் தமிழ்க் களஞ்சியம் - டாக்டர் கதிரேசன்	35 00
ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும் - சு. ந. சொக்கலிங்கம்	45-00
விண்வெளிப் பயணம் - டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்	35-00
நமது உடல் - டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்	30 00
முல்லாவின் கதைகள் முப்பது - புலவர் இரா. இளங்குமரன்	18 00
பூமியின் கதை - என். கே. வேலன்	22 00
வங்காளப் பழமொழிகள் - டாக்டர் கொ. முத்தையா	25 00
புதையல் வீடு - டாக்டர் பூவண்ணன்	30 00
அறிவியல் ஆராய்ச்சிகள் - என். குழந்தை, பி.ஏ.	20 00
விஞ்ஞான முன்னோடிகள் - என். குழந்தை, பி.ஏ.	45 00

அப்பர் அச்சகம், சென்னை-108.